REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒகஸ்ட் 14 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 191 | Monday 14, August, 2023 | 20பக்கங்கள் | 50/-

## பிரபல தனியார் வைத்தியசாலையில் பல கோடி ரூபா பாரிய பணமோசடி

### சீ.ஐ.டி விசாரணை ஆரம்பம்



கொழும்பிலுள்ள பிரதான தனியார் வைத்தியசாலையொன்றில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பல கோடி ரூபா பண மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசேட பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 06

ஆரம்ப நடவடிக்கைகளுக்காக 450 மில். ரூபா கையளிப்பு;

## இந்திய உதவியுடன் அறிமுகமாகும் புதிய டிஜிட்டல் அடையாள அட்டை

### இந்திய நிறுவனத்துடன் ஒக்டோபர் மாதம் ஒப்பந்தம் கைச்சாத்து



இந்தியாவின் உதவியுடன் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்படும் புதிய டிஜிட்டல் அடையாள அட்டை (Sri Lanka Unique Digital Identity) தயாரிக்கும் நிறுவனத்துடன் 06

அடுத்த வருட வரவு – செலவு யோசனை தயாரிப்பில்

## அரச நிறுவனங்களின் செலவினங்கள் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்

### அதிகாரிகளுக்கு திறைசேரியின் செயலாளர் பணிப்புரை

லோரன்ஸ் செல்வநாயகம்



அடுத்த வருடத்திற்கான அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்ட யோசனையை தயாரிக்கும் போது அனைத்து அரச நிறுவனங்களின் செலவினங்களையும் 06

## எதிர்காலத்தில் O/L பரீட்சையை பத்தாவது தரத்தில் நடாத்த ஆராய்வு

### கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை எதிர்காலத்தில் பத்தாம் தரத்தில் நடத்துவது தொடர்பில் ஆராயப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இதனூடாக ஒரு வருடத்துக்கு முன்னதாகவே மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் வாய்ப்பை பெறவுள்ளனர். 06

# வெளிநாடுகளில் தொழில் புரிவோருக்கு புதிய வீடுகள்



- ★ சொந்த நிலத்தில்; நகருக்கு வெளியே; தொடர்மாடி குடியிருப்பு திட்டம் என வகைப்படுத்தல்
- ★ வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக நிதியுதவியுடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் நிர்மாணிக்க அமைச்சர்கள் மனுஷ நாணயக்கார மற்றும் பிரசன்ன ரணதுங்கவினால் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்க ஏற்பாடு





தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இணைந்து மேற்கொள்ளப்படுகின்றது. 03 முறைகள் மூலம் இந்த வீடுகளை நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகிறது. முதல் முறை சொந்த நிலத்தில் வீடு கட்டுவதாகும். இரண்டாவது, நகரத்துக்கு வெளியே அவர்கள் விரும்பும் பகுதியில் காணியற்றவர்களுக்கு வீடுகள் கட்டுவதாகும். மூன்றாவது முறை அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டுவதென தெரிவிக்கப்படுகின்றது. இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நிதியுதவி வழங்குவதுடன், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான கூட்டு அமைச்சரவை பத்திரம் பொறுப்பு அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரால் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 06

## கடந்த கால துரதிஷ்டவசமான நிலை மீண்டும் வர ஒருபோதும் இடமில்லை

### எதிர்கால சந்ததிவரை அதனை கொண்டு செல்ல மாட்டோம்



நாடும் மக்களும் கடந்த காலங்களில் எதிர்கொண்ட துரதிஷ்டவசமான யுகத்துக்கு எதிர்கால சந்ததியினர் முகம் கொடுக்காத வகையில், 06



03

### GCE (A/L) பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதிக்குள் வெளிவரும்

வெளியானதாக பரப்பப்படும் செய்திகள் பொய்

## செவிப்புலனற்றோருக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் திட்டம்

### அமைச்சர் பந்துலவினால் குருநாகலில் ஆரம்பித்து வைப்பு



செவிப்புலனற்றோருக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போக்குவரத்து, 06

## "மாதிவெல" MP மாருக்கான வீட்டுத் திட்டத்தில் புதிய கட்டுப்பாடுகள்

### MP அல்லது குடும்ப அங்கத்தவர்களே குடியிருக்க அனுமதி



பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மாதிவெல வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடுகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவரது குடும்ப உறவினர்கள் மாத்திரமே பயன்படுத்த முடியுமென பாராளுமன்ற உறுப்பினர்கள் சேவைப் பிரிவு அறிவித்துள்ளது. மாதிவெல வீடமைப்பு திட்டத்தில் சில வீடுகளில் வெளிநபர்கள் தங்கி 06

## "செப்டிசிடைம்" தடுப்பூசி பாவனையிலிருந்து நீக்கமா?

### நிபுணர்களின் அறிக்கை கிடைத்ததுமே தீர்மானம்

கம்பஹா வைத்தியசாலையில் மருந்து ஒவ்வாமை காரணமாக உயிரிழந்த நோயாளிக்கு செலுத்தப்பட்ட செப்டிசிடைம் எனும் தடுப்பூசியை பாவனையிலிருந்து நீக்குவது தொடர்பில் நிபுணர்களின் அறிக்கை கிடைத்த பின்னர் தீர்மானிக்கப்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் உடனடி அறிக்கையை வழங்குமாறு தொடர்புடைய அதிகாரிகளுக்கு பணிப்புரை 06

நாட்டில் வரட்சி உச்ச கட்டத்தில்

## கடும் நெருக்கடியிலும் தடையின்றி மின்சாரத்தை வழங்க நடவடிக்கை

### இலங்கை மின்சார சபை தெரிவிப்பு

வரட்சியான காலநிலை நிலவுகின்ற போதிலும் தடையின்றி தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. தொடர் மின்சாரத்தை வழங்குவதற்கு ஏற்கனவே ஏற்பாடுகள் 06

## பாகிஸ்தான் இடைக்கால பிரதமராக அன்வர் உல் ஹக்



பாகிஸ்தானின் இடைக்காலப் பிரதமராக (Balochistan) பலுசிஸ்தான் அவாமி கட்சியை சேர்ந்த அன்வர் உல்ஹக் கக்காரை (AnwarulHaq Kakar) பாகிஸ்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்துள்ளனர். பாகிஸ்தானின் 15 ஆவது பாராளுமன்றம் கடந்த 2018 06

பத்தனை சந்தியில் அதிகாலை கோர விபத்து

## எரிபொருள் பௌசருடன் கார் நேருக்கு நேர் மோதி விபத்து

### காரில் பயணித்த ஐந்து பேர் படுகாயம்

ஹற்றன் சுழற்சி நிருபர்



எரிபொருள் ஏற்றிச்சென்ற பௌசரும், காரொன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 06



03

### 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்த விடமாட்டோம்

உதய கம்மன்பில MP போர்க்கொடி



03

பொதுப்போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும்

### வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு விரைவில் அனுமதி

## வடக்கில் டெங்கின் தாக்கம் அதிகரிப்பு

### இன்று முதல் 07 நாட்களுக்கு தடுப்பு நடவடிக்கை



வடமாகாணத்தில் இன்று 14 ஆம் திகதி முதல் 07 நாட்களுக்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் 06

அமெரிக்காவில் பயிலும் 17 வயது

## இலங்கை மாணவியின் நற்செயலுக்கு பாராட்டு



பண்டாரவளை பிரதேசத்திலுள்ள 05 பாடசாலைகளுக்கு, அமெரிக்க பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் இலங்கை மாணவி ஒருவர் மடிக்கணினி மற்றும் புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இலங்கை மாணவர்கள் பொருளாதாரச் சிரமங்களினால் கல்விச் 06

அநுராதபுரத்துக்கும் மிஹிந்தலைக்குமிடையில்

## இரட்டை ரயில் பாதை அமைக்க திட்டம்



அநுராதபுரத்துக்கும் மிஹிந்தலைக்குமிடையில் இரட்டை ரயில் பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொருட்களை கொண்டு செல்வதற்கான வாய்ப்புகளை வழங்கும் வகையில் இந்த புதிய பாதை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் 06

## 110 வயதில் பாடசாலை செல்லும் மூதாட்டி

### சவூதியில் பலரையும் கவர்ந்த செய்தி



சவூதி பெண் ஒருவர் தனது 110ஆவது வயதில் கல்வி கற்பதற்காக மீண்டும் பாடசாலைக்குச் செல்வது பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நவ்தா அல்கஹ்தானி சவூதி அரேபியாவின் தென்மேற்கில் அமைந்துள்ள உம்வா ஆளுநர் பிரிவிலுள்ள அல்ரஹ்வா மத்திய 06

## தீ விபத்தில் சிக்கி இளம் தம்பதியினர் பலி

### கம்பஹா பகுதி வீடொன்றில் சம்பவம்



கம்பஹா – அத்தனகல்ல பிரதேசத்தில் வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இளம் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தில் மினுவாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 29, 27 வயதுடைய தம்பதியினரே உயிரிழந்துள்ளனர். அத்தனகல்ல பிரதேசத்தில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் இருவரும் அந்தப் பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்தபோதே 06

# நகர்வலம்



## மோ.சைக்கிளில் பஸ் வண்டி மோதி விபத்து; ஒருவர் பலி



**கெக்கிராவ குறூப் நிருபர்**

ஹபரன மரதங்கடவள வீதியில் பயணம் செய்த இ.போ.ச பஸ் வண்டியொன்று மோட்டார் சைக்கிளில் மோதியதில் மொட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இவ்விபத்து (11) காலை 10 மணி அளவில் கனேவல்பொல பகுதியில் நடைபெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அக்கரைப்பற்றிலிருந்து புத்தளம் நோக்கி பயணம் செய்துகொண்டிருந்த பஸ்ஸானது வீதியில் இடப்புறம் பயணம் செய்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளை முந்திச் செல்ல முயன்றபோதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

பஸ் சாரதி மரதங்கடவல பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த கனேவல்பொலயை சேர்ந்த 48 வயதுடைய முஹம்மது அன்வர் என்பவரே அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அடுத்து மரணித்துள்ளார். சம்பவம் தொடர்பில் மரதங்கடவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





அநுராதபுரம் நகரில் இருந்து மிஹிந்தலை வரையிலான பழைய புகையிரத வீதி புனரமைப்பு பணியினை போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் (12) ஆரம்பித்து வைத்தபோது பிடிக்கப்பட்ட படம்.
(படங்கள்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## மேல் மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

### செப். 01 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

மேல்மாகாண பாடசாலைகளில் நிலவும் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது. இது தொடர்பிலான விண்ணப்பங்கள் மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது.

இந்த போட்டிப் பரீட்சை தொடர்பான விண்ணப்ப விபரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை 11 ஆம் திகதிய மாகாண சபை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவின் www.psc.wp.lk இணைய வழியாகவும் விபரங்கள் பெற முடியும்.

இணைய வழி விண்ணப்பங்கள் இம்மாதம் இருபத்தைந்தாம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பரீட்சைக்கான தபால் மூலமான விண்ணப்பங்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், ஆட்சேர்ப்பு பிரிவு, மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, இல:628, பத்தாவது மாடி, ஜனஜய சிடி கட்டிடம், நாவல வீதி, ராஜகிரிய என்ற முகவரிக்கு கிடைக்கும் விதத்தில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் மாகாண சபை வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நாற்பத்தியொரு பாடப் பிரிவுகளில் மொத்தம் அறுநூற்றி நாற்பத்தியொறு வெற்றிடங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் தமிழ் மொழி 107, சிங்கள மொழி 512 மற்றும் ஆங்கில மொழி 22 வெற்றிடங்கள் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கணமூலை முஸ்லிம் ம.வி அதிபர் பணியிலிருந்து ஓய்வு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



கணமூலை முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எஸ்.எம்.எம். ஹனிபா (SLPS1) தனது சேவையில் இருந்து கடந்த திங்கட்கிழமை (07) முதல் ஓய்வு பெற்றார்.

இவர் ஆசிரியர் சேவையில் 1984.12.27 அன்று முதல் நியமனம் பெற்றார். பிறகு புத்தளம் பெருக்குவட்டான் அல் மின்ஹாஜ் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 1985.02.14 அன்று ஆரம்ப உதவி ஆசிரியராக பதவியேற்று மேலும் இப்பாடசாலையில் 1992 ல் அதிபராகவும் பதவி உயர்வு பெற்றார்.

இப்பாடசாலையில் 17 ஆண்டுகள் சேவையாற்றி 2002 ஆண்டு புத்தளம் கடையாமோட்டை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் அதிபராக ஒருவருடம் கடமையாற்றிய பின் 2003ல் புத்தளம் கொத்தாந்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் SLPS2 ஆக பதவி உயர்வு பெற்று அதிபர் சேவையில் இணைந்து கொண்டார். அங்கு சுமார் 11 ஆண்டுகள் அதிபராக சேவையாற்றினார்.

இவர் ஓய்வுபெறும் போது இவரது மொத்த சேவை காலமானது 38 வருடங்களும் 07 மாதமும் 10 நாட்களும் ஆகும். இதில் 07 வருடங்கள் ஆசிரியராகவும் 32 வருடங்கள் அதிபராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் 02 தடவைகள் சிறந்த அதிபருக்கான விருதினை வடமேல் மாகாணத் திணைக்களத்தின் மூலம் பெற்றமை சிறப்பம்சமாகும்.

## ஹம்ஸா கல்லூரிக்கு ஸ்மார்ட் தொலைக்காட்சி



**ருஸைக் பாரூக்**

கொழும்பு ஸாஹிரா கல்லூரி 80வது குழு பழைய மாணவர்கள் மட்டக்குளி ஹம்ஸா கல்லூரிக்கு ஸ்மார்ட் தொலைக்காட்சியொன்றை அண்மையில் கையளித்தனர்.

எதிர்காலங்களில் கல்லூரி அணிகளுக்கும் சில உதைபந்துகள் மற்றும் ஜெர்சிகளை வழங்க முடிவு செய்துள்ளதாக 80வது குழுவின் செயலாளர் அயூப் காதர் தெரிவித்தார்.

80வது குழுவின் தலைவர் ஏ.எல்.அன்வர், ஹம்ஸா கல்லூரியின் அதிபர் திருமதி ஏ.எஸ்.எப். அஸ்மா, முன்னாள் தலைவர் எம். யூ. எம். அஸ்மி, அவர்களுடன் ரிஸ்வான் ஜல்தீன், எம்.ஏ.சி. கமால்தீன், எம்.எப்.மாஸ்அரூன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

ரிதியகம திட்டத்தில்

## 6,500 ஏக்கர் விவசாய நிலத்தில் பயறு பயிரிடுவதற்கு நடவடிக்கை

### இடைப்போகத்தில் இம்முறை முன்னெடுக்கப்படும்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



அம்பலாந்தோட்டை, ரிதியகம திட்டத்தில் இடைபோகத்தின் போது இம் முறை 6,500 ஏக்கர் விவசாய நிலத்தில் பயறு பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் எச். பீ. சுமனசேகர தெரிவித்தார்.

ரிதியகம திட்டத்தில் பெரும் போகத்தின் போது நெற் பயிர் செய்வதற்காக ரிதியகம நீர்த் தேக்கத்தினால் போதியளவு நீர் வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அடுத்த போகம் ஆரம்பிப்பதற்கு இடைப்பட்ட காலத்தில் வயல் நிலங்களில் பயறினை பயிரிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் 18 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நெல் அறுவடையினை நிறைவு செய்து பயறினை பயிரிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முடிவடைவதற்கு முன்பு பயறினைஅறுவடை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டு அவர்கள் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் மாவட்ட செயலாளர் தெரிவித்தார்.

## அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

### பொதுமக்கள் பல்வேறு அசௌகரியம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் முக்கியமான அநேக மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் அங்கு நாளாந்தம் வரும் பெருமளவிலான நோயாளர்கள் தனியார் மருந்தகங்களை நோக்கி செல்லும் அவலநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(கடந்த 11 ஆம் திகதி அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் இருதய நோய் "கிளினிக்" வந்த அதிகமான நோயாளர்களுக்கு இருதய நோய்க்கான ஒரு சில மருந்துகளை தவிர அனேகமான மருந்து வகைகளை வெளியிலுள்ள பார்மசிகளில் பெற்றுக் கொள்ளுமாறு பரிசோதித்த வைத்தியர்கள் கேட்டுள்ளனர்.

சுவாச நோய்க்கான முக்கிய மருந்துகள் மற்றும் இருதய நோய்க்கான முக்கிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில நோயாளர்களுக்கு சுமார் 11 வகைக்கும் அதிகமான மருந்து வகைகளுக்கு டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் மூன்று அல்லது நான்கு வகையான மருந்துகளே வழங்கப்பட்டதாக நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர அன்றாடம் பல்வேறு நோய்களுக்கான கிள்ளிக்குகளுக்கும் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் இங்கு வருகின்றனர். மிக விரைவில் இதற்கு உரிய நிரந்தர தீர்வை பெற்றுத்தருமாறு இங்கு வரும் நோயாளர்கள்

சம்பந்தப்பட்டோரிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## பாஸியதுந் நஸ்ரியாவில் சின்னம் சூட்டும் விழா







பேருவளை மருதானை பாஸியதுந் நஸ்ரியா முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய மாணவ தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் விழா 09ஆம் திகதி புதன்கிழமை கல்லூரி பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் திருமதி எம்.எம். மஸ்னவியா தலைமையில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக களுத்துறை வலய கல்வித் திணைக்கள பிரதிக்கல்விப் பணிப்பாளர் (பாடசாலை நிர்வாகம்) திருமதி பி.வி.எம்.டபிள்யூ. குமாரசிறி கௌரவ அதிதிகளாக களுத்துறை வலய பிரதி கல்விப் பணிப்பாளர் (தமிழ் மொழி) எஸ். ஜெயகுமார், பேருவளை கோட்ட கல்விப் பணிப்பாளர் டபிள்யு.ஏ.ஜே.யூ. சோமரட்ன, களுத்துறை வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (தமிழ் மொழி) எம்.ரீ.எம். இல்யாஸ் மற்றும் சிறப்பு அதிதியாக டொக்டர் ஜனாபா ரிஸ்கா ரிம்ஸான் (எம்.பி.பி.எஸ்.) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர் படங்களில் காணலாம்.

## 'ஓயாத ஆளுமைகள்' நூல் வெளியீட்டு விழா





காலி மாவட்ட ஓய்வு பெற்ற கல்வியிலாளர்கள் அமைப்பு ஏற்பாடு செய்த 'ஓயாத ஆளுமைகள் 'நூல் வெளியீட்டு விழா அண்மையில் காலி முஸ்லிம் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அமைப்பின் தலைவர் கலாபூஷணம் ஏ.சி. எம்.ஜிப்ரி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ். அனீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு மின்சக்தி எரிசக்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ரிஸ்னா அனீஸ் விசேட அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக தென் மாகாண முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.மொகமட், தென்மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மசாயிர், எலிஜன் ஜுவலரி உரிமையாளர் எஸ்.எச். எம். நிசாம்,சீ பெயார் நிறுவன பணிப்பாளர் ஏ.எச்.எம்.அம்ஜத் லங்கா ஜெம் என்ட் ஜுவலரி முகாமைத்துவப் பணிப்பாளர் இப்லால் குத்தூஸ், மாணிக்கக் கல் வர்த்தகர் ஏ.டபிள்யு.எம்.பாரூக், தௌபீக் செரமிக் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ரீ.அக்ரம், லங்கா ஹாட்வெயார் உரிமையாளர் சப்ராஸ் மொஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைப்பின் தலைவர் கலாபூஷணம் ஏ.சி.எம்.ஜிப்ரி வரவேற்புரை நிகழ்த்தியதோடு இந்த அமைப்பை ஆரம்பிக்க எடுத்த முயற்சிகள், தடைகள், எதிர்கொண்ட பிரச்சினைகள் குறித்து விளக்கினார். ஓய்வு பெற்ற தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான அல்ஹாஜ் எம். ஜே. முஹம்மத், ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் புருஹானுத்தீன் ஜலால்தீன் மற்றும் தற்போதைய தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ. எம் மஸாஹிர் காலி வலய உதவிக் கல்வி பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். ஐ.எம் பாரூக் ஆகியோர் விஷேட சொற்பொழிவு ஆற்றினர்.



முஸ்லிம் சமூகத்தின் வரலாறு பாதுகாக்கப்பட வேண்டிய தன் அவசியத்தையும் அவை ஆவணப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கலாநிதி அனீஸ் தெளிவுபடுத்தினார். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள தூரம் கல்விச் சமூகமொன்றை உருவாக்க கல்வியலாளர்கள் ஆற்றவேண்டிய பங்களிப்பு பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444, 0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
2023 ஒகஸ்ட் 14 திங்கட்கிழமை



தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

## திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் மனித நேயப் பணி பாராட்டுக்குரியது

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன



திடீர் மரண விசாரணை அதிகாரிகள் செய்யும் மனித நேய சேவை பாராட்டுக்குரியது மட்டுமன்றி பெரிதும் அங்கீகரிக்கப்பட வேண்டிய அதிகாரி சேவைக்கு இணையாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் தொடர்புபட்ட பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் தென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் மாநாடு (12) அலரி மாளிகையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

இருபத்தைந்து வருடங்களுக்கும் மேலாக சேவையில் உள்ள திடீர் மரண விசாரணை அதிகாரிகள் மற்றும் ஏனைய மரண விசாரணை அதிகாரிகள் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய பிரதமர்; திடீர் மரண விசாரணை

06

## இரத்தினக்கல், ஆபரணத் துறையை மேம்படுத்த அரசு துரித நடவடிக்கை

### அதிக ஏற்றுமதி வருமானத்துறையாக மாற்றவும் திட்டம்

இரத்தினக்கல்,ஆபரண தொழில்சார் ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் வருடாந்தம் அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட முடியும் என்பதால், அந்த இலக்கை அடைவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்



துறையின் அபிவிருத்திக்கான வரிக் கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகளும் "சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைசார் கண்காணிப்புக் குழு"வினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை பாதிக்கும் வரிகள் மற்றும் ஏற்றுமதி, மீள்ஏற்றுமதி செயன்முறைகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இத்துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய தரப்பினர் ஜனாதிபதியிடம் தகவல்களை முன்வைத்தனர்.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் வருமானம்

06

## GCE (A/L) பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதிக்குள் வெளிவரும்

### வெளியானதாக பரப்பப்படும் செய்திகள் பொய்

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாக சமூக ஊடகங்களில் தவறான பதிவுகள் வெளியிடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. *Fact Crescendo Sri Lanka* என்ற உண்மைச் சரிபார்ப்பு இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.



இதுவரை பெறுபேறுகள் வெளியிடப்படவில்லையென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான போலி செய்திகளைப் பார்த்து ஏமாற வேண்டாம் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை

06

## புதிய கொரிய தூதுவருடன் அமைச்சர் பந்துல சந்திப்பு

இலங்கைக்கான புதிய தென் கொரிய தூதுவர் திருமதி மியோன் லீ மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவை அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர நட்புறவை மேம்படுத்துதல், கொரிய தொழில் முயற்சியாளர்கள் இலங்கையின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையில்



முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்குதல், கொரியாவில் பயன்படுத்தப்படும்

06

## 13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்த விடமாட்டோம்

### உதய கம்மன்பில MP போர்க்கொடி

13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்த இடமளிக்க முடியாது. இதற்கு எதிராக தென் இலங்கையில் எதிர்ப்பை ஒன்றிணைப்போமென பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

13 பிளஸ் என்ற நோக்கத்துடன்



செயற்பட்டதாலேயே மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2015 ஆம் ஆண்டு மக்களால் புறக்கணிக்கப்பட்டாரென தெரிவித்த உதய கம்மன்பில எம்.பி, பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த ஜனாதிபதி

06



## வரலாற்று ரீதியான ஆய்வுகளுக்கு இந்திய ஆய்வாளர்களையும் இணைப்பது அவசியம்

### ஸ்ரீதரன் எம்.பி.

லோரன்ஸ் செல்வநாயகம்

வரலாற்று ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இந்திய ஆய்வாளர்களை இணைத்துக்கொள்வது அவசியமென்றும் அப்போதே, இராவணன் ஒரு தமிழரென்பதும் சிவனை வழிபட்டாரென்பதும் உறுதியாகுமென பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

வரலாற்று ஆய்வுகள் மிக முக்கியமானதென்றும் தமிழ் வரலாற்றை ஆய்வு செய்ய முன்னெடுக்கும் சிறந்த நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாகவும் தெரிவித்த அவர், பொய்யாக வெளியிடப்படும் சில தகவல்கள் இன நல்லிணக்கத்துக்கு பாதிப்பையே ஏற்படுத்துமென்றும் தெரிவித்தார்.

இராவணன் தொடர்பான ஆய்வை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. புத்திக்க பத்திரண நேற்று முன்தினம் சபையில் கொண்டுவந்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் உரையாற்றிய அவர்,

"இராமாயணத்தில் பிரதான பாத்திரத்தை வகித்த ஈழம் என்ற எமது நாட்டில், தமிழனாக

06

பொதுப்போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும்

## வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு விரைவில் அனுமதி

### கட்டுப்பாடுகளை தளர்த்த வர்த்தமானி வெளிவரும்

பொதுப் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களை மட்டும் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

இறக்குமதி செய்ய விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்தி இந்த வாரம் வர்த்தமானி அறிவிப்பை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

பொதுப் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் லொறிகள், பார





ஊர்திகள் மற்றும் பஸ்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் இந்த வர்த்தமானி மூலம் தளர்த்தப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டுள்ளனர்.

எப்படியிருப்பினும் தற்போதுள்ள அந்நியச் செலாவணி கையிருப்புடன் ஒப்பிடுகையில் மற்ற வாகனங்களின் இறக்குமதி மேலும் தாமதமாகுமென நிதி ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். வாகன இறக்குமதியை துரிதப்படுத்துவதன் மூலம் டொலரின் பெறுமதி மீண்டும் உயராலாமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் கடும் வரட்சி நிலை காரணமாக

## நேர அட்டவணை முறையில் நீர் வழங்க நடவடிக்கை

### 20 விநியோக திட்டங்களில் முன்னெடுக்க திட்டம்

நாட்டில் நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக தேசிய நீர்வழங்கல் சபையின் கீழ் செயற்படும் 344 நீர் விநியோக தி ட்டங்களில் 20 திட்டங்களுக்கு நேர அட்டவணை அடிப்படையில் நீர் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த சபையின் அபிவிருத்திப் பிரிவின் பிரதி பொது பணிப்பாளர் அனோஜா களுஆராச்சி இதனை தெரிவித்துள்ளார். அதன்படி நீர்விநியோக திட்டங்களுக்கான முழு நேர





நீர் விநியோகம் நிறுத்தப்பட்டு நேர அட்டவணை அடிப்படையில் நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல நீர் விநியோக திட்டங்களிலுள்ள நீர் ஆதாரங்களின் நீர் மட்டம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டடுள்ளது.

இதேவேளை 11 மாவட்டங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 867 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 63 ஆயிரத்து 111 பேர் குடிநீர் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

## சீனன்கோட்டையில் 'வேர்கள்' நூலின் வெளியீட்டு விழா



பேருவளை நகர சபை முன்னாள் நகரபிதா ஐ.எல்.எம். யூஸுப் பற்றியும் அவர் வாழ்ந்த சீனன்கோட்டை ஊர் பற்றிய வரலாற்று குறிப்புகளையும் உள்ளடக்கி அன்னாரது புதல்வர் அஷ்ரப் யூஸுபினால் எழுதப்பட்ட "வேர்கள்" எனும் நூலின் வெளியீட்டு விழா நேற்று (13) சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம். ஜாபிர் ஹாஜியார் ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. நூலின் முதற்பிரதியை நூலின் ஆசிரியர் அஷ்ரப் யூஸுப் பிரதம அதிதி சீனன்கோட்டை பள்ளிச்சங்கத்தலைவர் முக்தார் ஹாஜியார் மற்றும் விசேட அதிதி பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோருக்கு வழங்குவதையும் மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அல்ஹாஜ் ஏ.எம். ஹனபி உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

படங்கள் ; பேருவளை விசேட நிருபர்

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழுது ஏத்தும் உலகு

மானம் அழியத்தக்க இழிவு வந்ததே என்று உயிரை மாய்த்துக் கொள்ளக் கூடியவர்களின் புகழை உலகம் எக்காலமும் போற்றி நிற்கும்.

# மலையக பெருந்தோட்ட மக்களின் முன்னேற்றத்தில் கூடுதல் அக்கறை

இலங்கையின் பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்காக தென்னிந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள் இந்திய வம்சாவளி மக்கள் ஆவர். அவர்கள் மலையகப் பெருந்தோட்ட தமிழ் மக்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இருநூறு வருடங்களுக்கு முன்னர் பிரித்தானிய ஏகாதிபத்திய காலப்பகுதியில் இங்கு அழைத்து வரப்பட்ட இம்மக்கள் இந்நாட்டின் தேயிலை, இறப்பர் பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழ்கின்றனர்.

இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக அளப்பரிய பங்களிப்பு நல்கிவரும், இம்மக்கள் தாம் பணியாற்றும் துறைகள் ஊடாக இந்நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டி வருவதில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இந்நாட்டின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களில் பணியாற்றவென இந்நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இம்மக்களின் மூதாதையினரின் பரம்பரையில் ஒரு பகுதியினர் இன்னும் பெருந்தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள லயன் அறைகளில் தான் வாழும் நிலை நீடிக்கிறது.

இம்மக்கள் இந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றவர்களாக இருந்த போதிலும், அவர்களில் ஒரு தொகுதியினருக்கு இன்னும் இம்மண்ணில் காணிக்கான உரிமை கிடைக்கப்பெறாத நிலையே நீடித்து வருகிறது. இவை மாதத்திரமல்லாமல் பல்வேறு தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் கொண்டுள்ளவர்களாகவே இந்த மக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர்.

இம்மக்கள் இந்நாட்டுக்கு அழைத்து வரப்பட்டு இருநூறு வருடங்களாகியுள்ள அதேநேரம், இந்நாடு சுதந்திரமடைந்து 75 வருடங்களும் நிறைவடைந்துள்ளன. ஆன போதிலும் கூட இம்மக்களில் ஒரு பகுதியினர் ஏனைய சமூகங்களின் மட்டத்திற்கு இன்னும் முன்னேற்றம் அடையாதவர்களாகவே இருக்கின்றனர்.

இந்நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக அளப்பரிய பங்களிப்பை நல்கி வரும் இம்மக்களை இந்நாட்டின் ஏனைய சமூகங்களின் மட்டத்திற்கு மேம்படுத்த வேண்டும். இது மிகவும் அவசியமானது என்பது பரவலாக உணரப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இந்நாட்டுக்கு அழைத்துவரப்பட்ட இருநூறு வருடங்களின் நிறைவை நினைவுகூரும் வகையில் பல நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணிகளும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ள அதேநேரம், இந்திய வம்சாளி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளும் தொழில் சங்கங்களும் கூட பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றன.

இந்நிலையில் மலையகப் பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான பாராளுமன்ற ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதம் கடந்த வியாழக்கிழமை (10ஆம் திகதி) நடத்தப்படுள்ளது. இவ்விவாதத்தின் போது பெருந்தோட்ட மக்களின் தற்போதைய நிலைமை, அவர்களது தேவைகள், எதிர்பார்ப்புகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இவ்விவாதத்திற்கு பதிலளித்த பெருந்தோட்ட அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக சட்டரீதியான பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். இது உண்மையில் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும்.

இதேவேளை, மலையகப் பெருந்தோட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமார், பாராளுமன்ற உறுப்பினர் எம். இராமேஸ்வரன் ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வெள்ளியன்று சந்தித்து பெருந்தோட்ட மக்களின் தேவைகள், எதிர்பார்ப்புகள் குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

இச்சமயம் ஜனாதிபதி, 'மலையக மக்களைத் தொடர்ந்தும் மலையகத் தமிழர்களாகவோ அல்லது தோட்டப்புற மக்களாகவோ வாழ வைப்பதற்குப் பதிவாக இலங்கை சமூகத்தில் ஏனைய மக்களுடன் ஒன்றிணைப்பதே எமது எதிர்பார்ப்பாகும். இது சவால் மிக்க பணி என்றாலும் இதற்கான வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவது அவசியம். நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த இருநூறு வருடங்களாக உழைத்துவரும் இம்மக்கள், 1983 கலவரத்தின் பின்னரும் கூட பிரிவினைவாதப் போக்கையோ அல்லது ஆயுதம் ஏந்திய பயங்கரவாதச் செயற்பாடுகளையோ கைகொள்ளவில்லை. அவர்கள் இலங்கை அரசாங்கத்தின் மீதும் தெற்கு சமூகத்தின் மீதும் நம்பிக்கையுடன் செயற்படுவர்கள்' என்று கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்து மலையக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் நிச்சயம் ஏற்படுத்தும். உண்மையில் அந்த மக்களை தனிக்குழுவாக வாழ வைப்பதற்கு பதிலாக இந்நாட்டின் ஏனைய சமூகங்களுடன் ஒன்றிணைப்பது மிகவும் அவசியம். அம்மக்களின் சமூக பொருளாதார மறுமலர்ச்சிக்கு நிச்சயம் இது வித்திடும். இதனை உறுதிபடக் கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# சர்வதேச அரங்கில் இலங்கைக்கு புகழ் தேடித்தந்த பெருமகன் லக்ஷ்மன் கதிர்காமர்

## அன்னார் மறைந்து 18 வருடங்கள் நிறைவு

**புகழ்மிக்க இராஜதந்திரி மற்றும் இந்நாட்டின் பிரபலமான வெளிநாட்டு அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களின் 18 ஆவது நினைவு தினம் இன்றாகும். அவர் புலிகளால் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 18 வருடம் பூர்த்தி அடைந்துள்ளது.**

சிறந்த அரசியல்வாதியான அவர், பல துறைகளிலும் விரிவான அறிவினை கொண்ட அறிவுஜீவி ஆவார். சர்வதேச அரசியல், சர்வதேச சட்டம், பொதுச் சொத்துக்கள் சட்டம், பொருளாதாரம் போன்ற பலவற்றில் அவர் நிபுணர். மதங்கள் மற்றும் சித்தாந்தங்கள், கலாசாரங்கள் தொடர்பாக அவரிடம் பரந்த அறிவு காணப்பட்டது.

எந்த ஒரு சர்வதேச மேடையிலும் தைரியமாக, கம்பீரமாக பேசக்கூடிய சிறந்த பேச்சாளர் அவர். ஆங்கில மொழியை சரளமாகப் பேசக்கூடிய திறமையானவர். தலைவர்கள் பலரிடம் காணப்படும் கர்வம் அவரிடம் இருந்ததில்லை.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் உருவாக்கிய அறிவுஜீவியாகிய அவர் எல்லா விடத்திலும் தன்னை `நான் இலங்கை உருவாக்கியவன்`(Iam a Sri Lankan Product) என்றே அறிமுகம் செய்தார். அவர் இனவாதியாக வாழாமல் தேசியத்தை நம்பிய ஒருவராக வாழ்ந்தார். அதனாலேயே உலகில் எந்த தரத்தினை உடையவர்களாக இருந்தாலும் அவர்களின் வேதனையில் மனிதாபிமானத்தோடு அவரால் பங்கெடுத்துக் கொள்ள முடிந்தது.

அவரது அரசியல் வாழ்க்கை ஒரு தசாப்தம் என்னும் குறுகிய காலமாகும். குறுகிய காலத்தில் இந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சராக இரண்டு தடவை பதவி வகித்தார். அவர் அப்பணியில் திறம்பட செயல்பட்டார். அதனால்தான் புலிகள் அவரைக் கண்டு பயந்தார்கள். அதனாலேயே அவரின் உயிரை துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கினார்கள்.



இந்நாட்டின் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த இலங்கையரான அவருக்கு இந்த நாட்டைப் பற்றிய உணர்வும் கௌரவமும் காணப்பட்டன. தெளிவான நோக்கு அவரிடம் காணப்பட்டது.

பயங்கரவாதம் பற்றி உலகில் பலம் வாய்ந்தவர்களிடம் இருந்த சந்தேகத்தை தனது வலுவான விவாதத்தால் 'பயங்கரவாதம் என்பது பயங்கரவாதமே' என ஐக்கிய நாடுகள் பொதுக்கூட்டத்தில் தைரியமாக எடுத்துக் கூறினார். கொலை செய்யப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த இறுதி சட்டவரைவு பயங்கரவாதத்துக்கு எதிராக கொண்டு வரப்பட்டதாகும். பயங்கரவாத நடவடிக்கைக்காக நிதி உதவியை வழங்குவதை தடுப்பதே அதன் நோக்கமாகும்.

இலங்கையின் இனவாதம் ஏற்படுத்திய பிரச்சினை தொடர்பாக சரியான நோக்கு அவரிடம் காணப்பட்டது. 1983 போன்ற சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களுக்கு நேர்ந்த அநியாயங்களிலும் பார்க்க அதிகமாக பயங்கரவாதத்தால் அநியாயம் நிகழ்ந்தது என அவர் ஏற்றுக் கொண்டிருந்தார். கொடூரமாக மக்களை கொல்வதால் எந்த ஒரு இனத்துக்கும் நியாயத்தை ஏற்படுத்த முடியாது எனவும், அதற்குப் பதிலாக அனைவரினதும் கௌரவத்தை காப்பாற்றும் விதத்தில் சமூக மற்றும் அரசியல் முறையை உருவாக்க வேண்டும் எனவும் அவர் நம்பினார்.

அதே போல் வெசாக் பௌர்ணமி தினத்தை சர்வதேச விடுமுறை தினமாக ஐக்கிய நாடுகள் அமைப்பு பிரகடனப்படுத்துவதற்கு அவர் ஆற்றிய பணியை என்றென்றும் கௌரவப்படுத்த வேண்டும். 2005 ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்ட போது பிரபல FRONTLINE சஞ்சிகை 'இலங்கையின் பெருமையை பறைசாற்றிய இரத்தினம் அழிந்து விட்டது' எனக் குறிப்பிட்டு இருந்தது. லக்ஷ்மன் கதிர்காமர் என்னும் நிறைவான அபூர்வ மனிதர் விட்டுச் சென்ற உரிமையை தற்போதைய மற்றும் எதிர்கால அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்ள வேண்டியதோடு, பாடம் கற்கவும் வேண்டும்.

'உலகளாவிய இஸ்லாமிய நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தல்'

# மார்க்க அறிஞர் 150 பேரின் பங்கேற்புடன் சவுதியில் சர்வதேச இஸ்லாமிய மாநாடு

**உலக இஸ்லாமிய ஆன்மிக நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் நோக்கில் மக்கா இஸ்லாமிய சர்வதேச மாநாடு நேற்று ஆரம்பமாகியது. இம்மாடு சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல்–ஸுஊதின் பணிப்பின் பேரில் புனித மக்கா நகரில் நேற்று (13 ஆம் திகதி) ஆரம்பித்த இம்மாநாடு இன்று இரண்டாவது நாளாக நடைபெறுகிறது.**

'உலகளாவிய இஸ்லாமிய நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தல்' எனும் தொனிபொருளில் சுமார் 85 நாடுகளைச் சேர்ந்த 150 மார்க்க அறிஞர்கள், முப்திகள் , இஸ்லாமிய நிறுவனத் தலைவர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். இம்மாநாட்டை சவுதி அரேபிய இஸ்லாமிய மத விவகாரங்கள் அமைச்சு நடத்துகிறது. அமைச்சர் அஷ்ஷைக் அப்துல் லத்தீப் ஆல்ஷைக் தலைமையில் இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடந்தன.

இம்மாநாட்டில் பல ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஏழு அமர்வுகளாக நடைபெறும் இம்மாநாட்டில் முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்திற்கும், இஸ்லாமிய நிறுவனங்களின் பங்களிப்பு, மத நிறுவனங்களுக்கு மத்தியில் காணப்படும் ஒத்துழைப்பு மற்றும் தொடர்புகள், தீவிரவாதத்தை ஒழிப்பதில் இஸ்லாமிய மத நிறுவனங்களின் பங்களிப்பு, ஒழுக்கவிழுமியங்களை பாதுகாப்பதில் இஸ்லாமிய மத நிறுவனங்களின் பங்களிப்பு, ஏனைய சமூகங்களுடன் சகவாழ்வைப் பேணுதல் போன்ற விடயங்கள் ஆராயப்படுகின்றன.



இம்மாநாடு உலக முஸ்லிம்கள் பற்றிய சவுதி அரேபியாவின் கவனத்தைக் கோடிட்டுக் காட்டுவதாக சவூதி அரேபியாவின் மார்க்க அறிஞர்களின் சபைத் தலைவர் அஷ்ஷைக் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் ஆலுஷ்ஷைக் குறிப்பிட்டுள்ளார்.

அது மாத்திரமல்லாமல் ஆன்மிகத்தைப் போதிக்கும் நிறுவனங்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதில் சவுதி அரேபியாவின் அனுபவங்கள் இம்மாநாட்டில் கலந்துரையாடப்படும். சுமார் 150 உலமாக்கள், முப்திகள், இஸ்லாமிய நிறுவனத் தலைவர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றுகிறார்கள்.

தற்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிகாட்டல்கள் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும். இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையிலிருந்தும் மூன்று அறிஞர்கள் மக்கா சென்றுள்ளனர். இம்மாநாட்டிற்குரிய ஆய்வுக் கட்டுரைகள் பல மாதங்களுக்கு முன்னர் கோரப்பட்டு அனுப்பப்பட்டுள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட தலைப்புகளில் இக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இம்மாநாட்டிற்குரிய சகல செலவினங்களையும் சவுதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் பணிப்பின் பேரில் சவுதி அரசு பொறுப்பேற்றுள்ளது. இஸ்லாம் பயங்கரவாதத்திற்கும், தீவிரவாதத்திற்கும் எதிரான ஒரு மார்க்கம் என்பதை சவுதி அரேபியா உலகிற்கு எப்போதும் நிரூபித்திருக்கிறது.

சர்வதேச இஸ்லாமிய மத நிறுவனங்களுக்கு மத்தியில் தொடர்பை ஏற்படுத்தும் இம்மாநாடு போன்று சவுதி அரேபியா அரபு மொழிக்கான மாநாடு,



இஸ்லாமிய கற்கை நெறிகளை ஆய்வு செய்யும் மாநாடு போன்ற பல மாநாடுகளை சவுதி அரேபியா வருடம்தோறும் நடத்தி வருகின்றது.

நடுநிலை பேணும் சவுதி அரேபியாவின் கோட்பாட்டை நோக்கமாகக் கொண்டு இம்மாநாடு நடைபெறுகின்றது. அனைத்துத் துறைகளிலும் முஸ்லிம் சமூகம் முன்னேற்றமான ஒரு சமூகமாக திகழ வேண்டும் என்பதற்காக சவூதி அரேபியா பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

முஸ்லிம்களுக்கு மத்தியில் பரஸ்பர ஒற்றுமையை ஏற்படுத்தி முஸ்லிம் அல்லாத சமூகங்களுடன் எப்படி சகவாழ்வை பேணுவது என்பது தற்காலத்திற்கு மிக அவசியமான ஒன்றாகும். இம்மாநாட்டை நடத்துவதற்கு ஏற்பாடு செய்த சவுதி அரேபிய அரசாங்கத்துக்கும் சவுதி இஸ்லாமிய கலாசார அமைச்சுக்கும் பல நாடுகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.



அஷ்ஷெய்க்
பௌஸுல் அலவி (மதனி)
செயலாளர்
தாருள் இமான் நிறுவனம்

# சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றில் நிறைந்துள்ள நீர்த்தாவரங்கள் அகற்றப்படும்

## கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பையிடம் அமைச்சர் உறுதி

**அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை பிரதேசத்தின் சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றின் வடிச்சலுக்கான தடைகளை அகற்றி சுத்தம் செய்யும் பணிகளை ஆரம்பிக்க நீர்ப்பாசன அமைச்சர் ரொசான் ரணசிங்க அனுமதி வழங்கியதாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் அமைந்துள்ள சம்புக்களப்பு வடிச்சலுக்கு தடையாக நீர்த்தாவரங்கள் நிரம்பி உள்ளதாலும் மற்றும் அட்டாளைச்சேனை கோணாவத்தை ஆற்றின் வடிச்சலுக்குத் தடையாக அவை உள்ளதாலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருவதுடன்,இப்பிரதேசங்களில் முதலைகளின் தொல்லைகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

எனவே இப்பிரதேச விவசாயிகளின் நன்மை கருதியும், பொதுமக்களின் நன்மை கருதியும் இவ்வடிச்சல் பணிகளை ஆரம்பிக்குமாறு கிழக்கு மாகாண முன்னாள் வீதிஅபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை நீப்பாசன அமைச்சர் ரொசான் ரணசிங்கவை அண்மையில் அமைச்சில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

மேற்படி வடிச்சலை சீராக்கும் நோக்குடன் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்துக்கு வழங்கப்பட்ட எக்ஸ்வேட்டர் இயந்திரம் நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்தில் நிறுத்தப்பட்டுள்ளதால் இப்பிரதேச நீர்ப்பாசன வடிச்சல் பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.





எனவே இவ்வியந்திரத்தை விரைவாக திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உதுமாலெப்பை கேட்டுக் கொண்டார். இவ்விடயத்தைக் கேட்டறிந்த நீர்ப்பாசன அமைச்சர் ரொசான் ரணசிங்க சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றினை சுத்தப்படுத்தும் பணிகளை ஆரம்பிக்குமாறு பணிப்பாளர் நாயகத்துக்கு பணிப்புரை வழங்கினார்.

அத்துடன் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை பிரதேச விவசாயப் பாதைகளை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளதாக கிழக்கு உதுமாலெப்பை மேலும் தெரிவித்தார்.

**முகம்மட் றியாஸ்**
(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# தம்பான பிரதேசத்தில் ஆதிவாசிகளின் பாரம்பரிய கலை, கலாசார நிகழ்வுகள்

**உலக ஆதிவாசிகள் தினத்தையொட்டி தம்பான, மொறபெத்தேயில் பாரம்பரிய கலை கலாசார நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.**

இவ்விஷேட நிகழ்வில் பங்கேற்பதற்காக தம்பான, றதுகல, பொல்லேபெத்த, ஹேனானிகல, வாகரை, மூதூர் மற்றும் தழுகான பிரதேசங்களிலிருந்து 100 ஆதிவாசிகள் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அரச நிறுவனங்கள் மற்றும் சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் இலங்கையில் ஆதிவாசிகள் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அடங்கிய மகஜரொன்று சுற்றாடல் கேந்திர நிலையத்திற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.





கடந்த வருடம் கையளிக்கப்பட்ட வேடுவர் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் தீர்க்கப்படாத விடயங்கள் சம்பந்தமான ஞாபகமூட்டல் கடிதம் பௌத்த சமய விவகார அமைச்சர் விதுர விக்ரமரெட்ண அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

வேடுவ மக்களின் தலைவர் ஊருவரிகே வன்னிலத்தே ஆதிவாசிகள் எதிர்நோக்கும்பிரச்சினைகளைமிகவிரைவில் தீர்த்து வைக்கப்படல் வேண்டும் எனத் தெரிவித்தார்.

**எம்.ஐ.எம்.அஸ்ஹர்–**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

# மானுடவியல்

## சிறுத்தொண்ட நாயனார்



128

வீட்டின் புறத்தே சென்று பார்த்தார். அடியார் ஒருவரையும் காணாது முகத்தில் வாட்டம் பெருக முதல்வரை வணங்கி 'இகத்தும் பரத்தும் இனியாரைக் காணேன். நானும் திருநீறு இடுவாரைக் கண்டு இடுவேன்' என்றார். அது கேட்ட பைரவர் 'உம்மைப்போல் நீறிட்டார் உளரோ? நீர் உடன் உண்பீர்', என்று கூறித் திருவெண்காட்டு நங்கையாரை நோக்கி, வேறொரு பரிகலம் இடச் செய்து 'வெம்மை இறைச்சிச் சோறு இதனில் மீட்டுப்படையும்' என்றார். அவரும் அவ்வாறே படைத்தார். உடனமைந்த சிறுத்தொண்டர், அடியாரை உண்பிக்கவேண்டி தாம் உண்ணப்புகுந்தார். அதுகண்ட பைரவர் அவரைத் தடுத்தருளி, 'நாம் ஆறுமாதம் கழித்து உண்போம். நாம் உண்ணுமளவும் பொறுத்திராது நாளும் சோறு உண்ணும் நீர் முன்பு உண்பது ஏன்? நம்முடன் இருந்துண்ண மகவினைப் பெற்றீராயின் அம்மைந்தனை அழையும்' என்றார். அதனைக் கேட்ட சிறுத்தொண்டர் 'இப்போது அவன் உதவான்' என்றார். 'நாம் உண்பது அவன் வந்தாலேதான் அவனை நாடி அழையும்' பைரவர். அச்சொற்கேட்டுத் தரியாது சிறுத்தொண்டர்மனைவியாரோடும் புறத்தே போய் அழைத்தனர்.




அவர் மனைவியாரும் தலைவர் பணியில் தலைநிற்பவராய் 'செய்மணியே! சீராளா! வாராய். சிவனடியார் நாம் உய்யும் வகையால் உடனுண்ண அழைக்கின்றார்' என்று ஓலமிட்டழைத்தனர். அப்பொழுது பரமன் அருளால் பள்ளிக்கூடத்தினின்று ஓடிவருபவனைப் போன்று சீராளதேவர் வந்தார். வந்த புதல்வரைத் தாயார் தழுவியெடுத்தார். 'சிவனடியார் அமுது செய்யப் பெற்றோம்' என்னும் மகிழ்ச்சியால் கணவர் கையில் கொடுத்தார்.

வந்த மைந்தரை அழைத்துக் கொண்டு அடியாரை அமுது செய்விப்பதற்கு உள்ளே புகுந்த சிறுத்தொண்டர் பைரவக் கோலத்தொண்டரைக் காணாதவராய்ச் சிந்தை கலங்கித் திகைத்து வீழ்ந்தார்; மனஞ்சுழன்றார். வெந்த இறைச்சிக் கறியமுதினைக் காணாது வெருவுற்றார். 'செய்ய மேனிக் கருங்குஞ்சுகத்துப் பைரவர் நாம் உய்ய அமுது செய்யாது ஒளித்தது எங்கே?" எனத்தேடி மயக்கங் கொண்டு வெளியே சென்று பார்த்தார். அப்பொழுது மறைந்த அம்முதல்வர் உமையம்மையாரோடும், முருகனாகிய குழந்தையுடனும் விடை மீது அமர்ந்து இனிய கறியும், திருவமுதும் அமைத்தார் காண எழுந்தருளித் திருவருள் புரிந்தார். அன்பின் வென்ற தொண்டராகிய சிறுத்தொண்டரும், அவர் மனைவியாரும், சீராளதேவரும் தம் முன்னே தோன்றிய பெருமானை என்பும், மனமும் கரைந்துருக நிலமிசை வீழ்ந்து துதித்துப் போற்றினார்கள்.

சிவபெருமான், உமாதேவியாரும், முருகவேளும், அங்கு தம்மை வழிபட்டு நின்ற சிறுத்தொண்டர், மனைவியார், மகனார், தாதியார் நால்வரையும் தம்மை என்றும் பிரியாது இறைஞ்சியிருக்கும் வண்ணம் உடன் கொண்டு திருக்கயிலையை அடைந்தருளினார்.


கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.


# ஆடி அமாவாசை

**சிறப்பு மிகுந்த ஆடி அமாவாசை நாளில் நம்முடன் வாழ்ந்து மறைந்த முன்னோர்கள் பித்ரு லோகத்தில் இருந்து கிளம்பி பூலோகத்திற்கு வருவதாக நம்பப்படுகிறது. எனவே நம்முடைய முன்னோர்களை வரவேற்கும் விதமாக நாம் எள்ளும் தண்ணீரும் இறைத்து தர்ப்பணம் அளிப்பதன் மூலம் தோஷங்கள் நீங்கும் என்பது நம்பிக்கை.**



*அமாவாசையில், மூன்று அமாவாசைகள் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. உத்தராயன காலமான தை மாதத்தில் வருகிற அமாவாசை, தட்சிணாயன காலமான ஆடி மாதத்தில் வருகிற அமாவாசை... புரட்டாசி மகாளய பட்சம் என்று சொல்லப்படும் காலத்தில் வருகிற அமவாசை ஆகிய மூன்று அமாவாசைகள் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்தவை என்கிறது சாஸ்திரம்.*

*ஆடி முதல் மார்கழி முடிய உள்ள காலத்தில் நம்முடைய முன்னோர்களான பித்ருக்கள் நம்மைப் பார்ப்பதற்காக இந்த உலகத்துக்கு வருகின்றனர். அவர்கள் பித்ரு லோகத்தில் இருந்து புறப்படும் நாள் ஆடி அமாவாசை. எனவே, அவர்களை நாம் நினைவில் வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பது போலவும், அவர்களை பூமிக்கு வரும்படி அழைப்பு விடுப்பதுபோலவும் ஆடி அமாவாசையன்று அவர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கவேண்டும் என்கிறது சாஸ்திரம்.*




*ஆடி அமாவாசை நாளில் தன்னுடைய சொந்த வீடான கடக ராசியில் தாய் காரகன் சந்திரன் தந்தை காரகன் சூரியனுடன் இணைந்திருக்கிறார். சூரியனும் சந்திரனும் சேர்ந்திருக்கும் நாளே அமாவாசை என்பது எல்லோருக்கும் தெரியும். சந்திரன் தேய்பிறை நிலையில் இருந்து விடுபட்டு வளர்பிறை நிலைக்கு செல்லும் நாள். அமாவாசை தினத்தில் முன்னோர்களையும் தாய், தந்தையர்களையும் யார் வழிபடுகிறார்களோ, அவர்களின் பிள்ளைகளுக்கும் தலைமுறைக்கும் முன்னோர்களின் ஆசி கிடைக்கும். அமாவாசை நாளில் நாம் செய்யும் தர்ப்பணங்கள் நம் பித்ருக்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும் என்பதற்காகவே அமாவாசை தினம் பித்ரு தர்ப்பணத்துக்கு உரிய நாளாக கூறியிருக்கிறார்கள்.*

*இந்த ஆண்டு ஆடி மாதம் கிருஷ்ண பட்ச அமாவாசை திதி ஆகஸ்ட் 15 செவ்வாய்க்கிழமை மதியம் 12.42 மணிக்கு தொடங்குகிறது. இந்த திகதி அடுத்த நாள் ஆகஸ்ட் 16, புதன்கிழமை மாலை 03.07 மணி வரை உள்ளது. சூரிய உதயத்தின் அடிப்படையில் 16ஆம் திகதி புதன் கிழமைதான் ஆடி மாத அமாவாசை என்று கணக்கிடப்படுகிறது.*

*ஆகஸ்ட் 16 அன்று காலை 6 மணி முதல் 9 மணி வரை புனித நீர் நிலைகளில் நீராடி தர்ப்பணம் செய்யலாம். ஆடி அமாவாசை நாளில் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதும், அன்னதானம் செய்வதும் புண்ணியத்தைத் தரும். இந்நாளில் வில்வ மரத்தை வணங்கி, தண்ணீர் ஊற்றி தீபம் ஏற்றி வழிபட்டால், முன்னோர்களும், தெய்வங்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது நம்பிக்கை.*





உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் (4) வெள்ளிக்கிழமை காலை பாற்குடபவனி இடம்பெற்றது. உடப்பு பாடசாலை விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி ஆண்டிமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து மீண்டும் ஆலயத்தை வந்தடைந்தது."ஆரோஹரா"கோஷத்துடன் பக்தர்கள் பாற்குடத்தை ஏந்தியவாறு சென்றனர். பின்னர் பால் அம்மனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. இதில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட பக்த அடியார்கள் கலந்து கொண்டார்கள்.
(உடப்பு குறூப் நிருபர்)

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 49

இன்று நம்மிடம் இருக்கும் செல்வம், சொத்து. பதவி, கௌரவம், வாய்ப்பு இவையாவும் சமுதாயத்திலிருந்து நமக்கு கிடைத்தவையாகும். சமுதாயம் எங்களை ஒதுக்கியிருந்தால், புறக்கணித்து இருந்தால் நாம் இவ்வாழ்வை வாழ முடியாது. சிறிது காலத்திற்குக் கூட நம்மால் பிழைப்பை நடத்த முடியாது. எனவே சமுதாயத்திற்கு நாம் புறம்பாக நடந்து கொள்ளக் கூடாது. அது நன்றி கெட்டத்தனமாகி விடும். இப்பூவுலக மற்றும் பரலோக வாழ்வு. உடல் மற்றும் ஆத்மா சம்பந்தப்பட்ட வாழ்வு ஆகியவைகளின் மங்கல மயம் உண்டாக நாம் பிறர் நலம் பேணுதல் வேண்டும். பிறருக்காக வாழ வேண்டும்.



இவைகளை புறக்கணிப்பது என்பது நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் சீரழித்துவிடும். இந்த தத்துவத்தை அனுபவப் பூர்வமாக உணர்ந்து கொண்ட வியாச முனிவர் பின் வருமாறு கூறுகிறார்.

எவன் ஒருவன், எப்போதும் பிறருக்காக வாழ்கிறானோ. பிறருடைய நலத்தையே விரும்புகிறானோ, அவன் பிறப்பின் பயனை எய்துவான். பரோபகாரம் பிறருக்கு உபகாரம் செய்பவனுக்கு பயம் இருக்காது. அவன் இம்மையிலும் மறுமையிலும் சிறப்பாக போற்றப்படுவான்.மனவலிமை மிகும் போது தான் ஒருவன் தன் துணிவை, தன் உணர்வாற்றலை, திறமையை, கலை நுணுக்கத்தை காட்டிட முடியும். வெறும் புத்தி பலத்தால் மட்டும் இது சாத்தியமாகாது. இதயம் மற்றும் இதயத்தின் உணர்ச்சி வெளிபாடு மனிதனுக்கு மட்டுமல்லாமல் மற்ற ஜீவராசிகளுக்கு உண்டு. மனவலிமையை போல். வாழ்வில் வெற்றிக் கொள்ள சில நற்பண்புகள் உள்ளன. அவை யாவன அன்பு. நன்னடத்தை, நற்குணம், சிரத்தை, பக்தி, ஈடுபாடு, உண்மை முதலியன.

படித்தவன் நற்பண்புகள் கொண்ட இதயமில்லாதவனாக இருந்தால் அவனுக்கு செல்வம், வெற்றி. புகழ் என பல இருந்தாலும் வாழ்வில் அவன் துன்பப்பட்டுக் கொண்டு தானிருப்பான். அதே வேளையில் பிறரிடம் அன்பு பாராட்டுபவன். சகோதர பாசம், தாய் பாசம், புத்திர பாசம் நம்பிக்கை, உண்மை நட்பு ஆகிய நற்பண்புகளுடன் விளங்கும். ஒருவன் படிக்காதவனாக இருந்த போதும், அவன் ஏழையாக இருந்தாலும், அவனது வாழ்வில் சுகம் நிறைந்து காணப்படும். படிக்காத பலருடைய வாழ்க்கை, குடும்ப ரீதியாகவும், தாம்பத்ய ரீதியாகவும், சமுதாய ரீதியாகவும் இன் சுவை நிறைந்து காணப்படுகிறது. அறிவு. புத்தி பலம் என்றால் அன்பு, கருணை. நற்பண்பு, பக்தி, ஈடுபாடு நட்பு, நம்பிக்கை, உண்மை இவை யாவும் மனோபலமாகும்.

புத்தி பலத்தை விட மனோபலம் சிறந்தது. இவையெல்லாவற்றையும் ஒன்று படுத்தி அதற்கு வித்யா என சான்றோர்கள் பெயரிட்டுள்ளனர். தற்காலத்து கல்விமுறை இந்த 'வித்யாவில் அடங்காது. வாழ்வில் முன்னேற வித்யா அவசியம்யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் அத்தியாயம் 49

# அறநெறி அறிவுநொடி




**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்


**19774) அரி என்பதற்குரிய பொருள் என்ன?** *இயற்கையின் அதிபர்*

**19775) கேசவன் என்பதற்குரிய பொருள் என்ன?** *அளவிடப்பட முடியாதவன், வாயால் விவரிக்கப்பட முடியாதவன்.*

**19776) ஸ்ரீதரன் என்பதற்குரிய பொருள் என்ன?** *இலக்குமியை மார்பில் கொண்டவன்*

**19777) வாசுதேவன் என்பதற்குரிய பொருள் என்ன?** *அனைத்து உயிர்களில் வசிப்பவன்*

**19778) விட்டுணு என்பதற்குரிய பொருள் என்ன?** *எங்கும் பரந்திருக்கும் இயல்பினன்*

**19779) மதுசூதனன் என்பதற்குரிய பொருள் என்ன?** *மது எனும் அசுரனை கொன்றதால்*

**19780) மாதவன் என்பதற்குரிய பொருள் என்ன?**
*பெரும் தவம் செய்பவன்*

**19781) புண்டரீகாட்சன் என்பதற்குரிய பொருள் என்ன?** *தாமரை போன்ற கண்களை உடையவன்*

**19782) தாமரைக் கண்ணன் என்பதற்குரிய பொருள் என்ன?**
*தாமரை போன்ற கண்களை உடையவன்*

**19783) செனார்தனன் என்பதற்குரிய பொருள் என்ன?** *தீயவர்களின் இதயங்களில் அச்சத்தை விளைவிப்பதால் ஜனார்த்தனன்*

**19784) சாத்வதன் என்பதற்குரிய பொருள் என்ன?**
*அவனை விட்டு எப்போதும் விலகாததாலும், அவனும் சாத்வ குணத்தை விட்டு விலகாமல் இருப்பதாலும்*

**19785) "விருசபம்" என்பது எதனைக் குறிக்கும்?** *"வேதங்களைக்" குறிக்கும்.*

**19786) "இச்சணம்" என்பது எதனைக் குறிக்கும்?** *"கண்ணைக்" குறிக்கும்.*

**19787) இவையிரண்டும் இணைந்த விருபாட்சணன் எதனைக் குறிக்கும்?**
*வேதங்களே அவனது கண்கள் என்றோ, வேதங்களே அவனைக் காண்பதற்கான கண்கள் என்றோ குறிக்கின்றன*

# வரலாற்றுபுகழ்மிகு தில்லை மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்தஉற்சவம்

**விண்டுர மழை பொழியுஞ் சிறப்பதனால் வளம் மலிந்து மிகுந்து தோன்றும்**
**மண்டூரில் உறை முருகன் மலரடிக்கோர் திருப்பதிகம் மரபிற் சொற்றான்**
**கண்டுமினிய மொழிப் பெரியதம்பிப்பிள்ளை எனும் கலை வல்லோனே'**




எனும் பாடலானது வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாற் பாடப் பெற்றது. இப்பாடலிலே அனைத்து வரிகளும் மண்டூர் பதியின் சிறப்பை செப்பி நிற்கின்றன. மண்டூர் கவிஞர் பெருமானாகிய புலவர் மணிப்பெரியதம்பிப்பிள்ளை 1922ஆம் ஆண்டில் வெளியீடு செய்த மண்டூர்ப்பதிகம் எனும் கவிதை சிறப்புப் பெற்று விளங்குகின்றன. இவற்றினை பண்டிதர் வி.சி. கந்தையா தமது சைவக்கோயில் எனும் நூலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு வாவியின் தெற்குப்புறத்தே வாவிக் கரையோரமாக அமைந்துள்ள ஒரு பாரம்பரிய விவசாயக் கிராமம் மண்டூராகும். இங்குஅமைந்திருக்கின்றமுருகன் ஆலயம் 'சின்னக்கதிர்காமம்' என்று சிறப்பு பெற்றது. கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்களில் அல்லது தேசத்துக் கோயில்களில் ஒன்றாகும். இந்த ஆலயம் பண்டையமன்னர்களின் மதிப்பும் மானியங்களும் நிருவாக அமைப்பும் பெற்றதாகக் கொள்ளப்படுகின்றது. முற்காலத்தில் வகுக்கப்பட்ட நிருவாக அமைப்பும் பழைய வழிபாட்டு பூசை மரபுகளும் இன்றுவரை மாற்றமின்றி பேணப்பட்டு கட்டிக் காத்து வருவதே இவ்வாலயத்தின் சிறப்புமிக்க தொன்றாக காணப்படுகின்றன.

### ஆலயவரலாறு

முருகன் சூரனைகொல்லவிட்டவேலானதுவாகூரமலையைப் பிளந்து மூன்றுகுளம்,கல்லிக் கடலில் வீழ்ந்த போதுஎழுந்ததீப்பொறிகளில் ஒன்றுஉகந்தமலையுச்சியிலும்,மற்றயவைவெள்ளைநாவற்பதி (திருக்கோவிலிலும்) மற்றையதீப்பொறிதில்லைமரத்தில் தங்கியதாகஐதீகக் கதைஎடுத்துக்காட்டுகின்றது. மண்டூரில் இவ்வாறு இடம்பெற்றவேலாயுதமானது மரத்தில் தங்கியிருந்தபோதுஅப்பகுதியில் வாழ்ந்தவேடர்கள் அதனைக் பாதுகாத்துபோற்றிமனபக்தியோடுபூசைசெய்துவழிபட்டுவரலாயினர் இதன் பின்னர் மட்டக்களப்புவாவியில் மீன்பிடிப்பதற்குவந்து இளைப்பாறுவதற்குகரைசேர்ந்தபோதுதுறைநீலாவனைச் சீர்பாதகுலத்தார் சிலரும் அவ்வேடருடன் சேர்ந்துவழிபட்டுசிறப்பித்துள்ளனர் என்றுகர்ணபரம்பரைக் கதையில் இருந்துஅறியக்கிடைக்கின்றன.

மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியிலே முக்குவ வன்னிமைகள் சிற்றரசர்களாக இருந்தனர் என்று சரித்திரக் கூற்று எடுத்துக்காட்டுகின்றது. அன்னாருடைய அங்கிகாரமும் அதிகாரமும் பெற்றுக் கொள்ளுதல் பொதுத் தலங்களுக்கெல்லாம் நிதியும் சிறப்புமாக இருந்தமையால் அதன்படி தேசத்தலைவனான முக்குவ வன்னிமையின் தலைமையில் கோவில் அமைப்பும் நிருவாக ஒழுங்குகளும் வகுக்கப்பெற்றன. அன்னாரால் பல மானியங்களும் கோவில் பரிபாலனத்திற்காக வழங்கப் பெற்றிருந்தன. எனவே வன்னிமையின் திட்டத்தின்படி கவுத்தன் குடிவேளாளர் குலத்தினர் கோயில் பரிபாலனத்திற்காக கோரக்களப்பில் இருந்து குடியமர்த்தி வண்ணக்கர் பதவியினையும், சுவாமி தூக்குதல் போன்ற பொறுப்புகளை வழங்கி நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

தில்லைமண்டூர் முருகன் அருள் வளத்தினால் நிலவளமும்; மற்றும் பொருள் வளமும் கோயிலில் அதிகமாக கிடைக்கப் பெற்றதாலேஆலய சொத்துக்களின் வரவு செலவுகளை ஒழுங்குபடுத்துவதற்கு முக்கியமல்லாத செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்குமாக நான்கு கணக்குப் பிள்ளைகளை நியமனம் பெறும் ஒழுங்கும் தேசத்து வன்னிமைகளால் திட்டமிடப்பட்டது. இக்கோயிலின் அயற் கிராமங்களும் அக்கோவில் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தோர் வாழ்பதிகளுமானதுறைநீலாவனைகுருமன்வெளிகோட்டைக்கல்லாறு,பெரியகல்லாறுஎன்னும் நான்குகிராமங்களிருந்துமே இவர்களின் நியமனம் இடம்பெற்றிருந்தன. பெரியகப்புகன் உரித்துசீர்பாதர் குலத்தில் ஒரு குடியான சிந்தாத்திர குடியினருக்கும் பூசைக் கப்புகன் உரித்து சிங்களக் குடியினருக்கும் கவுடாக்காரன், கங்காணிபதவிகளும், தரை கூட்டுதல், கழுவுதல்,பொருட்களை கழுவுதல்,சந்தனம் அரைத்தல், நெல்குற்றல்,மா இடித்தல், அமுது செய்தல் என உள் வெளிப் பணிகளும் கோயிலருக்கும் என்று வலுவான திட்டம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கவையாகும்.

### ஆலயத்தின் அமைவிடம்

மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயமானது கதிர்காமத்தை போன்றதாகவே தெற்கு புறத்தே வாசலைக் கொண்டு பழமை மாறாது மட ஆலயமாகவே எளிதான முறையில் அமைந்துள்ளதுடன் உள்ளே பிள்ளையார் ஆலயமும், நாகதம்பிரான் ஆலயம் ஏனைய பரிபால மூர்த்திகளுக்குரிய ஆலயம் அமைந்துள்ளதுடன் வாசல் முன்பாக கொத்து பந்தல் அமைத்து அழகுபடுத்தும் காட்சிகளும் வெளிவீதியில் தெய்வானை அம்மன் ஆலயமும், வள்ளியம்மன் ஆலயமும் அமையப் பெற்றுள்ளதுடன் அன்னதான மடங்களும் சிறப்பாக அமையப் பெற்றுள்ளன.

### ஆலய பூசை முறைகள்

இவ்வாலயத்தில் பூசைமுறையானது கதிர்காமத்தை போலவே மௌனபூசை இடம்பெறுகின்றது. கதிர்காமத்தில் 'கப்புறாளை' அவர்கள் மேற்கொள்ள மண்டூர் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் 'கப்புகனார்' அவர்களால் வாய்க்கு துணிகட்டி மூல மூர்த்தியின் திரை திறக்கப்படமால் பூசைகள் நடைபெறுகின்றன. கதிர்காமத்தை போன்ற சகல விடயங்களும் அமையப்பெற்றுள்ளதால் இவ்வாலயத்தை சின்னக் கதிர்காமம் என்றே குறிப்பிடுகின்றனர்.

இத்தகையசிறப்புமிக்க மண்டூர் முருகன் ஆலயத்தின் உற்சவம் கதிர்காமத் தீர்த்தோற்சவம் முடிந்து பத்தாம் நாள் அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21ஆம் நாள் ஆவணி மாத பூரணைத் தினத்தில் தீர்த்த நாளாகக் கொண்டு உற்சவ திருவிழாக்கள் நடைபெறகின்றன. இந்த வகையில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழாக்கள் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாட்கள் நடைபெற்று 30.08.2023 ஆம் திகதியன்று தீர்த்தோற்சவம் இடம் பெறவுள்ளன. எனவே இத்தகைய மகிமை பொருந்தியதில்லை மண்டூர் முருகன் ஆலயத்தின் உற்சவகாலங்களில் அடியார்கள் வருகைதந்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி அவனருள் பெறுக.


**கலைச்சுடர், இலக்கியவித்தகர்**
**நாராயணபிள்ளை நாகேந்திரன்**
**(JP) ஓய்வு நிலை அதிபர்**
**களுவாஞ்சிகுடி**

### விவேகா பயிற்சி நிலையத்தின்

# நவீன தொழில்நுட்ப நேரலை இணைய வகுப்புகளுக்கான ஆரம்ப நிகழ்வு

விவேகா பயிற்சி நிலையத்தின் அழைப்பின் பேரில் இந்தியாவில் இருந்து வருகைதரும் Resileo Labs LLP நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் பி. நாகராஜன், இணை துணை தலைவர் எஸ். சிவசுப்பிரமணியன், நிர்வாக இயக்குனர் பிரதாப் சேது இணைந்து நடத்தும் நவீன தொழில்நுட்ப நேரலை இணைய வகுப்புகளுக்கான ஆரம்ப நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு வெள்ளவத்தை, சைவ மங்கையர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

விவேகா பயிற்சி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர் கே. டீ. குருசுவாமியின் தலைமையில், தலைவர் பழ. புஸ்பநாதன் முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்வில் மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் போஷகர் ஆர். மகேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். சைவ மங்கையர் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி அருந்ததி இராஜ விஜயன் முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார். தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேஷன், கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## 13 ஆவது திருத்த சட்டத்தை... (03 ஆம் பக்கத் தொடர்)

எடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றிப்பெறாதென்றும் கூறினார்.

கொழும்பில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய உதய கம்மன்பில எம்.பி, 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக கூறிக்கொண்டு ஜனாதிபதி பிரச்சினைகளை தோற்றுவிக்க முயற்சி செய்கின்றாரென்றும் அவர் குற்றம் சாட்டினார். அரசியலமைப்பின் ஒரு திருத்தமாக காணப்படும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த புதிதாக சட்டத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏதும் கிடையாதென்றும் 13 பிளஸ் அமுல்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறாரென்றும் உதய கம்மன்பில குற்றம் சாட்டினார்.

இதேவேளை விகிதாசார தேர்தல் முறைமையை இரத்துச் செய்ய முற்பட்டால் வடக்கு,கிழக்கிலுள்ள சிறுபான்மை சிங்களவர் உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதித்துவத்தில் பாதிக்கப்படுவரென்றும் உதய கம்மன்பில எம்.பி தெரிவித்தார். வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர், முஸ்லிம்கள் குறித்து கவனம் செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சிங்களவர்களை இரண்டாம் பட்சமாக்கியுள்ளாரென்றும் குற்றம் சாட்டினார்.



கள் எலிய இஸ்லாமியப் பெண்கள் அரபுக் கல்லூரியில் சுமார் 16 கோடி ரூபா செலவில் குவைட் நாட்டின் பைத்துல் ஸகாத் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் ISRC நிறுவனத்தின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மாணவர் விடுதி கட்டிடமானது நேற்று முன்தினம் (12) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு குறித்த மாணவர் விடுதி கட்டிடத்தை வைபவரீதியாக திறந்து வைப்பதையும் குவைத் தூதரக உயர் அதிகாரிகளையும் படத்தில் காணலாம்.

## வரலாற்று ரீதியான... (03 ஆம் பக்கத் தொடர்)

வாழ்ந்த இராவணேசன் என்ற தமிழ் மன்னனுடைய ஆட்சிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டே இராவணன் பற்றிய வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. மன்னன் இராவணன் இந்த மண்ணுக்கே உரித்தான மூத்த தமிழ் குடிமகன். நாகர் என்ற கோத்திரத்தை அடிப்படையாகக் கொண்டவர்.

அவரே கன்னியாவில் வெந்நீர் ஊற்றை உருவாக்கினார். தன்னுடைய தாயின் அந்தியேட்டிக் கிரியையை நிறைவேற்றுவதற்காகவே அவர் கன்னியா வெந்நீர் ஊற்றை உருவாக்கினார்.

## GCE (A/L) பரீட்சை ... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆகஸ்ட் மாத இறுதிக்குள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கூறியுள்ளதாகஅந்த இணையத்தளம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## புதிய கொரிய தூதுவருடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

நவீன தகவல் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி இலங்கை ரயில் சேவை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையை டிஜிட்டல் மயமாக்குவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

## திடீர் மரண விசாரணை... (03 ஆம் பக்கத் தொடர்)

துறைகளும் மிகுந்த பரஸ்பர புரிந்துணர்வுடன் நாட்டு மக்களுக்கு சேவையாற்றுவதற்கு தேவையான வசதிகளை அதிகரிக்க வேண்டும்.

## இரத்தினக்கல், ஆபரணத்... (03 ஆம் பக்கத் தொடர்)

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடையவில்லை என்றும், வருடாந்தம் குறைந்தது இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்களை இலக்காகக் கொள்ள திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிலை மேம்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் உடனடியாக முன்வைக்கப்பட்டால் தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும உள்ளிட்ட குழு உறுப்பினர்கள் உட்பட துறைசார் நிறுவனங்களின் தலைவர்களும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## பிரபல தனியார்...

மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் மருத்துவமனைக்கு வழங்கிய இலட்சக்கணக்கான பணத்துக்கான 20 வீதம் சிறப்புத் தள்ளுபடியை மருத்துவமனையின் கட்டணப் பிரிவுத் தலைவர் உட்பட 06 பேர் கொண்ட குழு மோசடியாகப் பெற்றதாக அந்த அதிகாரி கூறினார்.

இந்த மோசடி தொடர்பில் அதன் பணிப்பாளர் சபையினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், அதிகளவான நோயாளர்களில் சுமார் 200 பேரிடமிருந்து வாக்குமூலங்கள் இதுவரை பெறப்பட்டுள்ளன. நோயாளி ஒருவர் சிகிச்சை முடிந்து மருத்துவமனையை விட்டு வெளியேறும் போது, மருத்துவமனைக்கு செலுத்த வேண்டிய முழு கட்டணத்தையும் செலுத்த வேண்டும் என்றும், மருத்துவமனை அளிக்கும் சிறப்புத் தள்ளுபடிக்கு எழுத்துப் பூர்வமாகக் கோரிக்கைக் கடிதம் அளித்த பின்னர், அதை வழங்குவது மருத்துவமனையின் வழக்கமான நடைமுறை என தகவல்கள் கூறுகின்றன. அந்த சிறப்புத் தள்ளுபடியைப் பற்றி பெரும்பாலான நோயாளிகள் தெரிந்து கொள்ளாததை சாதகமாக்கிக் கொண்டு, கட்டணப் பட்டியல் பிரிவின் தலைவர் உட்பட ஆறு பேர் கொண்ட குழு, சிறப்புத் தள்ளுபடி கோரி மருத்துவமனையில் வசிக்கும் நோயாளி அல்லது நோயாளியின் நெருங்கிய உறவினர் சமர்ப்பித்தது போன்ற கடிதத்தை தயாரித்து பணத்தைப் பெற்றுள்ளனர்.

இந்த பண மோசடி பல வருடங்களாக நடத்தப்பட்டு வருவது தற்போது தெரியவந்துள்ளது. சிறப்பு தள்ளுபடி பணம் பெட்டி காஷ் (சிறிய செலவுகளுக்கு ஒதுக்கப்பட்ட பணம்) பணத்தில் வழங்கப்பட்டுள்ளது. மோசடி கண்டுபிடிக்கப்பட்டவுடன், கட்டணப்பட்டியல் தலைவர் உட்பட 06 பேர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வெளிநாடுகளில்...

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் இணையத்தளம் ஏற்கனவே வீட்டுத் தேவையிலுள்ள வெளிநாட்டுப் பணியாளர்கள் தொடர்பில் கணக்கெடுப்பொன்றை மேற்கொண்டுள்ளது.

அத்துடன், சுமார் 1,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், மாவட்ட மட்டத்திலும் வீடுகள் தேவைப்படும் புலம்பெயர்ந்த தொழிலாளர் குடும்பங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் பணியில் ஈடுபட்டுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## செவிப்புலனற்றோருக்கும்..

நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவால் நேற்றுமுன்தினம் (12) மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விசேட நடமாடும் சேவை குருநாகல் ஜோன் கொத்தலாவல கல்லூரி வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நடமாடும் சேவை இரண்டு நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டங்களின் பின்னர், அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு அமைய, செவிப்புலனற்றோருக்கும் விசேட சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரிந்துரைகள் மற்றும் எழுத்துப் பரீட்சைகள், வாகனப் பரிமாற்றம், சாரதி அனுமதிப்பத்திரம், தொழில்துறை உட்பட ஏனைய நிறுவனங்களின் சேவைகள், போக்குவரத்து மருத்துவ நிறுவனங்களின் சேவை, வங்கி, காப்புறுதி மற்றும் குத்தகை உள்ளிட்ட பல சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு வடமேற்கு மாகாண மக்களுக்கு கிடைத்துள்ளது.

நிகழ்ச்சியின் ஆரம்ப விழாவில் பேசிய அமைச்சர்,

"இந் நடமாடும் சேவையானது சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட மிக முக்கியமான சமூகப் பாதுகாப்புத் திட்டமாக அழைக்கப்படலாம். தற்போது வடமேற்கு மாகாணத்தில் சுமார் 77,000 செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் வாழ்கின்றனர். அந்தக் குழுவிற்கும் நாடளாவிய ரீதியில் செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கும், செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரம் பெறுவதில் தடைகள் உள்ளன. சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழுவாக, செவித்திறன் குறைபாடுள்ளவர்களும் தங்கள் அன்றாட நடவடிக்கைகளுக்கு வாகனங்களை ஓட்ட வேண்டிய தேவையுள்ளது. இவர்களில் பலர் வாகனம் ஓட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு அரசுகளிடம் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்தும், முறையான சாரதி அனுமதி பத்திரம் பெற முடியவில்லை.

நாளை முதல், இந்த விசேட தேவையுடையவர்கள் அச்சமின்றி, சந்தேகமின்றி சட்டப்பூர்வமாக வாகனம் ஓட்டும் வாய்ப்பைப் பெறுவார்கள். அவர்களுக்கு சிறப்பு அடையாள சின்னத்துடன் வாகனம் ஓட்டும் உரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் முதன்முறையாக வாகனம் ஓட்டுவதற்கான சட்டப்பூர்வ உரிமையைப் பெற்ற சிறப்புத் தேவையுடைய செவித்திறன் குறைபாடுள்ளவர்களைக் கண்டறிந்து காவல்துறை உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் தெரியப்படுத்துவது ஊடகவியலாளர்கள் உட்பட நம் அனைவரினதும் பொறுப்பாகும்.

சமூகத்தால் பாரபட்சம் காட்டப்படுவதைத் தவிர்த்து, வாழ்க்கைக்கு மேலும் மதிப்பு சேர்க்க அரசாங்கம் வழங்கிய இந்த சிறப்பு வாய்ப்பின் மூலம், பொறுப்புடன் வாகனம் ஓட்டுவதற்கும், நாட்டுக்கு பயனுள்ள பணியை நிறைவேற்றுவதற்கும் இந்த குழுவுக்கு பலம் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

## இந்திய உதவியுடன்...

இலங்கை அரசாங்கம் ஒக்டோபர் மாதம் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகளுக்காக 450 மில்லியன் ரூபாவை சாகல ரத்நாயக்கவிடம் கையளித்தார்.

இத்திட்டத்துக்காக, உலகின் பல முக்கிய தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனங்கள் இலங்கைக்கு இலவச அறிவை வழங்குவதோடு, மேலும் பில் கேட்ஸின் நிறுவனத்தின் அடிப்படை நிறுவனமான மெலிண்டா கேட்ஸ் மன்றமும் அவற்றில் அடங்கும்.

இந்தியா தற்போது டிஜிட்டல் அடையாள அட்டையை அந்நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளதுடன், அதே வடிவத்தில் இலங்கை மக்களுக்கும் டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது.

ஒரு நபரின் உயிரியல் தகவல் (இரத்த வகை போன்றவை) உள்ளிட்ட அனைத்து விவரங்களும் அவருக்கான தனி ஒன்லைன் கணக்கில் சேமிக்கப்படும். அவருடைய ஒப்புதலுடன், வங்கிப் பரிவர்த்தனைகள் அல்லது பிற நிறுவனத் தேவைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் இந்தத் தகவல்களைப் பரிந்துரைக்கும் வசதியும் இந்த புதிய அடையாள அட்டையுடன் உள்ளடக்கப்படும்.

நபரொருவருக்கு பணித் தேவைகளைப் பூர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்குச் செல்லாமல் இணையத்தளம் மூலம் பெற வசதிகள் கிடைக்கும்.

முழு நாட்டையும் இலத்திரனியல் வலயமாக மாற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின்படி இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இது இந்திய அரசாங்கத்தின் பூரண ஆதரவின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கும் பணியை அடுத்த ஆண்டு இறுதிக்குள் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.

## அரச நிறுவனங்களின்...

கடுமையான கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தும் செயல்பாட்டை தொடர்ச்சியாக பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென திறைசேரியின் செயலாளர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். அனைத்து வரவு செலவு யோசனைகளிலும் உச்ச அளவு பிரதிபலன் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கிடைக்கும் வகையில் ஆகக் குறைந்த செலவுகள் மூலமாக மாற்றத்தை ஏற்படுத்துவதை பொது நோக்கமாகக் கொண்டு வரவு செலவுத் திட்ட யோசனையை தயாரிக்க வேண்டும் என்றும் அவர் அந்த அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

புதிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையான 04/2023 ம் இலக்க சுற்றறிக்கையை வெளியிட்டு அவர் இந்த பணிப்புரையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

அனைத்து அரச நிறுவனங்கள் மூலம் நிலையான மற்றும் உயர்மட்ட பொருளாதார அதிகரிப்பை மேற்கொள்ளும் வகையில் வரவு செலவுத் திட்டத்திற்கு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் ஒரு நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் சேவைகள் மேலும் ஒன்று அல்லது இரண்டு நிறுவனங்களில் மேற்கொள்ளாத வகையில் கவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம் என்றும் அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வரவு செலவுத் திட்டத்தில் அதிக நிதியை ஒதுக்க வேண்டிய 10 அமைச்சுகள் தொடர்பில் நிதியை ஒதுக்குவதற்கு விசேட முறைமையொன்றை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக செலவுகளை மீளாய்வு செய்வதற்காக 10 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அந்த குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைச்சரவைக்கு செலவினங்கள் தொடர்பான யோசனையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் திறைசேறியின் செயலாளர் அதன் மூலம் குறிப்பிட்டுள்ளார்.

## "மாதிவெல" MP....

இருப்பதாக தொடர்ந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதன்படி அவற்றுள் வீடுகள் கொடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் மாத்திரமே வசிக்க முடியும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சேவைப் பிரிவு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளது.

## "செப்டிசிடைம்"...

விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

எவ்வாறாயினும், கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் செப்டிசிடைம் என்ற தடுப்பூசியை செலுத்தியதன் பின்னர் மற்றுமொரு நோயாளர் உயிரிழந்தார். இத் தடுப்பூசி செலுத்தியதால் ஏற்பட்ட ஒவ்வாமையே அவரது மரணத்துக்கு காரணமென பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

## கடும் நெருக்கடியிலும்...

செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும், கற்பிட்டி, நுரைச்சோலை நிலக்கரி ஆலையிலுள்ள மின் உற்பத்தி இயந்திரம் ஏற்கனவே செயலிழந்துள்ளது.

## பாகிஸ்தான் இடைக்கால ...

ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 ஆம் திகதி ஆரம்பமானது. அதன் ஆயுட் காலம் நிறைவடைவதற்கு 03 நாட்களுக்கு முன்னதாகவே பாராளுமன்றம் கடந்த புதன்கிழமை கலைக்கப்பட்டது. இதனையடுத்து பொதுத் தேர்தலை இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## எரிபொருள் பௌசருடன்...

காரில் பயணித்த ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கள் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்,

## வடக்கில் டெங்கின் ...

போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது பகுதிகளில் டெங்கு நோயின் தாக்கம் குறைவாக காணப்பட்டாலும் எதிர்வரும் ஒரு மாதங்களில் மழை வரலாமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடுமென எச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

## இலங்கை மாணவியின்...

செயற்பாடுகளில் எவ்வாறு நெருக்கடிகளை சந்திக்கின்றனர் என்பதை ஊடகங்கள் ஊடாகப் பார்த்த பின்னரே தாம் இதற்கான முயற்சியை மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரவளையிலுள்ள 05 பாடசாலைகளுக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான மடிக்கணினிகள் மற்றும் புத்தகங்களை அவர் வழங்கியுள்ளார்.

அமெரிக்க பாடசாலையொன்றில் கல்வி கற்கும் இலங்கை மாணவியான 17 வயதான செனுலி பீரிஸ் என்பவரே இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளார்.

## இரட்டை ரயில்...

சுட்டிக்காட்டியுள்ளார். அபிவிருத்தி செய்யப்பட்ட கெக்கிராவ தலாவ வீதியை மக்கள் பாவனைக்கு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## 110 வயதில்...

நிலையத்தின் உதவியுடன் தனது கல்வியை மீளத் ஆரம்பித்துள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தாயான நவ்தா அல்கஹ்தானியின் மூத்த பிள்ளைக்கு 80 வயதாகிறது, அவரது கடைசி ஆண் பிள்ளை தனது 50 களில் இருக்கின்றார். படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வது தனது வாழ்க்கையை மாற்றியுள்ளதாக சர்வதேச ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

## தீ விபத்தில்...

தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர். தீ விபத்தில் மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், கடும் தீக்காயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட கணவன் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## எதிர்காலத்தில்...

தேசிய கல்வி நிறுவகம் மற்றும் கல்வி தொடர்பான நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றினூடாக இது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதற்கமைய பத்தாம் தரத்தில் கல்வி பொதுத் தராதரப் பரீட்சையை நடத்துவதற்கு ஏதுவான வகையில் 06,07,08 மற்றும் 09ஆம் தரத்துக்கான பாடத்திட்டங்களை ஒழுங்கமைப்பது குறித்து இந்த நிபுணர் குழுவினூடாக அவதானம் செலுத்தப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

## கடந்த கால...

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் வெற்றியடைவதால் மாத்திரம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது என்றும், சரியான தீர்மானங்களுடன் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

புதிதாக சிந்தித்து, புதியதொரு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லாவிட்டால், இன்னும் 10 வருடங்களில் நாடு மற்றொரு பொருளாதார சவாலை எதிர்கொள்வது தவிர்க்க முடியாதது என்றும் தெரிவித்தார்.

மாத்தளை புனித தோமஸ் ஆண்கள் கல்லூரியின் 150ஆவது ஆண்டு விழாவில் (13) முற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துத் துறைகளையும் நவீனமயமாக்கி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதே தனது எதிர்பார்ப்பு என்றும், அதற்கு அவசியமான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ள, தொழில்நுட்ப ஊக்குவிப்பு சபை மற்றும் நாட்டில் டிஜிட்டல் மாற்றத்தை துரிதப்படுத்த டிஜிட்டல் மாற்ற ஆணைக்குழு ஆகியவற்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதமராக இருந்த விஜயாநந்த தஹநாயக்கவுக்குப் பின்னர், மாத்தளை புனித தோமஸ் கல்லூரிக்கு முதல் தடவையாக விஜயம் செய்யும் அரச தலைவராக இன்று காலை கல்லூரிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி, கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிறுவப்பட்டுள்ள நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்ததுடன், பழைய மாணவர் சங்கத்துடன் குழு புகைப்படத்திற்கும் இணைந்துகொண்டார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற கல்லூரி மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

மாத்தளை புனித தோமஸ் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 150 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இப்பாடசாலை நிறுவப்பட்ட போது இந்த நாடு பெருந்தோட்டப் பொருளாதாரத்தைக் கொண்டிருந்தது. கோப்பி பயிர்ச்செய்கை பாரிய அளவில் விரிவடைந்திருந்தது. ஆனால் ஒரு சில வருடங்களில் கோப்பிப் பயிர்ச்செய்கை முற்றாக அழிவடைந்து பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து அரசாங்கத்துக்கு வருமானம் இல்லாமல் போனது. 15 20 வருடங்களின் பின்னர் தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படும் வரை நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

புதிய பெருந்தோட்டப் பயிர்களாக தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் நல்ல நிலைக்குத் திரும்பியது.

மாத்தளை புனித தோமஸ் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழா இன்று கொண்டாடப்படும் நிலையிலும், நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. கடந்த வருடம் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், நாடு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டது.

இந்த நெருக்கடியில் இருந்து மீண்டு வருவோம் என்று அப்போது யாரும் நம்பவில்லை. மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்த பிறகு அந்தப் பொறுப்பை ஏற்க யாரும் முன்வரவில்லை என்பது இதற்கு ஒரு நல்ல உதாரணம். பொதுவாக, ஏனைய சந்தர்ப்பங்களில், பிரதமர் பதவியை கைப்பற்ற வரிசையில் வருவார்கள். ஆனால் அப்போது யாரும் முன்வரவில்லை.

ஆனால் அந்தப் பின்னணியில் நான் ஜனாதிபதி பொறுப்பை ஏற்று, அமைச்சரவையை உருவாக்கி நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குக் குறுகிய கால மற்றும் நீண்டகால தீர்வுகளைத் தேட ஆரம்பித்தேன். நாங்கள் எடுத்த தீர்மானங்களால், நாட்டில் அன்று இருந்த வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வர முடிந்தது. மேலும், கடந்த ஆண்டு செப்டம்பர், மற்றும் இந்த வருட ஜனவரி, ஏப்ரல் மாதங்களில் அரசாங்கம் என்ற முறையில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பலனை மக்கள் இப்போது அனுபவித்து வருகின்றனர். இந்த வருட இறுதிக்குள், கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து விடுவிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் அதைச் செய்ய அரச செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். அதேபோன்று நாடு உற்பத்திப் பொருளாதாரத்திற்கு மாறுவதும் அவசியம். அந்தத் திட்டத்தை தற்போது செயல்படுத்தியுள்ளோம். இன்று நாம் எடுக்கும் நடவடிக்கைகளால் நாடு “வங்குரோத்தாகிவிட்டது” என்று குத்தப்பட்ட முத்திரையை அகற்ற முடிந்தாலும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை விரைவில் எடுக்காவிட்டால் இன்னும் 10 வருடங்களில் மீண்டும் நாம் வங்குரோத்து நிலையை அடைவோம். எனவே புதிய பொறிமுறையின் மூலம் அரசாங்கத்தின் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# தென்கிழக்கு கரையோர தனியார்பஸ் உரிமையாளர் சங்கத்தினர் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

## போக்குவரத்து பயணவழிப் பாதையில் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்குமாறு வேண்டுகோள்

தென்கிழக்கு கரையோரப் பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பஸ்உரிமையாளர் சங்கத்தினர் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானை கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் விநியோக்கிப்பட்ட முறையற்ற போக்குவரத்து பயண வழி அனுமதிப்பத்திரங்கள், அதனால் முறையாக பயணவழி அனுமதியை பெற்றுக்கொண்ட பஸ் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன், கீழ்வரும் கோரிக்கைகளையும் தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் ஆளுநரிடம் முன்வைத்திருந்தனர்.

கல்முனை_ கதுருவெல வீதியில் சேவையில் ஈடுபட்டு வந்த தனியார் பஸ் ஒன்று 2023.07.09 ஆம் திகதி மன்னம்பிட்டியில் விபத்துக்குள்ளாகி அப்பாவிப் பொதுமக்கள் 11பேர் பலியானதுடன், 40 பயணிகளுக்கு பலத்தகாயம் ஏற்பட்டமை சம்பந்தமாக கிழக்கு மாகாண ஆளுனரினால் விஷேட குழு ஒன்று நியமிக்கப்பட்டு இது தொடர்பான உண்மைத்தன்மை வெளியிடப்பட வேண்டுமென்று ஆளுநரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் முறையற்ற முறையில் வழங்கப்பட்ட 13 சொகுசுபஸ் வண்டிகளுக்கான அனுமதிபத்திரங்கள் கல்முனை மேல்நீதிமன்றத்தினால் இரத்து செய்யப்பட்டது. இது விடயமாக கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் கொழும்பு மேன்முறையிட்டு நீதிமன்றத்தினால் வழக்கு தொடர்ந்துள்ளமை தொடர்பான விடயத்தில் ஆளுநர்அவதானம் செலுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.



கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் இடம்பெற்று வந்த நிதி மோசடி மற்றும் ஊழல்கள் சம்பந்தமாக ஆதாரங்களை வழங்கியிருந்தும் கிழக்கு மாகாணத்தில் பதவியில் இருந்த ஆளுநர்களோ, அரச உயர் அதிகாரிகளோ இதுவரை நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. குறித்த விடயத்திற்கு தற்போதைய ஆளுநராகிய தாங்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினால் முறையற்ற முறையில் வழங்கப்பட்ட பஸ் அனுமதிபத்திரங்கள் தொடர்பில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுனரின் கவனத்திற்கு கொண்டு வந்தபோது அதனை இடைநிறுத்தியிருந்தார். ஆனால் குறித்த பஸ் வண்டிகளின் அனுமதிப்பத்திரங்கள் கடந்த 2023.07.23 ஆம் திகதி நீடித்து வழங்கப்பட்டுள்ளன. எனவே இதற்கான உடனடிநடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஊழலற்ற ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் சிந்தனைக்கு அமைவாக, கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் இடம்பெற்று வரும் முறைகேடுகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறுதென்கிழக்குகரையோர பிரதேச தனியார் பஸ் சங்கத்தினர் தொடர்ச்சியாக குரலெழுப்பி வருகின்றனர். இதனால் குறித்த சங்கத்திலுள்ள பஸ் உரிமையாளர்கள் நாளாந்தம் கிழக்குமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகளால் பழிவாங்கும் செயல்பாடுகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். எனவே இவ்விடயம் தொடர்பாக ஆளுநர் அவதனாம் செலுத்த வேண்டும் எனவும் சங்கத்தினர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மேற்படி விடயங்களை கேட்டறிந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுநர், இது தொடர்பாக பிரதம செயலாளர், முதலமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடி தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உறுதியளித்திருந்தார்.



இச்சந்திப்பில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் அனில்,கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ. எம். எச். உதயகுமார, கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலக திட்டமிடல் பணிப்பாளர் எம். பாயிஸ் ஆகியோருடன் தென்கிழக்கு கரையோர பிரதேச தனியார்பஸ் உரிமையாளர் சங்க தலைவர் சிமாஸ் மௌலானா மற்றும் சங்கத்தின் செயலாளர் எம். எஸ்.பைறுஸ் உட்பட நிர்வாகத்தினர் பலரும் கலந்து கொண்டனர்.

றிசாத் ஏ. காதர்
ஒலுவில் மத்திய விசேட நிருபர்

---

# படுகொலையுண்ட அலி உதுமான் பெயரில் அக்கரைப்பற்றில் ஆரோக்கிய நிதியம் உதயம்

## அனைத்து இனங்களிலும் வயோதிபர்களின் மருத்துவ சேவைக்கு உதவி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்ப கால உறுப்பினரும், வடக்கு _கிழக்கு மாகாணங்கள் இணைந்திருந்த போது, அம்மாகாணசபையின் உறுப்பினராக இருந்தவருமான மர்ஹூம் அலி உதுமான் அவர்களின் பெயரில் 'அலி உதுமான் ஆரோக்கிய நிதியம்' என்ற அமைப்பு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றில் அன்னாரின் பெயரில் அவருடைய பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரால் 'அலி உதுமான் ஆரோக்கிய நிதியம்' அங்குரரப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. அக்கரைப்பற்று பிரதேசத்தில் பொருளாதார நெருக்கடியுள்ள தமிழ், முஸ்லிம், சிங்களக் குடும்பங்களில் வயது முதிர்ந்த நோயாளிகளுக்கு மருத்துவ ஆலோசனையுடன் பொருளாதார உதவியும் இந்நிதியத்தினால் வழங்கப்படுகின்றது.

65 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலர்களில் பொதுவாகக் காணப்படும் ஞாபக மறதி, அடிக்கடி விழுதல், சிறுநீர் கழிப்பதில் சிக்கல், நடக்கும் போது அல்லது நிற்கும் போது விழுந்து எலும்பு முறிதல், மலச்சிக்கல் மற்றும் நாட்பட்ட நோய்களுக்கு இந்நிதியத்தினால் ஆலோசனையும் மருத்துவ உதவிகளும் வழங்கப்படுகின்றன.

வீட்டில் இருக்கும் நோய் வாய்ப்பட்டுள்ள முதியோருக்கு எவ்வாறு வீட்டில் இருந்தவாறே அவர்களுடைய குடும்பத்தினர் மருத்துவ தேவைகளை வழங்குவது என்பது தொடர்பான ஆலோசனையும் வழங்கப்பட்டு வருகின்றது.

"நான் பெற்ற கல்வியினால் நாட்டுக்கும், ஊருக்கும் சேவை செய்யவேண்டும் என்றிருந்த




எனக்கு எனது தந்தையின் பெயரால் ஒரு ஆரோக்கிய நிதியத்தை ஆரம்பிப்பதில் முதுகெலும்பாக எனது குடும்பமும், ஐகோனிக் யூத்ஸ் சிறிலங்கா அமைப்பும் வழங்குகின்றன" என்று மர்ஹூம் அலி உதுமானின் புதல்வர் வைத்திய நிபுணர் அலி அக்ரம் தெரிவித்தார்.

1989.08.01ஆம் திகதி இரவு ஆயுதக்குழு ஒன்றினால் அலி உதுமான்(BA Hons) சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது 34 ஆவது நினைவு தினம் ஓகஸ்ட் முதலாம் திகதியாகும்.

மர்ஹூம் அலி உதுமான், சமூகப்பற்றும் தூரநோக்கும் கொண்டவராக விளங்கினார். கடந்த 1988 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி மாகாணசபைத் தேர்தல் முதன் முதலாக இலங்கையில் நடைபெற்றது. அதே ஆண்டில் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இணைந்த வடகிழக்கு மாகாணத்திற்கான மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றார்.

அக்கரைப்பற்றிலும், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அன்னார் தன்னாலான சேவைகளை மக்களுக்கு வழங்கியமை மட்டுமல்லாது, கட்சி வளர்ச்சிப் பணியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.



இந்நிதியத்தினால் வழங்கப்படும் இலவச மருத்துவ ஆலோசனை மற்றும் மருத்துவ உதவிகளை முன்னுரிமையோடு அவசரமாக தேவையுடையோருக்கு வழங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் வெளியிடப்பட்டுள்ளது. அதனை மருத்துவ உதவி தேவையுடைய குடும்பத்தினர் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் இச்சேவை அக்கரைப்பற்றுக்கு மாத்திரம் என்றில்லாமல் சகல பிரதேசத்திலும் உள்ள மக்கள் நன்மையடையும் வகையில் விருத்தி செய்யப்படும் என்று இந்நிதியத்தின் நிறுவனரான டொக்டர் அலி அக்ரம் தெரிவித்துள்ளார்.

எம்.எஸ்.எம்.றிஸ்வான்
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

---

# வீரமுனையில் கொலையுண்டோரின் 33 ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு

## ஆலயத்தில் விசேட ஆத்மசாந்தி வழிபாடு



அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனை கிராமத்தில் இடம் பெற்ற படுகொலைகளின் 33 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வீரமுனை ஆலய நிருவாகத்தின் ஏற்பாட்டில் வீரமுனை படுகொலை நினைவுத் தூபி முன்றலில் நடைபெற்றது. அஞ்சலி நடைபெற்ற பின்னர் ஆலய வளாகத்தில் பொதுநி



னைவேந்தல் நடைபெற்றது.

33 வருடங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் இனக்கலவரம் இடம்பெற்று வந்த காலப் பகுதியில் சம்மாந்துறை, வீரமுனை, மற்றும் அதன் சுற்றுவட்டக் கிராமங்களான வீரச்சோலை, மல்லிகைத்தீவு, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, சொறிக்கல்முனை, அம்பாறை பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் வீரமுனை சிந்தா யாத்திரைப் பிள்ளையார் கோயில் வளவினுள்ளும் வீரமுனை இராமகிருஷ்ண மிசன் பாடசாலை வளவினுள்ளும் (1990 ஜுன் மாதம் முதல் யூலை மாதம் வரை) தஞ்சம் புகுந்திருந்தனர். அவ்வேளையில் அப்பகுதிக்குள் புகுந்த கும்பல்களால் சுமார் 400 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர். கொல்லப்பட்டோரில் குழந்தைகள், பெண்கள், முதியவர்களும் அடங்குகின்றனர். அங்கு கொல்லப்பட்டோரை நினைவு கூர்ந்தும், பலியானவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் நேற்றுமுன்தினம் விசேட பூசைகளும் பிரார்த்தனைகளும் நடைபெற்றன.

அவ்வைபவத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும், பிரதேசசபையின் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உட்பட பலர் பங்கேற்றனர். அந்நிகழ்வில் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உட்பட பலரும் உரையாற்றினர். படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கண்ணீர் மல்கியவாறு வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டதைக் காண முடிந்தது.

வி.ரி. சகாதேவராஜா
(காரைதீவு குறூப் நிருபர்)

---

# பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நாளை நடத்தும் மலையகம்-200 ஆய்வு மாநாடு

பேராதனை பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஏற்பாடு செய்துள்ள 'மலையகம் 200' என்னும் தமிழ் இலக்கிய ஆய்வு மாநாடு நாளை 15.08.2023 காலை 9.00 மணியளவில் பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்க மண்டபத்தில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பெருந்தோட்டச் செய்கைக்காக தென்னிந்தியாவில் இருந்து மக்கள் அழைத்து வரப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றின் தொடர்ச்சியாகவே இந்த ஆய்வு மாநாடும் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டின் பிரதம



விருந்தினராகப் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறைப் பேராசிரியர் ச. விஜேசந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்தோடு, நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் அறங்காவலர் முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்த இலக்கிய ஆய்வு மாநாடானது மூன்று அரங்குகளாக இடம்பெறவுள்ளது. மலையக இலக்கியச் செல்நெறிக்குப் பங்களிப்புச் செய்த அறிஞர்களுடைய பெயர்களைத் தாங்கி இடம்பெறுகின்ற இந்த அரங்குகளின் வரிசையில், தமிழ்த்துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி எம். ஏ. நுஃமான் தலைமையிலான கோ. நடேசையர் மீனாட்சியம்மாள் அரங்கில் 'மலையக சமூக எழுச்சியில் அச்சு ஊடகங்களின் வகிபாகம்' எனும் தலைப்பில் இரா. மகேஸ்வரன், 'மலையக மக்களின் சமூகவியல் மாற்றங்களும் இலக்கியங்களில் அதன் மாறுபாடும்' எனும் தலைப்பில் ரா. நித்தியானந்தன், 'சி. வி.வேலுப்பிள்ளையின் எழுத்துக்களுள் அன்றும் இன்றும்' எனும் தலைப்பில் எல். ஜோதிகுமார், 'மலையகம் அரசியலும் இலக்கியமும்' எனும் தலைப்பில் மு. சிவலிங்கம் ஆகியோர் தமது ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் கலாநிதி சோதிமலர் ரவீந்திரன் தலைமையிலான சி. வி. வேலுப்பிள்ளை அரங்கில் 'மலையகத்தின் அடையாளப் பிரச்சினையின் நீட்சி' எனும் தலைப்பில் ந. சரவணன், 'மலையக நாவல் இலக்கியம்' எனும் தலைப்பில் சு. முரளிதரன், 'மலையகக் கவிதை இலக்கியம்' எனும் தலைப்பில் மல்லியப்புசந்தி திலகர், 'இலங்கை மலையகத் தமிழர் மரபும் ஆற்றுகை முறைமையும்' எனும் தலைப்பில் மு. காளிதாஸ் ஆகியோரும் தமது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் துரை. மனோகரன் தலைமையிலான பேராசிரியர் க. அருணாசலம் அரங்கில் 'மலையக சமூகமும் இலக்கியமும்' எனும் தலைப்பில் சு. தவச்செல்வன், 'மலையகச் சிறுகதை இலக்கியம்' எனும் தலைப்பில் சிவனு மனோகரன், 'மலையகத் தமிழ்ச் சஞ்சிகைகள்' எனும் தலைப்பில் இரா. சர்மிளாதேவி, 'சிங்களப் படைப்புகளில் மலையகத் தமிழ் மக்களின் வாழ்வியல்: ஒரு வெட்டுமுகத் தோற்றம்' எனும் தலைப்பில் லறீனா அப்துல்ஹக், 'மலையகத்தில் தமிழ் நாடக முயற்சிகள்' எனும் தலைப்பில் ச. லெட்சுமணன் ஆகியோரும் தமது ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

ஆய்வரங்க நிகழ்வுகளின் முடிவில் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பெருமாள் சரவணக்குமாரின் ஒருங்கிணைப்பில் முக்கிய கலந்துரையாடல் நிகழ்வும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடல் நிகழ்வில் எழுத்தாளர்களான இரா. சடகோபன், க. மகாலிங்கம் (மொழிவரதன்), சிவா. ராஜேந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர். தமிழ்த்துறையின் உதவி விரிவுரையாளர்களான செல்வி. த. ஜெலானி, செல்வி. த. விநோஜ்யா ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டிற்கு இலக்கிய ஆர்வலர்களுக்கு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை அழைப்பு விடுத்துள்ளது.



அ. லெட்சுமணன்...

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.08.11
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5203
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,612,360.00
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 5 1 2 8 8 0

தன நிதானய
தேதி 2023/08/11
சீட்டிழுப்பு இலக்கம் 1233
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,508,224.00
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 07 67 68 79
விஷேசட ஆங்கில எழுத்து S
Double Chance இலக்கம் 36912

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3445
சீட்டிழுப்பு திகதி 2023.08.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,285,907.60
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 03 14 26 67
விசேட எழுத்து U
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 20270

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1551
11/08/2023
Double Chance 74606
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.403,796,276.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 10 11 42 51

Lucky 7 லக்கி
திகதி 11.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0029
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 1 2 3 7 2 0
L7 இலக்கம் 2 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,809,103.92

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 512
சீட்டிழுப்பு திகதி 2023-08-11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,471,360.20
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 08 31 46 55
விசேட இலக்கினம் துலாம்

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.08.12
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5204
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,634,288.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 4 8 6 1 8 4

தன நிதானய
தேதி 2023/08/12
சீட்டிழுப்பு இலக்கம் 1234
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,742,264.80
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 08 57 65 81
விஷேசட ஆங்கில எழுத்து W
Double Chance இலக்கம் 08737

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3446
சீட்டிழுப்பு திகதி 2023.08.12
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,489,102.00
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 07 41 43 45
விசேட எழுத்து B
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 39210

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1552
12/08/2023
Double Chance 39453
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.403,900,492.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து P
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 40 46 67 68

Lucky 7 லக்கி
திகதி 12.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0030
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 3 7 2 2 9 7
L7 இலக்கம் 0 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,860,439.68

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 513
சீட்டிழுப்பு திகதி 2023-08-12
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,500,000.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 35 60 61 62
விசேட இலக்கினம் மிதுனம்




# வீரமுனை படுகொலை வழக்கினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்

## ஜனாதிபதிக்கு வீரமுனை மக்களின் பகிரங்க மடல்

காரைதீவு குறூப் நிருபர்

வீரமுனை படுகொலை தொடர்பான வழக்கினை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று கோரும் 'வீரமுனை மக்களின் நீதிக்கான கோரிக்கை ' என்ற தலைப்பிலான பகிரங்க மடல் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பகிரங்க மடல் கடந்த சனிக்கிழமையன்று வீரமுனை படுகொலையின் 33ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பகிரங்கமாக வாசித்து பொது மக்களால் அங்கீகரிக்கப்பட்டது.

அந்த பகிரங்க மடலில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளாவன..

01.இப்படுகொலை தொடர்பான வழக்கினை இலங்கை அரசாங்கமானது முன்னெடுக்க வேண்டும்

02.பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயமான நீதி கிடைக்கப் பெற வேண்டும்

03.குற்றம் இழைத்தவர்களை நீதிக்கு முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்

04.இம்மக்களின் தொடர் நினைவேந்தல்களை அனுஷ்டிப்பதற்கான பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும்

05.மீண்டும் நிகழாமைக்கான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். அதற்கான அரச தரப்பு முன்னெடுப்புகளை அறிவித்தல் வேண்டும்.

அதேவேளை,ஜனாதிபதிக்கான அந்த மடலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள வீரமுனை கிராமத்தில் உள்ள ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்திருந்து தஞ்சமடைந்திருந்த வீரமுனை, மல்வத்தை, வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, வீரச்சோலை ஆகியகிராமங்களைச்சேர்ந்த சிறுவர்கள்,பெண்கள் அடங்கலாக 55 பேர் 1990.08.12 அன்று வெட்டியும், குறிப்பாக சிறுவர்கள் சுவற்றில் அடித்தும் கொல்லப்பட்டதாக கண்களால் கண்ட உரிய கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.



அத்துடன் காயப்பட்டவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சாட்சியங்களை அழிக்கும் நோக்குடன் காணாமலும் ஆக்கப்பட்டதாகவும் உயிர் தப்பியவர்களால் கூறப்படுகின்றது.

## கிழக்கு மாகாண ஆளுநர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பு



மட்டக்களப்பு விசேட நிருபர்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்று வியாழக்கிழமை (10) திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது.

இச் சந்திப்பு தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் கிழக்கு மாகாண மக்கள் சமகாலத்தில் எதிர்நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆளுநருடன் கலந்துரையாடியிருந்தோம், அவற்றில் சிலவற்றுக்கு அவ்விடத்திலேயே செயலாளர்கள் ஊடாக நடவடிக்கை எடுப்பதற்கும் பணித்திருந்தார். பல்லின சமூக நல்லிணக்க விடயங்களில் ஆளுநர் மிக அக்கறை மிக்கவராக அவரது கருத்துக்கள் அமைந்திருந்தன.

மேற்படி சந்திப்பில் கிழக்கு மாகாணத்தில் படையினரின் வசமுள்ள காணிகளை விடுவிப்புக்கள் செய்வது, மயிலத்தமடு மற்றும் மாதவனை பிரதேசத்தில் தொடர்ந்தும் அத்துமீறி அபகரிக்கப்பட்டுவரும் மேய்ச்சல் தரை காணிகள் தொடர்பாகவும், கிழக்கில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபானசாலைகள், சட்ட விரோதமான மண் அகழ்வு, காணி அபகரிப்புகள், காட்டு யானைகளின் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டதுடன் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக மட்டக்களப்பு புதுநகரில் விமானப் படையினரால் வசப்படுத்தப்பட்டுள்ள வலையிறவு பிரதான வீதியினை மீளவும் பொதுமக்களின் பாவனைக்கு விட வேண்டும், தாண்டியடி பிரதேசத்தில் பொலிஸாரினால் அபகரிக்கப்பட்டுள்ள மயான காணியினை விடுவிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எம்மால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன என அவர் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், க.கோடீஸ்வரன், கி. வெள்ளிமலை ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு – ஏறாவூர் 121 முஸ்லிம் பொதுமக்கள் படுகொலை; 33 வருட நிறைவுநாள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்தில் 121 முஸ்லிம் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டு 33 வருட நிறைவுநாள் நேற்று முன்தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக ஏறாவூர் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்கள், பொதுச் சந்தைகள், உணவகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. எனினும் பிரதான வீதிப்போக்குவரத்து பாதிப்பு ஏற்படவில்லை.




சுகதாக்கள் பேரவையின் தலைமையில் பல்வேறு அமைப்புக்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஒன்றிணைந்து நினைவு நாள் அனுஷ்டிப்பிற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. உயிரிழந்தவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள நூறுஸ்ஸலாம் பள்ளிவாயலில் புனித குர்ஆன் பாராயணம் செய்யப்பட்டு விசேட பிரார்த்தனையும் நடைபெற்றது. இந்நிகழ்வில் உலமாக்கள் முன்னாள் இராஜாங்க அமைச்சர் செய்யித் அலிஸாஹிர் மௌலானா மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர். சுதாக்கள் பூங்காவிலிருந்து அமைதிப்பேரணியொன்று ஆரம்பமாகி பள்ளிவாயல் வீதி மற்றும் பிரதான வீதி ஆகிய பாதைகள் ஊடாக இப்பேரணி நகர சபையை அடைந்தது. அங்கு ஜனாதிபதிக்கான மகஜர் பிரதேச செயலாளரிடம் கையளிக்கபட்டது. 1990 ஆகஸ்ட் 12 ஆம் திகதியன்று இரவு ஏறாவூரில் வீடுகளில் தூக்கத்திலிருந்த பெண்கள் குழந்தைகள் வயோதிபர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் 121 பேர் எல்ரீரீஈ யினரால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பஸ்தரிப்பு நிலையத்தில் முதியவரின் சடலம் மீட்பு

மண்டூர் தினகரன் நிருபர்

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலமீன்மடு பகுதியில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிச்சவீட்டு வீதி பாலமீன்மடு பகுதியைச் சேர்ந்த (55) வயதுடைய செல்லத்தம்பி மைக்கல் என்பவரே இவ்வாறு பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நீண்டகாலமாக எவருடைய பராமரிப்பின்றி தனிமையில் நோய்வாய்ப்பட்டு வாழ்ந்து வந்த நிலையில் சம்பதினத்திற்கு முதல் நாள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு போவதற்காக குறித்த பஸ்தரிப்பு நிலையத்தில் அமர்ந்திருந்ததாகவும் பின்னர் சம்பவ தினத்தன்று பஸ்தரிப்பு நிலையத்தில் மரணமடைந்த நிலையில் காணப்பட்டதனை வீதியால் சென்று கொண்டிருந்தவர்கள் கண்டு பொலிஸாருக்கு தெரிவித்துள்ளதாகவும் பின்னர் மரணமானவரின் உறவினர்கள் சம்பவ இடத்திற்கு சென்று மரணமானவரை அடையாளப்படுத்தியதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

## அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னா ஜும்ஆ பள்ளிவாசலில் இரத்தான முகாம்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின், இரத்த வங்கியில் காணப்படும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னா ஜும்ஆ பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2023ஆம் ஆண்டிற்கான மாபெரும் இரத்ததான முகாம், நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுத்தலைவரும், அக்கரைப்பற்று தத்பீகுஷ் ஷரிஆ அரபுக்கல்லூரியின் அதிபருமான அஷ்ஷேக் எம்.ஐ.அன்ஸார் (தப்லிகி) தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (13) பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது. 12 வருடங்களாக தொடர்ச்சியாக ஏற்பாடு செய்து நடாத்தி வரும் இந்நிகழ்வில் வழமை போன்று இம்முறையும் இரத்ததான முகாமில் சுமார் 150 இற்கும் மேற்பட்ட ஆண், பெண்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு உதிரங்களை தானமாக வழங்கினர்.





திருகோணமலை இரத்தினசிங்க விநாயகர் ஆலய 7 ஆம் நாள் உற்சவத்தின்போது தருமபுர ஆதின துணையுடன் இத்தாலி விநாயகர் ஆலய பிரதம குரு கனகபாலசந்திர சிவாச்சாரியாரின் 'பத்தாம் திருமுறை பன்முகப்பார்வை' தொகுப்பு நூல் ஆலய பிரதம குரு பாலூ சர்மா தலைமையில் நடைபெற்றது. இதன் முதல் பிரதியை கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய அறங்காவலர் சபை தலைவர், தொழிலதிபர் கனகரகுநாதன் பெற்றுக் கொள்வதையும் உற்சவத்தில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளர் சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா திருமதி கனகசபாபதி குருக்கள் அம்மையாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் கொழும்பு சிவநேசன் சிவாச்சாரியார் ஆகியோரையும் படத்தில் காணலாம் .

## சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு மரம் நடுகை



சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு பசுமையான நாடு எனும் தொனிப் பொருளில் மரம் நடும் நிகழ்வு நிந்தவூர் அல்மினா வித்தியாலயத்தில் நிந்தவூர் சிட்டிசன் இளைஞர் கழகத்தின் தலைவர் பகாத் யாகூப்பின் ஏற்பாட்டிலும் பாடசாலை அதிபர் M.H.M.ராபியு தலைமையில் பாடசாலை வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணியின் தேசிய செயற்குழு உறுப்பினரும், அம்பாறை மாவட்ட செயலாளருமான. றிஸ்கான் முகம்மட் கலந்து கொண்டு மரத்தினை நாட்டி வைத்தார்.

## தம்பலகாமத்தில் கடை தீக்கிரை

தம்பலகாமம் குறூப் நிருபர்



தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான வாகன உதிரிப்பாகங்கள் கடை எரிந்து முற்றாக சேதமடைந்துள்ளது.

இச் சம்பவம் நேற்று (13) அதிகாலை இடம்பெற்றுள்ளது.கடை எரிந்ததில் வாகன டயர் உட்பட பல உதிரிப்பாகங்கள் சேதமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பில் அரச பகுப்பாய்வு திணைக்களத்தினர் மாதிரிகளை பெற்றுள்ளனர். இதுவரைக்கும் தீப்பற்றிய காரணங்கள் கண்டறியப்படவில்லை.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் திருகோணமலையில் கைது

ரொட்டவெவ குறூப் நிருபர்

ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரிக்க திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை மொரவெவ பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து குறித்த சந்தேக நபரை சோதனை இட்ட போது அவரிடமிருந்து 11 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அனுராதபுரம் இக்கிரிகொல்லாவ பகுதியில் வசித்து வரும் அக்பர் முஹம்மது ரிபான் (35வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து மோட்டார் சைக்கிளில் அனுராதபுரம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அவரை சோதனையிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு பல நீதிமன்றங்களில் வழக்குகள் இடம்பெற்று வருவதாகவும் புலன் விசாரணைகளின் பின்னர் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கின் உதயம்



கல்வி பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி இலவச கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்ட யாழ், கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கருத்தரங்கை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். வடமாகாணத்திலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதி,கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன் இந்த கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.

## வடக்கு மாகாண விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



வடக்கு மாகாண விவசாயிகள் எதிர்நோக்கிவருகின்றபிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு எட்டப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் உறுதியளித்துள்ளார்.

சாவகச்சேரியில் நடைபெற்ற ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியோடு சிறு விவசாயிகளுக்கு உரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

எமது நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையில் ஜப்பான் அரசாங்கம் மற்றும் அந்த நாட்டு மக்களுடைய இந்த உதவி வரவேற்கத் தக்கது.

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இயற்கை அனர்த்தத்தால் பயிர்கள் அழிவது, அழிவில் இருந்து தப்பி அறுவடை செய்யும் பொருட்களுக்கு உரிய உத்தரவாத விலை கிடைக்காமை, அறுவடையின் பின்னர் உற்பத்திப் பொருட்களை பாதுகாத்து பதப்படுத்த முடியாமை மற்றும் சந்தைப்படுத்த முடியாமை என பல போராட்டங்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் நாம் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தேடிக்கொண்டிருக்கிறோம். அதில் சில தாமதங்கள் ஏற்பட்டாலும் விரைவில் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படும்.

## கைதடியில் விபத்து
## யாழ். இந்துக்கல்லூரி மாணவன் உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யாழ்ப்பாணம் கண்டி நெடுஞ்சாலையில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் உயிரிழந்துள்ளார்.

கைதடி, நுணாவில் வைரவ கோவிலுக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் சாவகச்சேரியை சேர்ந்த சிவபாலன் பிரவீன் (வயது 19) எனும் மாணவனே உயிரிழந்துள்ளார். மாட்டு வண்டி சவாரி போட்டிக்காக வண்டில் மற்றும் மாடுகளை ஏற்றிச் சென்ற லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது.

## மலையகத் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க கைகோர்ப்போம்

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

எங்கள் மலையக தமிழ் மக்களின் 200 வருட வரலாற்றினை நினைவு கூறும் வகையில் இந்த வருடம் முழுவதும் பல்வேறு தரப்பினரால் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறது. 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையக தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தினை அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்துகிறோம்.

மலையக மக்களின் வளர்ச்சி தேசிய ரீதியான வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இன்றுவரை அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. கடந்த 200 வருடத்தில் அடைந்தவை சில, அடைய வேண்டியவை பல என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

இருப்பினும் 200 வருட வரலாற்றை நினைவு கூரும் இந்த வருடத்தில் எம் மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சர்வதேசத்திலும் அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்திலும் பேசுபொருளாக உள்ளது. அந்த முன்னேற்றத்தை மலையக தமிழ் மக்களின் நிரந்தர தீர்வுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை பற்றிப் பேசும் போது எங்கள் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அடையாளம் மற்றும் சுயநிர்ணயம் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

எங்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் என்றும் தொடர்ந்து போராடுவோம். எங்கள் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம்.

## தலைமன்னார் புனித லோறன்சியாரின் பெருவிழா



**தலைமன்னார் விஷேட நிருபர்**

மன்னார் மறைமாவட்டத்தில் தலைமன்னார் ஊர்மனையின் பாதுகாவலராம் புனித லோறன்சியாரின் வருடாந்த ஆலய பெருவிழா தலைமன்னார் பங்குத் தந்தை அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் ஒழுங்கமைப்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் தலைமையில் வியாழக்கிழமை (10) கூட்டுத் திருப்பலி இடம்பெற்றது.

புனிதரின் திருச்சுரூப பவனியைத் தொடர்ந்து புனிதரின் திருச்சுரூப ஆசீரை ஆயர் வழங்கி வைத்தார்.

## வீதியை கடக்க முற்பட்ட பெண் விபத்தில் மரணம்

**யாழ். விசேட நிருபர்**

மோட்டார் சைக்கிளில் விபத்தில் காயமடைந்த வயோதிப பெண்மணி சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கை சேர்ந்த நாகராசா ராசபூபதி (வயது 68) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் தனது வீட்டுக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீதியை கடக்க முற்பட்ட வேளை, பருத்தித்துறை பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## பிரபல நாதஸ்வர வித்துவான் காலமானார்

**யாழ். விசேட நிருபர்**



தொடர் காய்ச்சலினால் யாழை சேர்ந்த பிரபல நாதஸ்வர வித்துவான் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கொண்டாவில் மேற்கை சேர்ந்த நாராயணன் கோவர்த்தனன் (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார். 05 தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், காய்ச்சலின் தீவிர தன்மையை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## மக்களின் பூர்வீக வாழ்விடங்களை அழிக்கும் அபிவிருத்திகள் தேவையற்றவை

### முன்னாள் எம்.பி சந்திரகுமார்

**கிளிநொச்சி குறுப் நிருபர்**



மக்களின் பூர்வீக வாழ்விடங்களை இல்லாதெழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு அபிவிருத்தி திட்டங்களும் தேவையற்ற ஒன்றே.

அதனால் பன்னாட்டு நிறுவனங்கள் நன்மை பெறுவார்களே தவிர அந்த மக்கள் வாழ்விழந்து போவார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (12) வேரவில் பகுதியில் பத்தாவது நாளாக பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக தொடர்ந்தும் சுழற்சி முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற பொது மக்களுக்கு ஆதரவு தெரிவித்து அப்போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலைக்கான மூலபொருளான சுண்ணக் கல் அகழ்வை மேற்கொள்வதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் நிறைவுற்றுள்ளது.

குறித்த நிறுவனம் ஒன்று கடற்கரை கிராமங்களான மேற்படி கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 300 மீற்றர் வரையான ஆழம் வரை சுண்ணக் கல் அகழ்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இது மிகப்பெரும் ஆபத்தை வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு கிராம மக்களுக்கு உடனடியாகவும் ஏனைய அயல் கிராம மக்களுக்கு படிபடியாகவும் பாதிப்பை ஏற்படுத்த போகிறது. பொது மக்கள் தங்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை உருவாகும்.

ஏனெனில் கடல் நீர் நிலத்தடி நீரில் கலந்து குறித்த பிரதேசத்தில் உள்ள நன்னீர் உவர் நீராக மாற்றமடையும், பின்னர் நிலம் உவராக மாறும். இதன்போது மக்கள் அங்கு வசிக்க முடியாத நிலை உருவாகும்.

ஆகவே இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனை எமது சமத்துவக் கட்சியும் அந்த மக்களூடன் இணைந்து எதிர்க்கிறது என்றார்.

## வடக்கில் போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை நிலையம்

வடக்கில் போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சிகிச்சை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ் பண்ணையில் அமைந்துள்ள மாகாண சுகாதார திணைக்களத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஒரு வருடமாக வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் வைத்தியசாலைக்கு வரும் போது அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

இருப்பினும் முற்று முழுதாக போதைக்கு அடிமையானவர்களை நீண்ட காலமாக வைத்து பராமரித்து சிகிச்சை அளிக்கும் சிகிச்சை நிலையம் வடபகுதியில் இல்லை.

அவ்வாறான ஒரு விசேட நிலையத்தை அமைப்பதாயின் அதற்கு பல்வேறுபட்ட வசதிகள் தேவையாக இருக்கின்றன.

இந் நிலையில் இவ்வாறானதொரு நிலையத்தை வடக்கில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் முயற்சிகளை எடுத்திருக்கின்றார்.

அதே நேரத்தில் புதிதாக ஒருவர் போதைக்கு அடிமையாகாமல் குடும்ப உறுப்பினர்களும் சமூகத்தவர்களும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

## போலி இத்தாலி விசா வழங்கி யாழ். இளைஞனிடம் ரூ. 25 இலட்சம் மோசடி

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞனை இத்தாலிக்கு அழைப்பதாக கூறி 25 இலட்சம் ரூபாய் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாரிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞன் ஒருவரை, இத்தாலியில் வசிக்கும் கொக்குவிலை சேர்ந்த நபர் தொடர்பு கொண்டு, இளைஞனை இத்தாலிக்கு அழைப்பதாகவும் அதற்காக 25 இலட்சம் ரூபாய் பணத்தினை தான் சொல்லும் நபரிடம் கையளிக்குமாறு கூறியுள்ளார்.

இளைஞனும், அவரின் பேச்சை நம்பி அவர் கூறிய நபரிடம் 25 இலட்சம் ரூபாய் பணத்தினையும் கையளித்துள்ளார். சில நாட்களில் இத்தாலி விசா என ஒன்றினை இளைஞனிடம் காசினை பெற்றுக்கொண்ட நபர் கையளித்துள்ளார்.

குறித்த விசாவை இத்தாலி தூதரகத்தில் இளைஞனை பரிசோதித்த போது அது போலி விசா என அதிகாரிகள் கண்டறிந்து இளைஞனுக்கு கூறியுள்ளனர்.

அதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்ட விடயத்தினை இளைஞன் அறிந்து கொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் திறன்வகுப்பறை திறப்பு



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டையொட்டிப் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை கலாசாலையில் 1952 – 1953 காலப்பகுதியில் பயிற்சி பெற்ற காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலய முன்னாள் ஆசிரியை பராசக்தி கந்தையா (95 வயது) வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். அமெரிக்காவைத்தளமாகக் கொண்ட தொண்டு நிறுவனமாகிய ஐஎம்எச்ஓ (IMHO) மற்றும் பிரித்தானிய ரட்ணம் பவுண்டேசன் என்பவற்றின் அனுசரணையில் திறன்பலகையும் அதற்குரிய மடிக்கணனியும் வழங்கப்பட்டுள்ளது.

# 'மலையகம் 200' பாதை யாத்திரை

# "வேர்களை மீட்டு உரிமையை வென்றிடுதல்" இறுதி நிகழ்வில்






மலையகம் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு 'மாண்புமிகு மலையகம் நேற்று, இன்று, நாளை எனும் பொதுக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் "வேர்களை மீட்டு உரிமையை வென்றிடுதல்" என்னும் தொனிப் பொருளில் தலை மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டு மாத்தளையில் நிறைவு பெற்ற எழுச்சிப் பாதையாத்திரிகர்களை வரவேற்கும் வைபவம் நேற்று முன்தினம் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மண்டபத்தில் விழாக் குழுவின் தலைவர் மு. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

ஜுலை 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 2.00 மணி அளவில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தை வந்தடைந்தது.

262 கிலோ மீட்டர் தூரப் பயணத்தை 15 நாட்களில் 61 நபர்கள் தொடராக நடந்து வந்தனர். அதேவேளையில் மாண்புமிகு மலையகம் என்ற பெயரில் பாடசாலை மாணவர்களின் ஊர்வலமும் மாத்தளை நகர் வீதி வலம் வந்து ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தை வந்தடைந்தது.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயத் தலைவர்கள் உட்பட பெரு எண்ணிக்கையிலான சமயத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மாத்தளை பிரதேச செயலாளர் இந்தகொட, மாத்தளை கல்வி வலயப் பணிப்பாளர் தோட்ட உட்கட்டமைப்பு, வீடமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் எம். வாமதேவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகர், இலங்கை தேசிய கிறிஸ்தவ சபையின் பொதுச் செயலாளர் அருட்பணி சுஜிதர் சிவநாயகம் உள்ளிட்ட பெரு எண்ணிக்கையிலான பிரமுகர்களுடன் பெரு எண்ணிக்கையிலான மக்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது மாண்புமிகு மலையகம் நூல் வெளியீடு, பாடசாலை மாணவர்களின் கலாசார நடன நிகழ்வுகள் , மாண்புமிகு மலையகம் என்ற தொனிப் பொருளில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல், ஊர்வலத்தின் ஞாபகார்த்தமாக கோயிலின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுதூபி திரை நீக்கம் செய்தல், மலையகம் தொடர்பான கண்காட்சிகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை கௌரவித்தலும் ஊர்வலத்தின் இறுதிப் பிரகடனமும் இடம்பெற்றது.

**இக்பால் அலி**










## கொழும்பு மாநகர சபை

### நிலச்சீராக்க நிபுணர் / நிறுவனத்திடமிருந்து பொதுவான நிலச்சீராக்க ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளல்

**பின்னணி**

சுற்றுலாத்துறை அபிவிருத்தி நோக்கத்துடன், இலங்கைத் தீவின் பிரதான நுழைவாயிலாக கொழும்பு அழகுபடுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தகுதி**

தகுதியான விண்ணப்பதாரர்கள்/நிறுவனங்கள் 2023 ஆகஸ்ட் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை பொறியியல் பணிப்பாளர் (போக்குவரத்து, வடிவமைப்பு மற்றும் வீதிப் பாதுகாப்பு) அலுவலகத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொழில்சார் தகுதிகள்**

இலங்கை நிலச்சீராக்க கட்டிடக்கலை நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டய நிலச்சீராக்க கட்டிடக் கலைஞராக இருத்தல் வேண்டும். ஒதுக்கப்பட்ட காலம் முழுவதும் உறுப்பினர் செயலில் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஒரு நிறுவனமாக இருந்தால், நிரந்தர பணியாளர்கள் மேற்கூறிய தகுதிகளுடன் கூடிய நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

**அனுபவம்**

ஒரு வளமுள்ள விண்ணப்பதாரர் கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று நகர நிலச்சீராக்கத் திட்டங்களில் குறைந்தபட்சம் முக்கிய பதவிகளுடன் நிலச்சீராக்க வடிவமைப்பில் குறைந்தபட்சம் இருபது வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**சம்பளம்**

பேச்சுவார்த்தைக்குட்பட்டது

**ஒப்பந்த காலம்**

இரண்டு ஆண்டுகள் (நீட்டிக்கத்தக்கது)

தகுதியானவர்கள் நேர்முகத் தேர்வுக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன் இறுதித் தீர்மானம் கொழும்பு மாநகர சபையிடம் ஒப்படைக்கப்படும்.

நேர்முகத் தேர்வின்போது சான்றிதழ்களுடன் கடந்தகால அனுபவங்களின் சாதனைச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

கட்டிடக்கலை மற்றும் நிர்மாணத் துறைகளில் உள்ள அனுபவம் மேலதிக தகுதிகளாக இருக்கும்.

விண்ணப்பிப்பதற்கான இறுதி நாள் - 2023 ஆகஸ்ட் 21ஆம் திகதி மு.ப. 10.00 மணி

மேலும் விவரங்களுக்கு, 0777715322 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக திரு. S U B தொலபிஹில்ல அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

**மாநகர சபை ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**


# சர்வதேச இளைஞர் தின கரப்பந்தாட்ட போட்டி தினகரன், வாரமஞ்சரி ஊடக அனுசரணை

**சாய்ந்தமருது விசேட, அட்டாளைச்சேனை விசேட, திராய்க்கேணி தினகரன் நிருபர்கள்**

சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினால் தினகரன்,வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் அட்டாளைச்சேனை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றியாத்தின் வழிகாட்டலில் கரப்பந்தாட்ட போட்டி நேற்று முன்தினம் காலை 10.00 மணி முதல் மாலை 04.00 மணிவரை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடை அட்டாளைச்சேனை மற்றும் அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இளைஞர் கழகங்கள் போட்டியில் மோதிக் கொண்டன. அட்டாளைச்சேனை இளைஞர் கழகங்கள் இரண்டாம்,மூன்றாம், நான்காம் இடத்தினை பெற்றுக் கொண்டது.அக்கரைப்பற்று பிரதேச இளைஞர் கழகம் முதலாம் இடத்தைப் பெற்றது.

இதில் பங்குபற்றிய அணியினருக்கு வெற்றி கிண்ணம் மற்றும் விளையாட்டு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.










### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 ஓகத்து 16ஆம் திகதி ஏல விற்பனையினூடாக ரூ. 180,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123K172 | LKA18224B168 | LKA36424H169 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 90,000 | 50,000 | 40,000 | 180,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 ஓகத்து 16
தீர்ப்பனவுத் திகதி : 2023 ஓகத்து 18
வழங்கப்படும் திகதி : 2023 ஓகத்து 18
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 ஓகத்து 16, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**


# விக்டோரியாவின் நீர் மட்டம் குறைவு

**அக்குறணை குறூப் நிருபர்**

விக்டோரியா மற்றும் அதனை அண்மித்த மகாவலி நீர்த் தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து செல்வதாக மின் உற்பத்திப் பொறியியலாளர்கள் நேற்று தெரிவித்தனர். தற்போதைய நிலையில் போதியளவு மழை பெய்யாத விடத்து சில வாரங்களுக்கு மட்டுமே விக்டோரியா நீர் தேக்கத்தில் இருந்து நீர் மின் உற்பத்தியை மேற் கொள்ள முடியும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். கடல் மட்டத்தில் இருந்து 439 மீட்டர் உயரத்திற்கே விக்டோரியாவின் நீர்மட்டம் அதிகூடியளவு பேண முடியும் எனவும் அது தற்போது 409.7 மீட்டராகக் குறைந்துள்ளதாகவும் எனவே மொத்த நீர் மட்டத்தில் இருந்து 28.3 மீட்டர் ஆகக் குறைந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

**Purchase of One Number 80 Ton Bollard Pull Twin Azimuth Stern Drive Harbour Tug for the Sri Lanka Ports Authority**

**CES/FP/04/PT/6421 (HM)**

### விலைமனுக்கோரல் செயற்பாட்டிற்கான நேர அட்டவணையின் நீடிப்பு

1. மேலேயுள்ள கேள்வி தொடர்பாக 2023 ஜுன் 25 ஆம் திகதியன்று சண்டே ஒப்சேவர், சிலுமின மற்றும் வாரமஞ்சரி மற்றும் 2023 ஜுன் 26 ஆம் திகதியன்று டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக 1 ஆம் பிரிவின் விலைமனுக்கோரல் ஆவணத்தின் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரையின் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்காக உட்கூறு 24.2 இன் பிரகாரம் விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான மூடும் திகதியை நீடிப்பதற்கு அமைச்சரவை நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவானது தீர்மானித்துள்ளது.
2. இதற்கமைவாக, விலைமனுக்கோரல் செயற்பாட்டின் புதிய நேர அட்டவணையானது பின்வருமாறு.

| நிகழ்வு | திகதி |
|---|---|
| அ. விலைமனுக்கோரல் ஆவணங்களின தெளிவுறுத்தலுக்காக விலைமனுதாரர்கள் விண்ணப்பிக்கும் இறுதித் திகதி | 2023 ஓகஸ்ட் 17 ஆம் திகதி |
| ஆ. விலைமனுக்கோரல் ஆவணங்களுக்காக இது அ இனால் தெளிவுறுத்தலை வழங்குவதற்கான மற்றும்/ அல்லது பிற்சேர்க்கைக்கான இறுதித் திகதி | 2023 ஓகஸ்ட் 24 ஆம் திகதி |
| இ. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மூடும் திகதி மற்றும் நேரம் | 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| ஈ. விலைமனுக்களை திறத்தல் | 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று விலைமனுவை மூடிய பின்னர் உடனடியாகவே. |

3. விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கல்: 2023 ஜுன் 26 ஆம் திகதியிலிருந்து 2023 செப்டெம்பர் 26 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் அலுவலக நேரங்களில்.
4. உட்கூறு 21 இன் பிரகாரம் விலைமனு பிணையின் செல்லுபடியாகும் காலஎல்லை: விலைமனுப்பிணை மற்றும் விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலஎல்லையானது உட்கூறு 20 இன் பிரகாரம். விலைமனுக்கோரல் ஆவணத்தின் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரையின் I ஆம் பிரிவின் விலைமனுக்களின் செல்லுபடியாகும் கால எல்லையானது புதிய மூடும் திகதிக்கு அமைவாக இடம்பெறும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி,**
**கொழும்பு-01.**
**இலங்கை.**

## பெறுகை அறிவித்தல்

## சீதாவக்க பிரதேச சபை - ஹங்வெல்ல

சீதாவக்க பிரதேச சபைக்குச் சொந்தமான பாவனையில் இருந்து அகற்றப்பட்ட WPSL-7792 எனும் WINGFANG வகையான கழிக்கப்பட்ட கை டிரக்டரை விற்பனை செய்வதற்காக கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

இதற்காக மீளளிக்கப்படாத ரூ. 200.00 கேள்விப் பத்திர கட்டணம் அறவிடப்படும். கேள்விப் படிவங்களை 2023.09.06 பி.ப. 3.00 வரை சீதாவக்க பிரதேச சபை ஹங்வெல்ல தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

உங்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2023.09.07 மு.ப. 10.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது சீதாவக்க பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

வாகனம் பற்றிய முழுமையான பரிசீலனை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 - பி.ப. 3.00 வரை ஹங்வெல்ல வேலைத்தளத்தில் இடம்பெறலாம்

மேலதிக விபரங்களை இப் பிரிவில் 0703200708 மூலம் அறிந்து கொள்ளலாம்

**செயலாளர் மற்றும் சீதாவக்க பிரதேச சபையின்**
**அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி**
**சீதாவக்க பிரதேச சபை**
**ஹங்வெல்ல.**

**2023.08.10**


Repeat Your ad For Better Offers

The Housewives' companion Classifieds on Daily News


## சிறு விளம்பரம்





மோட்டார் வாகனங்கள்

107

டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

1 8-6054 Toyota 1 991, Car அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711 2 1 081 0 . 050618



117

வேன்கள் விற்பனைக்கு

LW-0549 Changan, 2008, Van அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பி எல்சி, இல. 310 , காலி வீதி, கொழும்பு 03. தொ லைபேசி. 0714 5 4 2 9 5 8 . 050602

252- 0 2 1 0 Nissan 1993 , Van அதியுயர் விலை க்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீ தி , கொழும்பு 03 . தொலைபேசி. 07 14 5 4 295 8 . 050607



118

ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

KD-9631 Toyota Harrier, 2003, அதியுயர் விலைக்கு. வெ லிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 295 8 . 050611



119

பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

PY-3564 Foton Lorry, 2014, அதியுயர் விலைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீ தி , கொழும்பு 03 . தொலைபேசி. 07 14 5 4 295 8 . 050589



122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAF-8340 Bajaj 2012, Threewheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 050596


Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams


## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** - **முகாமையாளர் (நிர்வாகம் / மனிதவளம்) 01 பதவி**
**Manager (Administration/HR)**

**தகைமைகள் - (நிர்வாகம் / மனிதவளம்)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வளம்/ வியாபார நிர்வாகம்/ பொது நிர்வாகம்/ வியாபாரக் கல்வி/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ பொது முகாமைத்துவம் என்பவற்றில் ஒரு இளமாணிப் பட்டம்

மற்றும்

ஆரம்ப பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவி தொடர்பான துறையில் ஆகக் குறைந்தது ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் தொடர்புடைய பதவி விடயப்பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் பதவியில் (JM வகுதி) குறைந்தபட்சம் 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** - முகாமைத்துவச் சேவையின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமான சம்பள அளவு MM 1-1 - 2016 ரூபா [53,175 - 10x1,375 - 15x1,910 - 95,575] மேற்படி பதவிக்கு உரித்தாகும்.

**வயது** - 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**மேலதிக நன்மைகள்** - உள்ளக மற்றும் வெளியக மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழான வசதிகள்

ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை தோட்டத்துறையாளர்களின் சேமலாபச் சங்கத்திற்கு உங்கள் சம்பளத்தின் 10% தொகையை பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உங்கள் சம்பளத்தின் 12% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை** - நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட நியமனக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

- இயைபுடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
- இயைபுடைய மேலதிக தகைமைகள் - 30 புள்ளிகள்
- ஏனைய சாதனைகள் - 15 புள்ளிகள்
- நேர்முகத்தேர்வில் காட்டும் செயற்திறன் - 25 புள்ளிகள்

**100 புள்ளிகள்**

**ஏனையவை** - இந்த வகுதியான அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணக்கம் கண்டிப்பாக இருக்கும்.

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்** - விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் பிறப்பாத்தாட்சிப்பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் சகல விபரங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்கம் / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபை என்பவற்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களின் திணைக்களத் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** - 2023 ஆகஸ்ட் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,** **2023-08-10**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 157, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**

CSIAP THE WORLD BANK

# Invitation for Bids

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## National Competitive Bidding

### Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)

**Project No: P163742**
**IFB No: 2023/11**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) – World Bank in the cost of the Climate Smart Irrigated Agriculture Project of the Ministry of Agriculture and it intends to apply part of the proceeds of this credit to eligible payments under the Contracts given in the table below.
2. The Chairman, Regional Procurement Committee (Northern Province) on behalf of the Climate Smart Irrigated Agriculture Project (CSIAP) invites sealed bids from eligible and qualified bidders for the construction works described in the table below.

| Lot No | Contract No | Description of Work | Estimated Total Cost Excluding VAT(LKR) | CIDA Registration | Non -refundable Fee (LKR) | Bid Security Value in (LKR) and Validity Date |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-309673-CW-RFB /NP/ DPDO/Machinery Yard (03)/ 2022/62 | Machinery Yard Construction at Akkarayankulam ASC, Karaichchi DS Division, Mulangavil ASC, Poonagary DS Division and Poonagary ASC, Poonagary DS Division at Kilinochchi District in Northern Province. | 14.5 Mn | C7 or C6 | 8,000.00 | 217,000.00 19st December 2023 |

3. Bidding shall be conducted through National Competitive Bidding (NCB).
4. Interested bidders may obtain further information from **Deputy Project Director, Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi (T.P: 021 228 4881 Fax: 021 228 4880, Email: dpd.np@csiap.lk),** and inspect the bidding documents free of cost at the same place on working days from **9.00 hrs to 14.00 hrs.**
5. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the requirements in Bidding Document. Further the successful bidder shall have valid registration Grade in Construction Industry Development Authority (CIDA) as mentioned in above Table under the specialty of **Buildings.** Bidders are free to bid for more than one Contract but selections, will be made accordingly to the financial and other capacity limits of the Contractors.
6. Bidding Document in English Language can be purchased by eligible bidders on the submission of a written application on original Letter Head to the **Deputy Project Director** at the address mentioned in **item 4** above, and paying a non-refundable fee (Please refer above table for the amount) in Cash only on Working days from
   - ✓ **15th August 2023 to 5th September 2023 from 09:00 hrs.to 14:00 hrs.**
7. Pre-bid meeting and subsequent Site Visit will be arranged on **22nd August 2023** at 10.00 Hrs, at the place mentioned in **item 4** above. Prospective bidders are requested to inspect the sites with the assistance of the relevant officers at their own cost.
8. Bid must be accompanied by an Unconditional Bid Guarantee on prescribe format in the Bidding Document for the value and date mentioned in above Table. Any Bid without a valid Bid Guarantee as indicated will be considered as non-responsive and rejected without any query.
9. All pages of the Bidding Documents shall be signed by the bidder and affixed his seal.
10. The Bids shall submit as the Original and the Duplicate. The original and the duplicate should be Enclosed in separate sealed envelopes and marked as the "Original" and "Duplicate"' respectively. Both envelopes shall be enclosed in a sealed single envelope, and write the Description of Work and Contract No on top of left-hand corner of the envelope.
11. Completed Bids shall either be deposited in the Tender Box kept for this purpose or send under registered post address to **The Chairman, Regional Procurement Committee (Northern Province), Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction, Wilson Road, Kilinochchi** to reach
    - ✓ on or before: **2.00 pm on 5th September 2023 Lot no 01 .**
12. Receiving of the Bids shall be closed
    - ✓ at **2.00 pm on 2023-09-05 for Lot no 01.**

Late Bids shall not be accepted. Bids will be opened immediately after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend.

**Chairman,**
**Regional Procurement Committee (Northern Province)**
**Climate Smart Irrigated Agriculture Project,**
**Deputy Project Director's Office (Northern Province),**
**Kovinthankadai Junction,**
**Wilson Road,**
**Kilinochchi**

**Date - 2023-08-11**

**CargillsBank**
வாழ்க்கைக்கு உயிரூட்டும் வங்கி

# வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கி
# 30 ஜூன் 2023 இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கான நிதிநிலைகள் அறிக்கைகள்

## வருமானக் கூற்று

| | ஆறு மாதங்கள் முடிந்தது | | | காலாண்டு முடிந்தது | | |
|---|---|---|---|---|---|---|
| | 30-06-2023 ரூ. '000 | 30-06-2022 ரூ. '000 | மாற்றம் % | 30-06-2023 ரூ. '000 | 30-06-2022 ரூ. '000 | மாற்றம் % |
| வட்டி வருமானம் | 5,799,396 | 3,144,458 | 84 | 3,094,015 | 1,873,152 | 65 |
| கழி: வட்டிச் செலவினங்கள் | (3,995,961) | (1,752,493) | (128) | (2,153,658) | (1,048,442) | (105) |
| **தேறிய வட்டி வருமானம்** | 1,803,435 | 1,391,965 | 30 | 940,357 | 824,710 | 14 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 642,357 | 574,765 | 12 | 303,640 | 347,215 | (13) |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | (234,507) | (184,834) | (27) | (123,097) | (102,560) | (20) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 407,850 | 389,931 | 5 | 180,543 | 244,655 | (26) |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 2,006 | 1,551 | 29 | 317 | 2,134 | (85) |
| நிதியியல் முதலீடு மூலமான தேறிய இலாபம்/(நட்டம்) | 28,994 | 4,690 | 518 | 20,803 | 3,586 | 480 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் - தேறிய * | 188,812 | (2,517) | 7,602 | 74,595 | (215,831) | 135 |
| **மொத்த ஏனைய வருமானம்** | 219,812 | 3,724 | 5,802 | 95,715 | (210,111) | 146 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | 2,431,097 | 1,785,620 | 36 | 1,216,615 | 859,254 | 42 |
| **கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு** | | | | | | |
| வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | (417,971) | (800,832) | 48 | (167,394) | (397,446) | 58 |
| நிதிச் சொத்துக்கள் மற்றும் ஏனையவை | (28,457) | 345 | (8,348) | (834) | 3,335 | (125) |
| **மொத்தக் கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு** | (446,428) | (800,487) | 44 | (168,228) | (394,834) | 57 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | 1,984,669 | 985,133 | 101 | 1,048,387 | 464,420 | 126 |
| பணியாளர் செலவுகள் | (522,960) | (459,914) | (14) | (258,298) | (230,052) | (12) |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | (162,223) | (183,829) | 12 | (80,096) | (87,443) | 8 |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவினங்கள் | (684,642) | (485,707) | (41) | (354,160) | (260,745) | (36) |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | (1,369,825) | (1,129,450) | (21) | (692,554) | (578,240) | (20) |
| **நிதிச் சேவைகள் மூலமான வரிக்கு முந்திய செயற்படு இலாபம்/(நட்டம்)** | 614,844 | (144,318) | 526 | 355,833 | (113,820) | 413 |
| நிதிச் சேவைகள் மீதான வரி | (171,781) | (64,608) | (166) | (86,663) | (29,476) | (194) |
| **வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்)** | 443,063 | (208,925) | 312 | 269,170 | (143,297) | 288 |
| கழி: வரிச் செலவினங்கள் | (189,565) | 13,827 | (1,471) | (122,131) | 5,793 | (2,208) |
| **வருடத்திகான இலாம்/(நட்டம்)** | 253,498 | (195,098) | 230 | 147,039 | (137,504) | 207 |
| ஒரு பங்கின் அடிப்படை வருவாய் (ரூ.) | 0.29 | (0.22) | 230 | 0.17 | (0.16) | 207 |

## ஏனைய விரிவான வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டக் கூற்று

| | ஆறு மாதங்கள் முடிந்தது | | | காலாண்டு முடிந்தது | | |
|---|---|---|---|---|---|---|
| | 30-06-2023 ரூ. '000 | 30-06-2022 ரூ. '000 | மாற்றம் % | 30-06-2023 ரூ. '000 | 30-06-2022 ரூ. '000 | மாற்றம் % |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | 253,498 | (195,098) | 230 | 147,039 | (137,504) | 207 |
| **வரி நீங்கலான ஏனைய விரிவான வருமானம்** | | | | | | |
| **இலாபம் அல்லது நட்டமாக அல்லது மறுவகைப்படுத்தப்படும் பொருட்கள்** | | | | | | |
| திறைசேரி உண்டியல்கள் | 164,099 | 48,857 | 236 | 97,711 | 66,591 | 47 |
| திறைசேரி பத்திரங்கள் | 504,041 | (129,996) | 488 | 347,133 | (60,586) | 673 |
| விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய தொகுக்கப்பட்ட வருமானத்தின் ஊடான நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் மூலமான முதலீட்டின் தேறிய இலாபம்/(நட்டம்) | 668,140 | (81,139) | 923 | 444,844 | 6,005 | 7,308 |
| மேலே தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்து | (200,442) | 19,473 | (1,129) | (133,453) | (1,441) | (9,160) |
| | 467,698 | (61,666) | 858 | 311,391 | 4,564 | 6,723 |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலாக ஏனைய விரிவான வருமானம்** | 467,698 | (61,666) | 858 | 311,391 | 4,564 | 6,723 |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலாக மொத்த ஏனைய விரிவான வருமானம்/(செலவினம்)** | 721,196 | (256,764) | 381 | 458,430 | (132,940) | 445 |

## நிதி நிலைமைக் கூற்று

| திகதிக்கு | 30-06-2023 | 31-12-2022 (கணக்காய்வுக்கு உட்பட்டது) | மாற்றம் |
|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | % |
| **சொத்துக்கள்** | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 2,303,071 | 1,232,272 | 87 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | 2,481,526 | 1,311,926 | 89 |
| வங்கிகளுடனான நடவடிக்கைகள் | 644,375 | - | - |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | 1,975 | - | - |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 40,971,289 | 35,960,080 | 14 |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் சொத்துகள் - கடன் மற்றும் ஏனைய கடன் பத்திரங்கள் | 2,024,947 | 1,996,950 | 1 |
| ஏனைய தொகுக்கப்பட்ட வருமானம் ஊடாக நியாய மதிப்பீட்டில் அளவிடப்பட்ட நிதிச் சொத்துகள் | 15,662,042 | 10,253,496 | 53 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 443,068 | 475,180 | (7) |
| அருவச் சொத்துக்கள் | 300,034 | 335,150 | (10) |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 565,716 | 955,721 | (41) |
| ஏனைய சொத்துக்கள் | 1,946,553 | 1,232,034 | 58 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 67,344,596 | 53,752,809 | 25 |
| **பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்** | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | 492,521 | 514,193 | (4) |
| நிதி உபகரணங்களிலிருந்து பெறப்பட்டவை | - | 30 | (100) |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் - வைப்புக்களின் காரணமாக | 47,517,080 | 37,802,680 | 26 |
| குறைந்து செல்லும் செலவில் நிதிச் பொறுப்புக்கள் - ஏனைய கடன் பத்திர உரிமையாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 6,556,526 | 3,688,924 | 78 |
| ஓய்வூதிய நலப் பொறுப்புக்கள் | 96,831 | 96,806 | 0 |
| குத்தகைப் பொறுப்பு | 285,208 | 340,542 | (16) |
| ஏனைய பொறுப்புக்கள் | 1,954,929 | 1,589,329 | 23 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 56,903,095 | 44,032,504 | 29 |
| **பங்கு மூலதனம்** | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 11,394,421 | 11,394,421 | - |
| பிற பங்கு செயற்கருவி | 56,774 | 56,774 | - |
| நியதிச் சட்ட ஒதுக்கம் | 334,947 | (132,751) | 352 |
| ஏனைய விரிவான வருமான இருப்பு மூலம் நியாயப் பெறுமதி | (1,344,641) | (1,598,139) | 16 |
| திரண்ட நட்டம் | 10,441,501 | 9,720,305 | 7 |
| **மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் பங்கு மூலதனம்** | 67,344,596 | 53,752,809 | 25 |
| **சார்ந்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்** | 17,275,911 | 22,292,738 | |
| **சாதாரண பங்கொன்றிற்கான தேறிய சொத்துக்கள் மதிப்பு (ரூ.)** | 11.82 | 11.01 | |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 601 | 598 | |
| கிளைகளின் எண்ணிக்கை | 24 | 23 | |

**உறுதிப்படுத்தல்கள்:**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்க இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஒப்பம்)
**டீ.கஜநாயக்க**
தலைவர் - நிதி

கீழே கையொப்பமிட்டவர்களான நாம், வரையறுக்கப்பட்ட கார்கில்ஸ் வங்கியின் நிர்வாகப் பணிப்பாளர்களாகவும், தலைவராகவும், கூட்டாக சான்று பகர்கிறோம்.
(அ) மேற்கண்ட அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவம் மற்றும் வரையறைகளுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும்,
(ஆ) இந்த அறிக்கைகளில் உள்ள தகவல்கள், கணக்காய்வு செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட விட்டால், வங்கியின் கணக்காய்வு செய்யப்படாத நிதி அறிக்கைகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டதாகும்.

(ஒப்பம்)
**கே பி எஸ் பண்டார**
முகாமைத்துவப் பணிப்பாளர்

(ஒப்பம்)
**ஆர் ஏ இபெல்**
தலைவர்

11/08/2023
கொழும்பு

## காசுப்பாய்ச்சல் கூற்று

| | முடிவடைந்த மூன்று மாதங்களுக்கு | |
|---|---|---|
| | 30-06-2023 ரூ. '000 | 30-06-2022 ரூ. '000 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| வரிக்கு முந்திய இலாபம்/(நட்டம்) | 443,063 | (208,926) |
| ***சீராக்கங்கள்:*** | | |
| வரிக்கு முந்திய இலாபம் உள்ளடக்கப்பட்ட காசு அல்லாதவைகள் | 480,094 | 1,737,828 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் மற்றும் இதர சொத்துக்கள் விற்பனையின் இலாபங்கள்/(நட்டங்கள்) | (19,361) | (16,771) |
| பங்கிலாப வருமானம் | - | 314 |
| பங்குலாப வருமானம் | (373) | - |
| ஈவுத்தொகை வருமானம் | (12,067) | (3,515) |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் விற்பனையில் ஆதாயங்கள்/(இழப்புகள்) | (12,172,949) | 889,661 |
| குறிப்பிட்ட நன்மை வழங்கல் திட்டத்தின் கீழ் செலுத்தியவை | 9,899,422 | 65,533 |
| **செயற்படு நடவடிக்கைகளில் இருந்து/ (பயன்படுத்தப்படும்) நிகர நிதி** | (1,382,171) | 2,464,124 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய கொள்வனவு | (67,431) | (26,913) |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையின் மூலம் இலாபங்கள் | - | 391 |
| கடன் பத்திரங்களில் முதலீடு | - | (150,000) |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | (27,578) | (39,508) |
| பெற்ற பங்குலாபம் | 373 | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்திய) காசுப்பாய்ச்சல்** | (94,636) | (216,031) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| செலுத்திய குத்தகைப் பொறுப்பு | | |
| மீள்கொள்முதல் அடிப்படையில் விற்பனை செய்யப்படும் பத்திரங்களின் மாற்றம் | (55,334) | (73,293) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்திய) தேறிய காசு** | 2,613,000 | (1,761,570) |
| | 2,557,666 | (1,834,863) |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | 1,080,858 | 413,230 |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 1,260,340 | 1,222,459 |
| **காலமுடிவின் போது காசு மற்றும் காசுக்குச் சமமானவை** | 2,341,198 | 1,635,689 |
| குறைவு: குறைபாடு | (38,127) | (6,443) |
| **நிதி நிலை அறிக்கையின்படி ரொக்கம் மற்றும் பணத்திற்குச் சமமானவை (நிகரம்)** | 2,303,071 | 1,629,246 |

## பங்கு மாற்றங்களின் கூற்று

| | உரிமை மூலதனம் | நியதிச் சட்ட இருப்புக்கள் | பிற விரிவான வருமான இருப்பு மூலம் நியாயமான பெறுமதி | திரட்டப்பட்ட இழப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 | ரூ. '000 |
| 2022.01.01 திகதியன்று மீதி - கணக்காய்வு செய்யப்பட்டது | 11,394,421 | 32,386 | (46,132) | (2,055,814) | 9,324,862 |
| **30.06.2022 உடன் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான மொத்த விரிவான வருமானம்** | | | | | |
| காலப்பகுதிக்கான நட்டம் | - | - | - | (195,098) | (195,098) |
| ஏனைய விரிவான வருமானம், தேறிய வரி | - | - | (61,666) | - | (61,666) |
## ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்குச் சொந்தமான வாரசந்தையை குத்தகைக்கு விடல்

ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே பெயர் குறிப்பிடப்படும் வார சந்தைகளில் குத்தகை உரிமையை 2024.01.01 முதல் 2024.12.31 வரை குத்தகைக்கு விடுவதற்காக இரு பிரதிகளுடனான பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2023 ஒகஸ்ட் 14 முதல் 2023 செப்டம்பர் 15 மு.ப. 10.00 வரை என்னால் ஏற்கப்படும். கேள்விப் படிவங்களை 2023 செப்டம்பர் 14 பி.ப. 3.00 வரை தமது அடையாள அட்டை மற்றும் பதிவை உறுதி செய்யும் கிராம அதிகாரி சான்றிதழை சமர்ப்பிப்போருக்கு மாத்திரம் இவ் அலுவலகத்தில் கீழ்க்காணும் கட்டணத்தை அறவிட்ட பின்னர் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் குறித்த நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு செயலாளர், ஹம்பாந்தோட்டை பிரதேச சபை, சூரியவெவ வீதி, மிரிஜ்ஜவில, ஹம்பந்தோட்டை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்ட வந்து ஹம்பாந்தோட்டை பிரதேச சபை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கேள்விப் விண்ணப்பப்பத்திரத்தை ஒப்படைக்கலாம்.

2023 செப்டம்பர் 15ம் திகதி மு.ப. 10.15 இற்கு கேள்விச் சபையின் முன்னால் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். சகல கேள்விப் பத்திரங்களும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழு அதிகாரம் 'ஹம்பாந்தோட்டை பிரதேச சபைக்கு உரியது' கேள்வி நிபந்தனைகள் கேள்விப் படிவங்களில் குறிப்பிடப்படுமாறு அமையும் சித்திகரமான கேள்விதாரரால் இரு வாரங்களுக்குள் பாதுகாப்பு பிணைமுறித் தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்.

| வார சந்தையின் பெயர் | குறைந்தபட்ச கேள்வித் தொகை (ரூ) | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (ரூ) | மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை (ரூ) |
|---|---|---|---|
| மயுரபுர வாரசந்தை | 23,000,000.00 | 5,000.00 | 75,000.00 |
| பந்தகிரிய வாரசந்தை | 251,230.00 | 1,000.00 | 5,000.00 |
| சிரியாகம வாரசந்தை | 129,000.00 | 1,000.00 | 5,000.00 |

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இல: 047-2258098/ 047-2258099

**ஜீ.என்.எஸ். டி சில்வா**
**செயலாளர்,**
**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை**

**2023 ஒகஸ்ட் 14ம் திகதி**
**ஹம்பாந்தோட்டை பிரதேச சபை அலுவலகத்தில்.**

# விலை கோரலுக்கான அழைப்பு

## மேல் மாகாண சபை – பொறியியல் பணியகம்

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் / பணிப்பாளர் (கட்டிடங்கள்) பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும். 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/PU/CON/23/316 | மே.மா/ஹோ/ஹோமாகம ஜனாதிபதி கல்லூரியின் 90'x25' மூன்று மாடிக் கட்டிடத்தின் கட்டமைப்பு திருத்தவேலைகள் | 21.0 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 5,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 132,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 265,000.00 | வழங்குதல்:<br>பிரதேச பொறியியலாளர்,<br>பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹோமாகம,<br>நீதிமன்ற வீதி, ஹோமாகம.<br>தொலைபேசி 011-855719 | சமர்ப்பித்தல்:<br>பணிப்பாளர் (கட்டடங்கள்),<br>பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம்,<br>இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,<br>பத்தரமுல்ல.<br>தொ.பே. **011-2092504** |
| 2 | WP/PU/CON/23/317 | கமத்தொழில் திணைக்களத்தில் (மே.மா) உள்ள கமநல தொழில்நுட்பவியல் பூங்காவிற்கான உத்தேச ஒற்றை மாடி அலுவலகக் கட்டிடம் | 10.2 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 62,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 124,000.00 | | |
| 3 | WP/PU/CON/23/318 | ஹோமாகம ஆதார வைத்தியசாலையின் OPD, சிகிச்சையகம் மற்றும் FMC மருந்தகத்தின் புதுப்பித்தல் வேலைகள் மற்றும் வளிச்சீராக்கம் செய்தல் | 3.1 | இல்லை | C9,C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 40,000.00 | பிரதேச பொறியியலாளர்,<br>பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹோமாகம,<br>நீதிமன்ற வீதி, ஹோமாகம.<br>தொலைபேசி 011-855719 | |
| 4 | WP/PU/CON/23/319 | ஹோமாகம, கபடாவத்த, மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்திலுள்ள 35/17, 35/18 இலக்க விடுதிகளின் திருத்தவேலைகள் | 3.5 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 18,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 36,000.00 | | |
| 5 | WP/PU/CON/23/320 | ஹோமாகம, கபடாவத்த, மாவட்ட கமத்தொழில் பயிற்சி நிலையத்திலுள்ள 35/4 இலக்க விடுதியின் திருத்தவேலைகள் | 6.5 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 39,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 78,000.00 | | |
| 6 | WP/PU/CON/23/321 | மாளிகாவத்தை மாவட்ட வைத்தியசாலையிலுள்ள DMO மற்றும் RMO விடுதிகள், எல்லைச் சுவர் மற்றும் வடிகாலமைப்பின் புதுப்பித்தல் வேலைகள் | 12.5 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 75,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 150,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம்,<br>இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10.<br>தொலைபேசி-: 011-2447773 | |
| 7 | WP/PU/CON/23/322 | மே.மா/நீர்/தூவ கனிஷ்ட வித்தியாலயம் - 70'×25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் கட்டமைப்பு திருத்தவேலைகள் | 2.8 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | நீர்கொழும்பு பிரதேச பொறியியலாளர் அலுவலகம்,<br>இல. 75, லூவிஸ் பிளேஸ், நீர்கொழும்பு,<br>தொலைபேசி-: 0312232357 | |
| 8 | WP/PU/CON/23/323 | பிட்டிபன - நீர்கொழும்பு, நீரியல் அபிவிருத்தி நிலையத்தில் லெகூன் வியூவிற்கு அருகிலுள்ள இளைப்பாறல் மற்றும் பார்வையாளர் கட்டிடத்திற்கான திருத்தங்கள் மற்றும் மேலதிக இணைப்புகள் | 5.9 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 35000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 70,000.00 | | |
| 9 | WP/PU/CON/23/324 | அம்பேபுஸ்ஸ விவசாயப் பயிற்சி நிலையத்தில் தற்போதுள்ள கோழிக் கூட்டின் புதுப்பித்தல் வேலைகள் மற்றும் 2000 எண்ணிக்கையான கோழிக் குஞ்சுகளுக்கு 3 எண்ணிக்கையான கோழிக் கூடுகளை நிர்மாணித்தல் | 9.8 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 62,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 124 ,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட. வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட. தொலைபேசி இல. 0112-296418 | |
| 10 | WP/PU/CON/23/325 | பிம்புர ஆதார வைத்தியசாலையில் எல்லைச் சுவரை அபிவிருத்தி செய்தல் | 11.9 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 74,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 148,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. ஆனந்த சிராஸ்தலாய, மத்துகம.<br>தொலைபேசி இல. 034-2243082 | |

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையின் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீசித்துப் பார்க்கலாம்.

05. மீளளிக்கப்படாத கட்டணத்தை (01ஆம் இலக்கத் திட்டத்திற்கு) 2023-08-14ஆம் திகதி முதல் 2023-09-04ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில மற்றும் (இல. 02 முதல் 10 வரை) 2023-08-14ஆம் திகதி முதல் 2023-09-05ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாண சபைக்கு செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 01ஆம் இலக்க திட்டத்திற்கு 2023-09-05ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் மற்றும் இல. 02 முதல் 10 வரையானவற்றிக்கு 2023-08-29ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.

08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பொறி. K. R. அபேசிறிவர்தன,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**2023-06-13**
**தொலைபேசி: 0112-092504**
**தொலைநகல்: 0112-092505**

# ஆட்ட நிர்ணய விவகாரத்தில் குற்றவியல் குற்றச்சாட்டை எதிர்கொள்கிறார் சச்சித்ர



இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சச்சித்ர சேனநாயக்கவிற்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டை சுமத்துமாறு விளையாட்டு அமைச்சின் சிறப்பு புலனாய்வு பிரிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது. 2019இன் 24ஆம் இலக்க விளையாட்டு சட்டத்துடன் தொடர்புபட்ட குற்றங்களை தடுக்கும் சட்டத்தின் அடிப்படையில் போதுமான ஆவணங்கள் வெளிப்பட்டிருப்பதாக அது தெரிவித்துள்ளது.

கடந்த வாரத்தில் சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் ஊழல் எதிர்ப்புப் பிரிவு பொது முகாமையாளர் அலெக்ஸ் மார்ஷல் உள்ளூர் கிரிக்கெட் அதிகாரிகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்திய நிலையிலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

டி20 உலகக் கிண்ணத்தை வென்ற இலங்கை அணியில் இடம்பிடித்த சுழற்பந்து வீச்சாளரான சச்சித்ர சேனநாயக்க 2020இல் நடைபெற்ற முதலாவது லங்கா பிரீமியர் லீக் தொடரின்போது அதில் பங்கேற்கும் இரு வீரர்களை டுபாயில் இருந்து தொலைபேசியில் அழைத்து ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுத்த முயன்றதாக குறிப்பிடப்பட்டது. அது இலங்கையில் குற்றவியல் குற்றம் ஒன்றாக உள்ளது.

இந்த குற்றச்சாட்டை மறுத்த சச்சித்ர தன் மீது அவதூறு சுமத்தப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இந்த செய்திக்கும் தமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அவர் கடுமையாக மறுத்து வருகிறார்.

இது தொடர்பில் அவர் 2020ஆம் ஆண்டு வெளியிட்ட அறிவிப்பில், தனது கிரிக்கெட் மற்றும் குடும்பத்தை அவமதிக்கும் வகையிலான இவ்வாறான குற்றச்சாட்டுகளை வெளியிட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதாக குறிப்பிட்டிருந்தார்.

எவ்வாறாயினும் சிறப்பு புலனாய்வு பிரிவில் இருந்து கிடைத்த ஆதாரங்களை ஆய்வு செய்த சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்ற உத்தரவு இன்றியே குறித்த சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரின் கைபேசியை பெறவும் தொலைபேசி சேவை வழங்குநரிடம் இருந்து நேரடியாக தொலைபேசி அழைப்பு விபரத்தை பெறவும் அதிகாரம் இருப்பதாக அறிவுறுத்தியது.

இதில் சேனநாயக்க தனது இரு கைபேசிகளை விசாரணையாளர்களிடம் கையளித்தபோதிலும் அவை அவருக்கு சொந்தமானவை அல்ல என்பது கண்டறியப்பட்டது. அவர் தனது சொந்த கைபேசியை சமர்ப்பிக்காமல் புலனாய்வாளர்களை தவறாக வழிநடத்திய நிலையில், குறித்த வீரர்களுடன் அவர் உரையாடியதற்கான ஆதாரங்கள் ஐ.சி.சியின் ஊழல் எதிர்ப்பு பிரிவிடம் உள்ளது என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்ளூர் விசாரணையாளர்கள் தவிர, ஐசிசியின் ஊழல் எதிர்ப்பு பிரிவும் இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஊழல் குற்றச்சாட்டில் தான் கைது செய்யப்படுவதை தடுப்பதற்கு சச்சித்ர சேனநாயக்க கடந்த 2022 மார்ச் மாதம் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திடம் முன்பிணை கோரியபோதும் நீதிமன்றம் அதை நிராகரித்தது.

2019இன் விளையாட்டு தொடர்பான குற்றங்களை தடுக்கும் சட்டத்தில் விளையாட்டு ஊழல் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றாகும். இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டதில் இருந்து அதன் கீழ் இதுவே முதல் வழக்காக இடம்பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதில் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சச்சித்ர சேனநாயக்க 100 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு மேற்படாத அபராதம் அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது சிறை மற்றும் அபராதம் ஆகிய இரு தண்டனைகளுக்கும் முகம்கொடுக்க வேண்டி ஏற்படும்.

38 வயதான சச்சித்ர இலங்கை அணிக்காக 73 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் 78 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக 2013–2014 பருவத்தில் அவர் ஆடிய ஒரே ஒரு டெஸ்ட் போட்டியில் ஒரு விக்கெட்டை கூட பெற தவறினார்.

ஒருசில ஆண்டுகளுக்கு முன் ஆட்ட நிர்ணய குற்றச்சாட்டுகள் இலங்கையில் பரவலாக இருந்ததோடு ஒரு சந்தர்ப்பத்தில் சுமார் 22 சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றன. எவ்வாறாயினும் சில முன்னணி கிரிக்கெட் வீரர்கள் மீது தடை விதிக்கப்பட்டதை அடுத்து வீரர்களின் நடத்தையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கு இடமான செயல்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் அளிப்பதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த விசாரணைகள் வளர்ந்து வரும் அச்சுறுத்தலைச் சமாளிக்க கடுமையான சட்டங்களை அறிமுகப்படுத்த விளையாட்டு அமைச்சை கட்டாயப்படுத்தியது. விளையாட்டு தொடர்பான ஊழல் தொடர்பில் சட்டத்தை இயற்றிய முதல் தெற்காசிய நாடாக இலங்கை உள்ளது.

## மாகாண சம்பியனானது கண்டி கழுகமுவ மத்தி



அக்குறணை குறூப் நிருபர்

இலங்கை பாடசாலை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் 18 வயதுக்குட்பட்ட போட்டிப் பிரிவில் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த கெலிஓய–கழுகமுவ மத்திய கல்லூரி அணி மத்திய மாகாண சாம்பியனானது. கம்பளை ஸாஹிரா கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கொட்டகலை தமிழ் வித்தியாலய அணியை 5–4 என்ற கோல் அடிப்படையில் கெலிஓய–கழுகமுவ மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

இதே பாடசாலையைச் சேர்ந்த 16 வயதுக்குட்பட்ட அணி கண்டி திருத்துவக் கல்லூரியுடன் இறுதிப் போட்டியில் விளையாடி சம்பியனானது. எனவே இவ்விரு அணிகளும் அகில இலங்கை ரீதியில் போட்டியிட தகுதிபெற்றன.

## பாம்பிடம் தப்பிய இசுரு



லங்கா பிரீமியர் லீக் போட்டிகளின்போது பாம்பு மைதானத்தை ஆக்கிரமிப்பது தொடர்ச்சியாக நிகழும் சம்பவமாக மாறியுள்ளது. கடந்த பல போட்டிகளிலும் போட்டி நேரத்தில் மைதானத்திற்கு பாம்பு வந்ததை காண முடிந்தது.

இவ்வாறான ஒரு சம்பவம் கடந்த சனிக்கிழமை (12) நடைபெற்ற போட்டியிலும் இடம்பெற்றுள்ளது. இலங்கை கிரிக்கெட் வீரரான இசுர உதான களத்தடுப்பில் அவதானம் செலுத்தி இருந்தபோது பாம்பு ஒன்றை மிதிப்பது நூலிழையில் தவிர்க்கப்பட்டது.

கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் பி லவ் கண்டி மற்றும் ஜப்னா கிங்ஸ் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற போட்டியின்போது இந்த சம்பவம் நிகழ்ந்தது.

முன்னதாக கோல் டைடன்ஸ் மற்றும் தம்புள்ள அவுரா அணிகளுக்கு இடையே கொழும்பில் நடைபெற்ற போட்டியின்போதும் பாம்பு வந்ததால் ஆட்டம் சிறிது நேரம் தடைப்பட்டது.

## சம்பியனானது லயன்ஸ்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழகத்தின் எச்.பி.எல் பிரீமியர் லீக் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஹைலண்ட் லயன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. அனுசரணையுடன் ஆலம்குளம் றஹ்மானியா வித்தியாலய மைதானத்தில் கழத்தின் செயலாளர் யூ.எல். ஹம்மாது தலைமையில் நேற்று முன்தினம் (12) நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஹைலண்ட் லெஜன்ஸ் அணியை 4–2 என்ற கோல்கள் அடிப்படையில் லயன்ஸ் அணியினர் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்த ராஜபக்ஷ சவால் சம்பியன்ஷிப் கிரிக்கெட் சுற்றுப்போட்டி



மஹிந்த ராஜபக்ஷ சவால் சம்பியன்ஷிப் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் (12) நுவரெலியா மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பிரதமருமான பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இவ்வருடம் இடம்பெற்றது.

மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மான உள்ளிட்டோர் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த போட்டியில் பங்குபற்றுவதற்காக கலந்துகொண்டனர்.

இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் இரண்டு போட்டிகள் இடம்பெற்றதுடன் இரண்டு போட்டிகளிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணி வெற்றிபெற்றது.

போட்டியின் நாயகனாக பாராளுமன்ற உறுப்பினர் கயாஷானும், சிறந்த விக்கெட் காப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்கவும், சிறந்த துடுப்பாட்ட வீரராக பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரசிங்கவும், சிறந்த பந்துவீச்சாளராக பிரேமலால் ஜயசேகரவும் தெரிவுசெய்யப்பட்டனர்.



## மஸ்க் – ஸக்கர்பேர்க் இடையே குண்டுச் சண்டை இத்தாலியில்



மெடா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் ஸக்கர்பர்குடன் கூண்டுச் சண்டை இத்தாலியில் நடைபெறும் என்று எக்ஸ் சமூக ஊடகத்தின் நிறுவனர் இலோன் மஸ்க் கூறியுள்ளார்.

இருவரும் கூண்டுச் சண்டையில் ஈடுபடுவதைப் பற்றிப் பல நாட்களாகத் தகவல்கள் வருகின்றன. எனினும் அதிகாரபூர்வத் தகவல் ஏதும் வெளியிடப்படவில்லை.

இத்தாலியின் பிரதமர், கலாசார அமைச்சர் ஆகியோருடன் பேசியிருப்பதாகக் கூறிய மஸ்க், சண்டை போடுவதற்குச் சிறந்த இடத்திற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாக கூறினார்.

'பெரிய அறநிறுவன நிகழ்ச்சி'யை ஏற்பாடு செய்வதற்குப் பேச்சுவார்த்தை தொடர்வதை இத்தாலியின் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

மஸ்க் சவால் விடுத்ததிலிருந்து அவருடன் சண்டையிடுவதற்குத் தயாராய் இருப்பதாக தற்காப்புக் கலையில் ஆர்வமுள்ள ஸக்கர்பர்க் த்ரீட்ஸில் கூறினார்.

'மஸ்க் உண்மையில் திகதியை உறுதிசெய்தால் நான் அதைப் பற்றி அறிவிப்பேன். அதுவரை அவர் என்ன சொன்னாலும் நான் இன்னும் இணக்கம் கூறவில்லை என்று எண்ணுங்கள்,' என்று ஸக்கர்பர்க் குறிப்பிட்டார்.

மெடா நிறுவனம் ட்விட்டர் தளத்தைப் போன்ற த்ரீட்ஸ் செயலியை அறிமுகம் செய்ததிலிருந்து ஸக்கர்பர்கிற்கும் மஸ்கிற்கும் இடையில் வணிகப் போட்டி சூடு பிடித்துள்ளது.

52 வயதான மஸ்க் மற்றும் 39 வயதான ஸக்கர்பர்க் இருவரும் உலகின் முன்னணி செல்வந்தர்களாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

## பாகிஸ்தானின் இடைக்கால பிரதமராக கக்கர் நியமனம்



பாகிஸ்தானின் செனட்டர் அன்வார் உல் ஹக் கக்கர் நாட்டின் இடைக்காலப் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதை அடுத்து தேர்தல் முடியும்வரை நாட்டின் பொறுப்புகளை அவர் பார்த்துக்கொள்வார்.

கக்கர் பாகிஸ்தானில் மிகக் குறைவான மக்கள்தொகையைக் கொண்ட பலுசிஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவராவார். அதன் அடிப்படையில் அவர் தெரிவு செய்யப்பட்டதாக பிரதமர் பதவியிலிருந்து விலகிய ஷெபாஸ் ஷரிப் கூறினார்.

பாகிஸ்தானின் ஜனாதிபதி அந்த முடிவை ஏற்றுக்கொண்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 90 நாட்களுக்குள் பொதுத் தேர்தல் நடைபெற்றாக வேண்டும். ஆனால் அது தள்ளிப்போகக்கூடும் என்ற அக்கறை எழுந்துள்ளது. அண்மைய மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் எல்லைகள் மீண்டும் வரையறுக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. அதற்குப் பல மாதங்களாகக்கூடும்.

எனவே தேர்தல் இந்த ஆண்டுக்குள் நடப்பதற்கான சாத்தியம் மிகக் குறைவு என்று ஷரிப் குறிப்பிட்டார்.

எனினும் கடந்த வாரம் ஊழல் குற்றச்சாட்டில் குற்றங்காணப்பட்டு கடந்த வாரம் மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிர்வரும் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் தான் எந்த தவறும் செய்யவில்லை என்று மறுத்து வருகிறார்.

2022 இடம்பெற்ற நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் இம்ரான் கான் அரசு பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் நாட்டில் அரசியல் பதற்றம் நீடிக்கும் நிலையிலேயே இடைக்கால அரசு ஒன்று பதவி ஏற்றுள்ளது. அதேபோன்று பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருப்பதோடு பாதுகாப்பு பிரச்சினைக்கும் முகம்கொடுத்துள்ளது.

## அமெ. பயணம்: தாய்வானுக்கு சீனா எச்சரிக்கை



தாய்வான் துணை ஜனாதிபதி வில்லியம் லாய் குறுகிய காலத்திற்கு அமெரிக்க விஜயம் மேற்கொண்டதை அடுத்து நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்கு உறுதியான மற்றும் வலிமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சீனா உறுதி அளித்துள்ளது.

லாய் பரகுவே செல்லும் வழியில் நியூயோர்க்கில் தரையிறங்கிய சில மணி நேரங்களின் பின்னரே சீனா இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

தாய்வானை தனது ஆட்புலத்தின் அங்கமாக சீனா கருதுவதோடு லாய்யின் பயணத்தை கண்டித்துள்ளது. தாய்வான் சுதந்திர பிரிவினைவாதிகளின் எந்த வகையிலான அமெரிக்க பயணத்தையும் சீனா எதிர்க்கிறது என்று சீன வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

'லாய் தாய்வான் சுதந்திரத்தின் பிரிவினைவாத நிலைப்பாட்டை பிடிவாதமாக கடைப்பிடிப்பதோடு ஒரு பிரச்சினையை உருவாக்குபவராக உள்ளார்' என்று சீனாவின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 14ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## தங்கக் கடன் பகிரங்க விற்பனை/ஏலம்

ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தங்கக் கடன் மையங்களில் 30.06.2023 வரையிலான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், இது வரை மீட்டெடுக்கப்படவில்லை, 31.08.2023 அன்று விற்கப்படும்.

**தங்க கடன் நிலையங்கள்**

Arij City, சிலாபம், கம்பஹா, ஹட்டன், ஹோமாகம, கல்முனை, கண்டி, களனி, குளியாப்பிட்டிய, குருநாகல், மாத்தறை Metro, நீர்கொழும்பு, நுவரெலியா, வென்னப்புவ

**திகதி, நேரம் மற்றும் விற்பனை நடைபெறும் இடம்**

திகதியும் நேரமும் : **31.08.2023 மு.ப 10.00 மணிக்கு**
இடம் : **ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்**
**இல.453/1, கண்டி வீதி, தலுகம, களனி.**

பங்கேற்கும் அனைவரும் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தரவாத வைப்புத் தொகையை கொண்டு வர வேண்டும். ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்கும் உரிமையை கொண்டுள்ளது.

**ரிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிட்டெட்**
தொலைபேசி: 0714 368 997 / 0711 692 272

## கூட்டிணைவை நிறைவு செய்வது தொடர்பான பொது அறிவித்தல்

2007 இன் 07ஆம் இலக்க நிறுவன சட்டத்தின் 244 (3) பிரிவின் பிரகாரம் ரஷ் ப்ரொபட்டி டிவலொப்மென்ட் (பிரைவட்) லிமிடெட் (PV 9231) மற்றும் R L G ஹோம்ஸ் (பிரைவட்) லிமிடெட் (PV 88431) ரஷ் ஹவுசிங் (பிரைவட்) லிமிடெட் உடன் அந்த சட்டத்தின் 242 (1) பிரிவின் கீழ் கூட்டிணைவு நிறைவு செய்யப்பட்டது என்பதையும் அது தொடர்பான கூட்டிணைவு சான்றிதழ் நிறுவன பதிவாளர் நாயகத்தினால் 2007 இன் 07ஆம் இலக்கம் கொண்ட நிறுவன சட்டத்தின் 244 (1) பிரிவின் கீழ் 2023 ஜூன் மாதம் 29ஆம் திகதி வெளியிடப்பட்டது என்றும் இத்தால் அறியத்தரப்படுகிறது.

**கூட்டிணைவின் பின் நிறுவனத்தின் விபரம்:**
பெயர் : ரஷ் ஹவுசிங் (பிரைவட்) லிமிடெட்
பதிவு இலக்கம் : PV 110776
முகவரி : இல. 31, மெல்பேர்ன் மாவத்தை, கொழும்பு 04
கூட்டிணைவு திகதி : 2023 ஜூன் 15

சபையின் ஆணைப்படி,
ரஷ் ஹவுசிங் (பிரைவட்) லிமிடெட்
எஸ்ஜே கோபரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட்
செயலாளர்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிற்கு நடமாடும் வேலைத்தளமாக 08 எண்ணிக்கையிலான புத்தம் புதிய "Panel VAN" களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் சீரமைத்தல்**

**(ஒப்பந்த இல: BES/PG/KOFIH/2023/03)**

1. சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவிற்கு நடமாடும் வேலைத்தளமாக 08 எண்ணிக்கையிலான புத்தம் புதிய 'Panel Van' களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் சீரமைப்பதற்காக தகைமையும் தகுதியும் உடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, சுகாதார அமைச்சு, செயலாளரின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழு 'C1' தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கீழே தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரிசீலிக்கலாம் அத்துடன் சுகாதார அமைச்சில் மேலதிக செயலாளர் (பெறுகை) இடமிருந்து அல்லது தொ.பே. +94112112713 ஊடாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
4. இப் பெறுகையில் கலந்து கொள்வதற்கு தகைமை பெறுவோரான இலங்கை சந்தைக்கு வாகனங்களை வழங்கும் உற்பத்தியாளர்கள் அல்லது மொத்த பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதிகள்/ அங்கீகரிக்கப்பட்ட முகவரிகளுக்கு மாத்திரம் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். இலங்கையில் மொத்த பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதிகள்/ அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அல்லாத வெளிநாட்டு முதன்மையானவர்களிடமிருந்து விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.
5. ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 25,000.00 ஐ செலுத்துவதன் பேரில் கீழேயுள்ள முகவரிக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் 2023.09.04 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை வேலை நாட்களில் கீழே தரப்பட்டுள்ள முகவரியில் உள்ள சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பெறுகை) இடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் 2023.09.05 மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்பு கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுக்கள் விநியோகிக்கப்பட வேண்டும். எல்லா விலைமனுவுடலும் 119 நாட்கள் ஓர் செல்லுபடியாகும் காலத்தைக் கொண்ட இ. ரூபா. 2,000,000.00 தொகையில் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் ஓர் வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் ஓர் விலைமனுப் பிணையை இணைத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே தரப்பட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் விலைமனுதாரர்களின அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் கிடைக்கப்பெறுவதற்காக தீர்மானிக்கப்பட்ட தினத்தில் இருந்து அல்லது நீடிக்கப்படும் எந்தக் காலத்திலிருந்தும் 91 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். அத்துடன் அது நம்மீது பிணைக்கப்பட்டிருக்கும் மற்றும் அந்தக் காலக்கெடு முடிவடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

மேலே சொல்லப்பட்ட முகவரியானது

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு 'C1'**
**சுகாதார அமைச்சு,**
**பெறுகைக் கிளை, 2ம் மாடி, 'மெடிஹவுஸ் கட்டிடம்'**
**இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு-10**

---

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

**நீர்வளங்கள் சபை**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**1) இரத்மலானை இயந்திர வேலைத்தளத்தில் மின்சார அமைப்பை பழுதுபார்த்தல் (Main panel board & bulk power supply)**

**விலைமனு இல : WRB/SDT/2023/10**
**விலைமனு திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் : 2023.08.28 பி.ப.3.00**

1. மேற்படி சேவைக்காக தகைமையும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை நீர்வளங்கள் சபையின் பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்
2. 2023 ஓகஸ்ட் 14 முதல் 2023 ஓகஸ்ட் 28 இற்கிடையில் மு.ப.9.30 முதல் பி.ப.3.00 வரை ஒவ்வொரு விலைமனுவுக்கும் ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.2,000.00 (SSL மற்றும் VAT தவிர்த்து) செலுத்துவதன் பேரில் மற்றும் ராஜகிரிய, கொஸ்வத்த, நாவல வீதி, இல.488A, நீர் வளங்கள் சபை தலைவருக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு முன்பு கீழேயுள்ள முகவரிக்கு விநியோகிக்கப்படல் வேண்டும்.
4. குறித்த நேரத்தில் மேற்படி முகவரியில் தனிப்பட்ட முறையில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நீர் வளங்கள் சபை,**
**இல.488A, நாவல வீதி, கொஸ்வத்த,**
**ராஜகிரிய**
**தொ.பேசி : 011 - 3054178**

## இரத்தினபுரி மாவட்டத்தின் இம்புல்பெ பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத்தவறணைகளை விற்றல் 2024 ம் ஆண்டு பின்னவல இல 02 கள்ளுத்தவறணை

மேற்படி கள்ளுத்தவறணையை 2023 செப்டம்பர் 14ம் திகதி மு.ப.10.30 இற்கு இம்புல்பெ பிரதேச செயலகத்தில், கேள்வி மூலம் விற்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

02. மேலதிக விபரங்களை 2023 ஓகஸ்ட் 04ம் திகதி இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**டி.பீ.ஜீ. ரேணுகா**
**பிரதேச செயலாளர்**
**இம்புல்பெ**

**2023.08.08**
**இம்புல்பே பிரதேச செயலகத்தில்**

---

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

DNCWS

## கேள்வி மனுக்கோரல்

திணைக்கள குழுவின கொள்முதல் தலைவரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் | தகைமைகள் | மீளளிக்கப்படாத கட்டணம் LKR | மனு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு LKR | மனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| Supply & Delivery of PVC Pipes, Fittings & Specials to Kalutra, Matara, & Badulla District CBOs Contract No: DNCWS/PRO/2023/PVC/02 | PVC Pipes & Fittings Manufactures / Suppliers | 20,000.00 | 91 | 900,000.00 | 119 | 05.09.2023 10.00 a.m. |
| Supply & Delivery of GI & DI Pipes, Fittings & Specials to Badulla, Kalutara, & Vavuniya District CBOs Contract No: DNCWS/PRO/2023/GI/02 | GI Pipes & Fittings Suppliers | 1,500.00 | 77 | 100,000.00 | 105 | 29.08.2023 10.00 a.m. |
| Supply, Delivery, Install & Commission of Water Pumps & Accessories to Kalutara, Anuradhapura, Batticaloa, ,Matara, Kurunegala, Mannar, Mullaitheevu, Nuwara Eliya, & Polonnaruwa District CBOs Contract No: DNCWS/ PRO/2023/PUMP/02 | Pumps & Accessories Suppliers | 15,000.00 | 91 | 600,000.00 | 119 | 05.09.2023 10.00 a.m. |
| Supply & Delivery of Water Meters to Kalutra, Kandy, Matara & Vavuniya District CBOs Contract No: DNCWS/PRO/2023/WM/02 | Water Meter Suppliers | 5,000.00 | 77 | 150,000.00 | 105 | 29.08.2023 10.00 a.m. |
| Civil Works at Kandy District, Doluwa, Godawela, Diyatha CBO Contract No: DNCWS/PRO/2023/CV/KA/01 | CTAD Grade C7/C8/C9 | 1,500.00 | 63 | 45,000.00 | 91 | 29.08.2023 10.00 a.m. |

பொதுப் பணிகள் மற்றும் குழாய் பதிக்கும் பணிகளுக்கு, ICTAD தரநிலைகள் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் எனக் கருதப்படுகின்றன.

**மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

01. கோள்விப்பத்திரங்களை **கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை மற்றும் மீள்சிசெலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2வது மாடியில் உள்ள கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்து மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம் (மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள கொள்முதல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்)
02. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் சாதாரண வேலை நேரத்தில் ஆவணங்களை வழங்கும் இடத்தில் **மனு ஆவணங்களை** இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.
03. கேள்வி மனுக்களை திணைக்களத்தின் 2வது மாடியில் **(கொள்முதல் பிரிவில்)** வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் இடல் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு **பதிவுதபால் மூலமாக அல்லது விரைதூதர் மூலமாக** அனுப்பிவைக்க வேண்டும்.
04. மேலதிக தகவலுக்கு, பணிப்பாளரை **(கொள்முதல்)** தொடர்பு கொள்ளவும் - **தொலைபேசி 011 2 774927**
05. கேள்வி மனுக்கள் கேள்வி மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியில் **2023.08.29** ஆம் திகதி **மு.ப.10.15** மணி மற்றும் **2023.09.05** ஆம் திகதி **மு.ப.10.15** மணிக்கு மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் ஏலதாரரின் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.
06. **மனுப் பாதுகாப்பு** பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடைக்கு முகவரியிடப்படல் வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகை குழு,
தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,
இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.
**2023.08.14**

---

# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட அச்சகதாரர்களிடமிருந்து முத்திரையிட்ட விலை கூறல்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திர இல | P/PROC/2023/165 |
| பண்டம் / சேவைகள் விபரம் | இலங்கை வங்கி நாட்குறிப்பேடுகளை (டயரிகள்) மற்றும் குறிப்பேடுகளை -2024 அச்சிட்டு வழங்கல்<br>▸ முகாமைத்துவ நாட்குறிப்பேடுகள் - 15,000<br>▸ நடுத்தர நாட்குறிப்பேடுகள் (1) - 50,000<br>▸ குறிப்பேடுகள் - 47,500<br>▸ விசேட (நிறைவேற்று) நாட்குறிப்பேடுகள் - 500 |
| மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | ரூபா.14,750/= (வரிகளுடன்) |
| சமர்ப்பிக்கப்படவேண்டிய ஏலமுறியின் பெறுமதி | ரூபா.500,000/= |
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் இறுதித் திகதியும் நேரமும் | 2023.09.01 1500 மணி வரை |
| ஏலவிலை கூறல் ஆவணத் தொகுதியை விநியோகிக்கும் நேரம் | 0900 மணி முதல் 1500 மணி வரை |
| ஏலவிலை கூறல் முடிவடையும் திகதியும் நேரமும் | 2023.09.04 1000 மணி வரை |
| ஏலவிலை கூறல்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் | 2023.09.04 1000 மணிக்கு ஏலவிலை கூறல்கள் மூடப்பட்டவுடன் திறக்கப்படும் |
| முன்கூட்டிய விலைகூறல் கூட்டம் | 2023.08.22ஆம் திகதி 1100 மணிக்கு இலங்கை வங்கித் தலைமையகம் |

1. **ஏல விலைகூறல் மதிப்பீட்டிற்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு விலைகூறுவோர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.**
   i) இலங்கையில் நாட்குறிப்பேடுகளை அச்சிட்டு வழங்குவதில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ii) இலங்கையில் உள்ள அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றிற்கு / நிறுவனங்களுக்கு ஒரே தடவையில் குறைந்தபட்சம் 10,000 நாட்குறிப்பேடுகளை வழங்கி இருப்பதுடன் கடந்த 05 வருடங்களுக்குள் இரு வெவ்வேறு வருடங்களில் வருடாந்தம் 40,000 நாட்குறிப்பேடுகளை வழங்கியிருத்தல் வேண்டும்
2. விலைகூறல் ஆவணத்தொகுதியை திருப்பிச் செலுத்தாக் கட்டணம் ரூபா.14,750/- (வரி உள்ளடங்கலாக) மாத்திரம் செலுத்தி எவையேனும் வேலை நாட்களில் 0900 மணி முதல் 1500 மணிவரை இலங்கை வங்கி 14ஆம் தளம், சொத்துக்களும் சேகரிப்பும் பிரிவில் கொள்வனவு செய்யலாம்.
3. பூரணப்படுத்தப்பட்ட விலைகூறல் ஆவணங்களுடன் (இலங்கை வங்கி தவிர்ந்த) இலங்கை வங்கியால் ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றொரு உரிமம் பெற்ற வங்கியிடமிருந்து ஐந்நூறாயிரம் (500,000.00) ரூபாய் தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொண்டதும் 2024.01.01 வரை செல்லுபடியானதுமான வங்கி உத்தரவாதத்தின் வடிவிலான (நிபந்தனைகளற்றது, மாறாதது, கேள்வியின் போதானது) விலைகூறல் பிணையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வங்கி உத்தரவாதத்திற்குப் பதிலாக பண வைப்புகளும் ஏற்றுக்கொள்ளப்படும். ஏலவிலை கூறுபவரால் வரையப்பட்ட காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
4. PCA 3 படிவமானது ஏலவிலை கூறலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
5. இலங்கை வங்கி, எவ்விதக் காரணங்களையும் குறிப்பிடாது எந்தவொரு அல்லது எல்லா கேள்விப்பத்திரங்களையும் நிராகரிக்கும் அல்லது கேள்விப்பத்திரமொன்றின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும், உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.
6. மேலதிக விபரங்களை சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கித் தலைமை அலுவலகம்
இலங்கை வங்கிச் சதுக்கம்
இல. 01. இலங்கை வங்கி மாவத்தை
கொழும்பு 01.
தொலைபேசி : 2544310, 2204260, 2204270

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

## இலங்கை சனநாயக, சோஷலிச குடியரசு அரசாங்கம்
## சுகாதார அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைப்பு

| | |
|---|---|
| திகதி: | 2023-08-14 |
| கடன்/மானிய இல. மற்றும் தலைப்பு | கடன் இல. 3727 SRI - சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | HSEP/PIU/CP/W-14/03/ RB-2/2022<br>சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் (HSEP) கீழ் நுவரெலியா மாவட்டத்தில் 2 எண்ணிக்கையான PMCU/DH என்பவற்றின் புதுப்பித்தல் நிர்மாணங்கள் |
| தொகுதிகள் (Lots) | LOT A. அக்கரபத்தன DHC<br>LOTB. பொகவந்தலாவDHB |
| விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் | 2023-09-12 |

1. சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கிரயச் செலவிற்காக இலங்கை சனநாயக, சோஷலிச குடியரசு அரசாங்கமானது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) நிதியுதவியைப் பெற்றுள்ளது. இந்நிதியின் ஒரு பகுதியானது மேலே குறிப்பிட்டுள்ள ஒப்பந்த கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் தகுதியுள்ள அங்கத்துவ நாடுகளும் இவ்விலைமனுக்கோரலில் பங்குபெற்றலாம்.
2. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள மாவட்ட வைத்தியசாலைகளுக்கு வசதிகளை மேம்படுத்தல் உட்பட நிர்மாணங்கள் மற்றும் பூர்த்தியாக்கல் போன்ற வேலைகளுக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை சுகாதார அமைச்சின் செயலாளர் அலுவலகத்தின் கீழ் (வேலை கொள்வோர்), கொழும்பு-08, இல. 3/19, கின்சி வீதி, சுகாதார முறைமைகளை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின், செயற்றிட்டப் பணிப்பாளர் அழைக்கின்றார்.

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் |
|---|---|
| LOT A | அக்கரபத்தன DHC |
| LOT B | பொகவந்தலாவ DHB |

3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெறுகை வழிகாட்டிகளுக்கமைவாக ஒரு கடித உறையுடன் ஒற்றைக் கட்ட செயல்முறைக்கமைய திறந்த போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ள தகுதி வாய்ந்த நாடுகளுக்கு திறக்கப்பட்டுள்ளன.
4. பின்வரும் தகைமைகளுடன் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மட்டும் இந்த விலைமனுக்கோரலில் பங்குபற்றலாம்.

அ. நிதியிடல்

(i) முன்னைய நிதியல் ஆற்றுகை –விலைமனுதாரரின் தற்போதைய நிதி நிலைமையை விபரப்படுத்துவதற்காக கடந்த ஐந்து (5) வருடங்களுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். (i) பொறுப்பு வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள் - கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் (ii) பங்குதாரர் மற்றும் தனியுரிமை - கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வரி திரும்பல் கடிதம் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் / பட்டயக் கணக்காளர்களினால் சான்றுபடுத்திய நிதி அறிக்கைகள்.

(ii) சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு – விலைமனுதாரரின் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட) ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வானது (பின்வரும் அட்டவணையைப் பார்க்க) நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது கடந்த ஐந்து (5) வருடங்களில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட மொத்தக் கொடுப்பனவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | இல. ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| LOT A | அக்கரபத்தன DHC | 136.12 |
| LOT B | பொகவந்தலாவ DHB | 132.50 |

(iii) நிதியிடல் வளம் - விலைமனுதாரர் (ஏற்புடையதாக இருந்தால் - பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள்) கீழே காட்டப்பட்டுள்ள வகையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒப்பந்தங்களின் (Lots) நிதியியல் கடப்பாட்டு பொறுப்புகள் தவிர்த்து இந்த ஒப்பந்தத்திற்கான மொத்தத் தேவைப்பாடாக அல்லது அதிகமாகக் கொண்டிருத்தல் வேண்டும். (கீழே காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகள் ஒவ்வொரு தொகுதிக்கும் வெவ்வேறாக பிரயோகிக்கப்படும்)

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | இல. ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| LOT A | அக்கரபத்தன DHC | 19.57 |
| LOT B | பொகவந்தலாவ DHB | 19.05 |

ஆ. அனுபவம்

(i) இதனையொத்த தன்மை மற்றும் அளவுடனான ஒப்பந்தங்கள் - விலைமனுதாரர் (பங்குதாரர்கள் மற்றும் இணை நிறுவனங்கள் உட்பட – ஏற்புடையதானால்) இதனையொத்த உத்தேச வேலைகளில் கடந்த 5 வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமான அளவில் ஒப்பந்தக்காரராக அல்லது இணை பங்குதாரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக ஆகக்குறைந்தது ஒரு ஒப்பந்தத்தையாவது சித்திகரமான முறையில் பங்குபற்றி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழும் பங்குதாரரின் பங்கேற்பு மதிப்பு அதிகமாகவிருத்தல் வேண்டும்.

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | இல. ரூபா (மில்லியன்) |
|---|---|---|
| LOT A | அக்கரபத்தன DHC | 54.45 |
| LOT B | பொகவந்தலாவ DHB | 53.00 |

(ii) ஒரு விலைமனுதாரர் பல வெற்றிகரமான (குறைந்த மதிப்பீடு செய்யப்பட்ட கணிசமான பதில்களைப் பெறும்) விலைக்கோரல்களைச் சமர்ப்பித்தால், விலைமனுதாரரின் திறன் மதிப்பீட்டுக் கொள்ளளவை மதிப்பீடு செய்வதற்கு பின்வரும் தேவைப்பாடுகளை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

- சராசரி வருடாந்த நிர்மாணப் புரள்வு
- நிதியியல் வளங்கள்
- ஒதுக்கப்பட வேண்டிய உபகரணங்கள்
- களமிறக்கப்பட வேண்டிய ஆளணியினர்

**முழுமையான மூலப் பிரமாணத் தகைமைகள் விலைமனு ஆவணங்களில் விபரப்படுத்தப்பட்டுள்ளன.**

5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் (மு.ப. 8.30 முதல் பி.ப. 3.00 வரை) பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**செயற்றிட்ட பொறியலாளர்,**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**இல. 106, பல்லேகம வீதி, அம்பிட்டிய, கண்டி, இலங்கை.**
**மின்னஞ்சல் : Procurement.piucp@gmail.com,**
**தொலைபேசி: 081-3154700,081-2203336 மற்றும் தொலைநகல் : 081-2203336**

6. ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்வதற்காக, தகுதியுள்ள விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றை நிறைவேற்றல் வேண்டும்.
   - DH அலகுகளின் புதுப்பித்தல் வேலைக்கு விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்குமாறு மேற்படி முகவரிக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்தல்.
   - இலங்கைப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக பின்வரும் 08ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை (இலங்கை ரூபாயில்) 2023-09-11 பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் செலுத்தல் வேண்டும்.
   - இந்தப் பணக் கொடுப்பனவை 2023-09-11ஆம் திகதி வரையில் வங்கி வரைவாக இலங்கை, அம்பிட்டிய, இல. 106, பள்ளேகம வீதி, சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் **0084189233** கணக்கிலக்கத்திற்கு அல்லது ரொக்கப் பணமாக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் செலுத்துதல் வேண்டும் அல்லது கண்டி, இலங்கை வங்கி, அதிமேற்தரக் கிளையின் **0084189233** கணக்கிலக்கத்திற்கு நேரடியாக வைப்புச் செய்தல் வேண்டும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் வேலை கொள்வோரால் 2023-08-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி, இல. 163, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, சுகாதாரத் திணைக்களம் - மத்திய மாகாணம், கூட்ட அறையில் இடம்பெறும். சகல விலைமனுதாரர்களும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு திட்டவட்டமாக அறிவுறுத்தப்படுகின்றனர்.
8. உங்கள் விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு:

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சுகாதார சேவைகள் திணைக்களம்,**
**மத்திய மாகாணம்,**
**இல. 163, சங்கராஜ மாவத்தை, கண்டி.**

எனும் முகவரிக்கு 2023-09-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்ட வங்கி உத்தரவாதத்துடன் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விலைமனுப் பிணை முறியொன்றுடன் அனுப்புதல் வேண்டும். இந்தப் பிணை முறியானது விலைமனு படிவத்தின் 4ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள வடிவில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் ''செயற்றிட்டப் பணிப்பாளர், சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்'' எனும் பெயரில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

| பொதி இல. | புதுப்பித்தல் வேலையின் பெயர் | விலைக்கோரல் பிணை முறித் தொகை (இல. ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| LOT A | அக்கரபத்தன DHC | 1,050,000.00 | 16,000.00 |
| LOT B | பொகவந்தலாவ DHB | 1,000,000.00 | 16,000.00 |

9. பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். சமுகமளித்திருக்கும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் இறுதி வேளையின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 120 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 148 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
11. விலைமனுக்களின் தயாரிப்பு அல்லது ஒப்படைப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கு மத்திய மாகாண சபையின் சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட அமுலாக்கல் பிரிவு எவ்விதத்திலும் பொறுப்பாக மாட்டாது.
12. உள்நாட்டு விலைமனுதாரர்கள் ஒப்பந்தம் கையளிக்கப்படுவதற்கு முன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

**தலைவர் / செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்டப் பெறுகைக் குழு,**
**சுகாதார முறைமையை மேம்படுத்தும் செயற்றிட்டம்,**
**இல. 3/19, கின்சி வீதி, கொழும்பு 08,**
**இலங்கை.** **2023.08.14**

---

# கேள்விக்கான அழைப்பு விடுத்தல்
## (இலங்கை அரசின் மானிய செயற்றிட்டம்)
## விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை.

பேராதனை விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்ட பயிற்சி நிலையத்தின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்களின் பெறுகைக்கான இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன. 2023.08.14 முதல் 2023.09.01 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்தி மாதிரிகள் அடங்கிய ஆவணங்களை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| கேள்வி இலக்கம் | கொள்வனவு செய்யும் வகுதி/ சேவை | கேள்வி வைப்பு | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக் கப்படாத | காசாக செலுத்துவ தாயின் | வங்கிப் பிணை முறியொன்றை சமர்ப்பிப்பதாயின் |
| செதி/ப/6/2/ 2023-107 | நெற்பயிர்ச் செய்கைக்காக பெரசூட் தட்டுக்கள் 54000 ஐ கொள்வனவு செய்தல் | ரூ. 2500.00 | ரூ. 40,500.00 | ரூ. 81,000.00 |
| செதி/ப/6/2/ 2023-109 | பிளாஸ்டிக் கேன் 3000 ஐ கொள்வனவு செய்தல் (20 லீட்டர்) | ரூ. 2500.00 | ரூ. 42,000.00 | ரூ. 84,000.00 |
| செதி/ப/6/2/ 2023-116 | உள்ளூர் கலப்பின சோளம் விதை பொறிகள் (Printed Poly Seed Packs) கொள்வனவு செய்தல் | ரூ. 2500.00 | ரூ. 29,400.00 | ரூ. 58,800.00 |

